No. 2569

17 FEB 1934

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 5 | செந்தமிழ் மாதசஞ்சிகை | இதழ் 1 & 2

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ரமலான் & ஷவ்வால் ௴
1934 ஜனவரி & பிப்ரவரி ௴

உள்ளடக்கம்.

1.	அல்குர்ஆன்	... 1
2.	அல்ஹதீது	... 2
3.	நமது ஐந்தாம் மலர்	... 4
4.	சயன்ஸ்காரர்களின் ஞானோதயம்	... 6
5.	புராதன பைபிள்	... 11
6.	சத்தியத் தூதரின் சற்குண விசேஷம்	... 12
7.	ஆண்டவனற்ற அறிவு	... 15
8.	ஹஸ்ரத் காஜாஹஸன்பஸரீ (ரஹ்.)	... 19
9.	இஸ்லாமிய பர்தா	... 23
10.	சமரஸ உடன்படிக்கை	... 30
11.	உலமாக்களுக்குச் சமர்ப்பித்த யாதாஸ்து	... 32

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

காலண்டர்கள் வரவு

R. E. முஹம்மது காஸிம் அண்டு கோ:— சிங்கப்பூர், பினங், கிள்ளான், ரங்கூன், மதராஸ், கல்கத்தா முதலிய விடங்களின் பிரபல வியாபாரியாகிய மெஸர்ஸ் R. E. முஹம்மது காஸிம் கம்பெனியாரின் காலண்டர், சென்னையிலுள்ள அவர்களது பிராஞ்சு ஆபீசிலிருந்து வரப்பெற்றோம். அது மிக்க அழகானதாயும் அதன் அட்டையில் கிள்ளானிலுள்ள அவர்களின் தலைமை ஆபீஸ் கட்டடம் துலாம்பரமாய்ப் பொறிக்கப்பட்டதாயுமிருக்கிறது.

S. E. S. அப்துல்கரீம் & பிரதர்ஸ்:— சென்னை அங்கப்ப நாய்க்கன் தெருவு, பிரபல கைலி வியாபாரியாகிய மெஸர்ஸ் S. E. S. அப்துல்கரீம் & பிரதர்ஸ் அவர்களிடமிருந்து அறபு, தமிழ், இங்கிலீஷ் ஆகிய 3 தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்ட காலண்டரொன்று வரப்பெற்றோம். அதில் அவர்களின் வியாபாரக் குறியாகிய தருக்கித்தொப்பி, டாலர், டைமன் இம்மூன்றும் அழகிய மூன்று வர்ணங்களில் பொறிக்கப்பட்டு பினங், மைடானிலுள்ள அவர்களது பிராஞ் ஏஜண்டு ஆபீஸ்களின் விலாசங்களும் குறிப்பிடப்பட்டு கண்களைக்கவரத்தக்கதாகயிருக்கிறது.

M. M. முஹியித்தின் தம்பி & Co:— சென்னை அங்கப்பநாய்க்கன் தெருவு, பிரபல தோல் வியாபாரியும்கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸர்ஸ் M. M. முஹியித்தீன் தம்பி அண்ட் கம்பெனியாரிடமிருந்து அறபு, தமிழ், இங்கிலீஷ் ஆகிய மூன்று தேதிகளில் 3 வர்ணங்களில் அச்சிடப்பட்டதாயும் மாதமொரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும், லண்டனில் நடைபெறும் ஏலத்தெய்திகள் குறிப்பிடப் பட்டதாயுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மிகஅழகாயிருக்கின்றது.

ஹாஜீ G. முஹம்மத் சயீத்:—பாண்டிச்சேரி வாசியும் ஹன்னோய், ஹைப்பாங், நம்டீன் முதலிய இடங்களில் பிரபல வியாபாரம் செய்பவரும் பாஸன்ஜர் புரோக்கருமாகிய ஹாஜீ த. கு. முஹம்மது சயீத் அவர்களிடமிருந்து 3 தேதிகளையும் அறிவிக்கக்கூடியவும், மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியவுமாகிய காலண்டர் வரப்பெற்றோம். அதில் 3 தேதிகளும் மூன்று கலர்களிலும் பல முக்கிய தினங்களைக் குறிக்கக்கூடிய பிரத்தியேக அடையாளமும் அழகானமுறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

நவீன கதா புக்டிபோ:—ரெங்கூன், மங்கமாரி வீதி நவீன கதா புஸ்தகசாலையாரிடமிருந்து ஆங்கிலம், அரப், தமிழ் ஆகிய மூன்று தேதிகளும் மூன்று வர்ணங்களில் அச்சிடப்பட்டதாயும் மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயுமுள்ள காலண்டர் வரப்பெற்றோம். அதன் தலையில் கலிமா எழுதப்பட்டதாயும், அல்லாஹ் முஹம்மத் என்று வரையப்பட்டதாயும் பார்ப்பவர்களின் மனதைக் கவரக்கூடியதாயுமிருக்கிறது.

கரீம் பீடி:—சென்னை மண்ணடியிலுள்ள கரீம் பீடி பாக்டரியிலிருந்து, அழகிய கண்களைக் கவரத்தக்க காலண்டர் வரப்பெற்றோம். அது மிகநேர்த்தியானதாயும் குணகோளார்த்தம் குட கோளார்த்தம் ஆகியவைகளின் படங்கள் பொறிக்கப்பட்டதாயும் அவர்களின் வியாபாரச் சரக்கின்மாதரி வரையப்பட்டதாயும் 3 வர்ணங்களில் அரப், இங்கிலீஷ், தமிழ் ஆகிய மூன்று தேதிகளும் அச்சிடப்பெற்றதாயும் மாதமொரு ஷீட் கிழிக்கக்கூடியதாயு மிருக்கிறது.

அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம்:—கோட்டக்குப்பம் அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம் சங்கத்தாரிடமிருந்து அழகிய காலண்டர் வரப்பெற்றோம். அது 3 தேதிகளும் மூன்று கலர்களில் அச்சிடப்பட்டு மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும் ஒவ்வொரு மாதத்திலுமுள்ள விசேஷ தினங்களைப் பிரத்தியேகமாகக் காட்டக்கூடியதாயும் அதன் தலையில் அரபியில் பிஸ்மில்லாவும், லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹ் என்று குறிப்பிடப்பட்டதாயும் இருபுறமும் அல்லாஹ் முஹம்மது என்று வட்டம் வரையப்பெற்றதாயும் கல்வியின் மேன்மை விசேஷம் இறைகளைச் சிலாகித்துக் கூறப்பட்டதாயு மிருக்கிறது.

17 FEB 1934
MADRAS
208336
சென்னை-600 008

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1352 ரமலான் & ஷவ்வால்மீ 1934 ஞு ஜனவரி & பிப்ரவரிமீ	இதழ் 1 & 2

அல்குர்ஆன்

உங்களுக்குப் பிரியமானவற்றை (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்கிறவரை (பரிபூர்ணமான) ஜெயத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டீர்கள். நீங்கள் (அவன் பாதையில்) செலவு செய்வதை நன்கறிந்திருக்கிறான்.—(அல்குர்ஆன்)

இத்திருவாக்கியத்திற்கு முன்னுள்ள ஆயத்தில், உலகின்கண் குப்பார்கள் அளவற்ற ஐசுவரியங்களை அள்ளிக் கொடுத்திருந்த போதிலும் அது மறுமை நாளில் எவ்வாறான பிரயோசனமும் தரமாட்டாது; அன்னோரின் பாவங்களுக்கு மன்னிப்பளிக்கப்படமாட்டாதெனக் கூறிவிட்டு, முஸ்லிம்களை நோக்கி "நீங்கள் பிரீதி கொள்கிற வஸ்துவை அல்லாஹ்த ஆலாவின் பாதையில் செலவு செய்யாதவரை அளவற்ற பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளமாட்டீர்களென்றும், நீங்கள் செலவிடும் விஷயத்தில் அல்லாஹ் உங்கள் எண்ணங்களை நன்கறிந்தவனாக இருக்கின்றான்" எனவும் அறிவிக்கின்றான். ஆகவே, நமக்கு அதிகப் பிரீதியாகவுள்ள வஸ்துக்களை அல்லாஹ்த ஆலாவின் பாதையில் செலவிடுவது கொண்டு அளவற்ற பாக்கியங்களை அடையப்பெறுவோமென்பது திண்ணம்.

மானிடர்களுக்கு சகல வஸ்துக்களைவிட உயர் பதவியின்மீதும் ஐசுவரியத்தின்மீதும் அதிகப் பிரீதி ஏற்படுவது அனுபவசாத்தியமான காரியமாக இருப்பதால், ஓர் உண்மை முஸ்லிம் தன் உயிரையும் ஐசுவரியங்களையும் அல்லாஹ்த ஆலாவின் பாதையில் அற்பணம் செய்து விடுவது அவனது பிரதானசேவையாகும். இதுவன்றி பிரயோசனமற்ற வேறு வஸ்துக்களை தான தருமமளிப்பது கொண்டு பரிபூர்ண பயன் கிட்டாதென்பது திண்ணம்.

இத்திருவசனம் இறங்கியவுடன் ஹஸ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள், எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின் திருசமுகம் வந்து அல்லாஹ்வின் ரசூலே! கைபரில் கிடைத்த சொத்தைத் தவிர என்னிடம் வேறு மேலான எவ்வித சொத்தும், ஐசுவரியங்களும் கிடையாது; ஆதலின் இந்நிலைமையில் யான் யாது செய்வதென வின

வினர்கள். அதற்கு உத்தம குணசீலரான நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், கைபரில் கிடைத்த தோட்டத்தை வைத்துக்கொண்டு அதிலேற்படும் கனிவர்க்கங்களை அல்லாஹ்வின் பாதையில் தானமளிக்கும்படி கூறினர்களென சஹீஹ்புகாரி முஸ்லிமில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்து இறங்கியவுடன், தங்களுக்கு அல்லாஹ்த ஆலா எந்த மேலான வஸ்துவை அளித்திருக்கின்றான்; தங்களிடமிருக்கக் கூடியவைகளிலெல்லாம் அதிகப் பிரியமான வஸ்து யாதாகும்? என ஆழ்ந்த சிந்தனை புரிந்தபின், தன்னிடமுள்ள 'பின்த்ஷரீக்' என்னும் வெள்ளாட்டி சகல வஸ்துக்களைவிட மிகப் பிரியமானவளாயிருக்கின்றாள் என்னும் விஷயம் தங்கள் மனதில் தோன்றியவுடன் அவளை உரிமைவிட்டு விடுதலை செய்துவிட்டதாக அப்துல்லாஹ்பின் உமர் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அல்லாஹ்த ஆலாவின் பாதையில் கொடுத்ததை மீட்டிக்கொள்வதற்கு சட்டம் இடங்கொடுக்குமாகில், அவ் வெள்ளாட்டியை மீட்டிக்கொள்வேன் என ஹஸ்ரத் அவர்கள் கூறி இருக்கின்றார்களென்றால், அவள்மீது ஹஸ்ரத் அவர்களுக்கிருந்த அன்பு-பிரிதியின் பான்மை இத்தகையதாகுமென்பது நன்குபுலனாகும். அவ்வாறான பிரீதியுடைய ஒரு வஸ்துவை அல்லாஹ்த ஆலாவின் பாதையில் உரிமை விட்டுவிட்டது மாபெரும் புகழுக்குறிய விஷயமல்லவா? மேலும் சையிதத்துன்னிஸா ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் கூறுவதாவது:—

இத்திரு அத்தியாயம் இறங்கிய உடன், பிரியமான ஏதாகிலும் வஸ்துவை அல்லாஹ்வின் பாதையில் தானஞ்செய்ய வேண்டுமென்று என்மனதில் தோற்றியபோதிலும், என்னிடம் யாதொரு வஸ்துவுமே இல்லாதிருந்தது; நானும் என்புருடன் குழந்தைகள் சகிதம் இரண்டுநேரமாக யாதொரு அன்ன ஆகாரமு மில்லாதிருந்து மூன்றாவதுவேளை நான்குபேருக்குச்சாப்பாடு தயார் செய்தோம்; அதுபொழுது தற்செயலாய் நான்கு பகீர்கள் வாயற்படியண்டை வந்து நின்று கொண்டு, யாங்கள் யமன் தேசவாசிகள்; காலைமுதல் பசியோடிருக்கிறோம்; எங்களின் பசியைத் தீர்ப்பதற்கு எவ்வாறான ஏற்பாடும் நடைபெறாதிருக்கிறது; ஆதலின் அல்லாஹ்வுக்காக ஏதாகிலும் சாப்பிடுவதற்கு கொடுங்கள் எனக்கேட்டார்கள். இதனை செவியுற்ற யான், இரண்டுவேளை பட்டினிக்குப்பின் எங்களுக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த சாப்பாடு முழுதையும் அந்நால்வருக்கும் கொடுத்துவிட்டு, யாங்கள் சந்தோஷமடைந்து அல்லாஹ்த ஆலாவுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தோம் என்பதே. ஆகவே சத்தியத் திருமறையின் இத்திவ்ய திருவசனம் அருளப்பட்டவுடன் உண்மை அடியார்களான மகான்கள் தங்களுக்குப் பிரியமான வஸ்துக்களை எவ்வாறு அல்லாஹ்த ஆலாவின் பாதையில் செலவிட்டிருக்கின்றார்கள் என்பதை உற்றுணர்ந்து பார்த்து அப்புண்ணிய சீலர்களான மகான்களின் அடிச்சுவற்றினைப் பின்பற்றி யொழுகுவதற்கு முற்படுவோமாக. (அல்லாஹ் அஃலம்)

அல்ஹதீது

தாய் தந்தையர்களுக்கு பணிவிடை செய்வது யுத்தஞ் செய்வதைவிட மேலானதாகும்

எமன் தேசவாசி யொருவர், எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சமுகம் வந்து, யான் யுத்தம் செய்ய நாடுகின்றேன் அனுமதி யளிக்கவேண்டுமெனக் கூறினர். இதனை செவியுற்ற பெருமானர் (ஸல்.) அவர்கள், எமனில் உமக்குப் பிரியமானவர் யாருமிருக்கின்றாரா என வினவவே, தன் தாய் தந்தையர்கள் இருப்பதாக அறிவித்தார். உடனே எம்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், அவ்விருவரும் யுத்தம் புரிவதற்கு அனுமதியளித்தார்களாவென வினவினர்கள். அதற்கவர், அனுமதி

யளிக்கவில்லை எனக் கூறவே, திரும்பிச் சென்று அன்னேருக்குப் பணிவிடை செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்கள்.

இத்திருவாக்கியத்தின் விரிவுரையில், ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள், அல்லாஹ்தஆலாவின் பாதையில் 'ஜிஹாத்' செய்வது மிகமிக மேலான வணக்கமாக இருந்தபோதிலும், தாய் தந்தையர்களுக்குத் தொண்டு புரிவது அதைவிட மேலான வணக்கமாகும் என்பது நன்கு புலனுகின்றது; இதனுல்தான் எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் சதாவும் அதனை வற்புறுத்திக்கூறி வந்திருக்கின்ருர்கள் எனத் தெளிவுபடுத்தி இருக்கின்ருர்கள்.

பெரியார்கட்குத் தோண்டு புரிவதுகோண்டு பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது

ஒரு மனிதர், சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் திருசமுகம் வந்து, யாரசூலல்லாஹ்! என்னில் நின்றும் பெரியதோர் பாவமான காரியம் நிகழ்ந்துவிட்டதாதலின் அது மன்னிக்கப்படுவதற்கு ஏதாவதுவழி இருக்கின்றதா? எனக் கேட்டார். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், உம்முடைய அன்னை இருக்கின்ருளா யென வினவியதற்கு, இல்லை என அவர் பதில் கூறவே, உம்முடைய அன்னையின் சகோதரியான 'காலா' இருக்கின்ருளாவென வினவினுர்கள். அம்மனிதர் ஆம் உண்டு எனக் கூறவே, அவளுக்குத் தொண்டுபுரியும் என கட்டளை பிறப்பித்தார்கள்.

தவறுதல் ஏற்படுவது மானிடர்களின் இயற்கையிலேயேயுள்ள ஒரு விஷயமாகும். அதற்கேற்ப அல்லாஹ்தஆலாவின் உண்மை அடியார்களினின்று ஒருக்கால் ஏதாகிலும் தவறுகள் ஏற்பட்டுவிடுமாகில் உறுதியமனத்தினர்களாய் அல்லாஹ்தஆலாவின் திருசமுகத்தில் பாவமன்னிப்புத் தேடுவதுடன் தங்கள் பெரியார்களுக்குத் தொண்டுபுரிவதிலும் ஏழையாயுள்ள சினேகிதர்களின் கஷ்டங்களை நீக்கி வைப்பதிலும் அதிகப் பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

ஈமானின் பரிபூர்ணம் எவ்வாறு ஏற்படும்?

எவன் மற்றவனேடு அல்லாஹ்வுக்காகவே சினேகம் வைக்கிருனே, இன்னும் அவனுக்காகவே கோபங்கொள்கிருனே, இன்னும் தன் ஐசுவரியங்களை அவனுடைய பாதையில் செலவிடுகின்ருனே அன்னேன் தன்ஈமானைப் பரிபூரணமாக ஆக்கிக்கொண்டானென எம்பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கின்ருர்கள்.

இந்த ஹதீதின் விரித்துரையில் ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள், மானிடன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திலும் அல்லாஹ்த ஆலாவின் பொருத்தத்தை முன்னேக்காகக் கொள்ளவேண்டுமென்றும், எவர்கள் அவ்வாறு செய்யாது காலங் கழிக்கப் பார்க்கின்றனரோ அன்னேரின் ஒவ்வொரு செயலும் பிரயோசனமளிப்பதாக ஆய்விடமாட்டாதென்றும் கூறி இருக்கின்ருர்கள். எதுவரை முஸ்லிம்களின் பிரதான காரியங்களில் தூய்மையான எண்ணம் இருந்து வந்ததோ அதுவரை முஸ்லிம்கள் கீர்த்திபெற்று சிறந்துவிளங்கினுர்கள். ஆனுல் அன்னேர் அச்சிறப்புத் தங்கிய சீதேவித்தனத்தை எதுபொழுது கைவிட்டார்களோ அதுமுதல் அவர்கள் தன்மதிப்பிழந்தவர்களாய்விட்டார்கள்.

பாவத்தின்மீது வேறுப்புக்கோள்ளுங்கள்

ஒரு இடத்தில் பாவமான ஒரு காரியம் நிகழ்பெற்று அங்கிருப்பவர்கள் அக்காரியத்தைக் கெடுதி என்று கருதுவார்களாயின், அவர்கள் அப்பாவமான காரியத்திற்கு சம்மதம் கொடுக்காதவர்கள்போலாய்விடுகின்றனர். அந்த இடத்திலில்லாதவர் அப்பாவமான விஷயத்தைக் கேட்டு சந்தோஷப்படுவாராகில் அந்தப்பாவம் நடைபெற்ற இடத்திலிருந்துகொண்டு அதற்கு சம்மதம் அளித்தவரே போலாய்விடுகின்ருர் என நபிய்ய கரீம்(ஸல்.) அவர்கள் கூறி இருக்கின்ருர்கள்.

இந்த ஹதீதின் விரித்துரையில் ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்கள், மானிடனின் நிர்ணம் பரிசுத்தமானதாக இருந்து, அவனுடைய ஹிருதயம் தூய்மை வாய்ந்ததாக இருக்குமாயின் சாலிஹான நல்ல கருமங்கள் புரிவதன்மீது முன்னேக்கேற்படுகின்றது. அதுபொழுதுதான் பாவத்தின் மீதும் வெறுப்பேற்படுகின்றது. இதற்காகத்தான் எம்பெருமானுர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள், பாவம் நிகழ்பெற்றதைத்தெரிந்து அதன்மீது வெறுப்புக்கொள்ளாதிருப்பவனை அப்பாவத்திற்கு உதவி புரிந்தவனுகக் கணக்கிடப்படுமெனக் கூறி இருக்கின்ருர்கள்.



நமது ஐந்தாம் மலர்

தற்பரனின் தண்ணருளால் நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்ற உங்களது அரும் பத்திரிகையின் ஐந்தாம் மலர் மலருகின்றது. உங்களின் இச்சஞ்சிகை எந்த நோக்கத்தின்பேரில், எந்தக் கொள்கையின் பேரில் அன்று ஏற்படுத்தப்பட்டதோ அதே நோக்கத்திற்கு, அதே கொள்கைக்கு முரணில்லா வண்ணம் இஸ்லாத்தின் பாதுகாப்புக்கான ஆக்க வேலைகளைப்பற்றிய பல அரிய விஷயங்களை உங்களுக்கு ஊக்கமாக எடுத்தோதி வந்திருக்கிறது. தொத்து நோய்களானது மானிட வர்க்கத்தின் விருத்திக்குப் பாதகத்தை விளைவிப்பதாக இருப்பதுபோன்று பித்அத், ஷிர்க் தஹ்ரியத், காதியானியத் போன்ற வழிகெட்ட கொள்கைகள் முஸ்லிம்மக்களின் ஆத்மார்த்த அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றன. மக்கள் யாவருக்கும் சகோதரத்துவத்தைப்போதித்து ஒற்றுமை என்ற கயிற்றில் பிணைத்து வைப்பதற்காகப் பாருலகிற்றோன்றிய பரந்த நோக்கமும் சிறந்த கொள்கைகளையுமுடைய இஸ்லாம் மதத்தைப் பின்பற்றித் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்ளுபவர் இக்காலத்தில் அறிந்தோ அறியாமலோ கொடிய பித்அத், ஷிர்க், தஹ்ரிய்யத், காதியானியத் முதலிய கொள்கைகளில் மாட்டிக்கொண்டு பெரும்பான்மையான முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து போகின்றனர். இத்தகையோருக்கு அவ்வழி கெட்ட தூர்க் கொள்கைகள் இன்னின்னவை என்றெடுத்துக் காட்டி, இஸ்லாம் என்ற வட்டத்தினுள் கொணர உங்கள் அருமை ஹி. இ. பத்திரிகையானது சென்ற நான்காண்டுகளாக இந்நானிலத்தின்கண் செய்த ஊழியம் உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

மார்க்க சம்பந்தமின்றி நமது முஸ்லிம் சமூகத்தைப் பொருத்தமட்டிலுள்ள ஏனைய பொதுக் காரியங்களிலும் உங்களது ஹி. இ. பத்திரிகையானது போதியஅளவு பங்கெடுத்து உழைத்து வந்திருக்கின்றது. மதுபானம், சூதாட்டம், பந்தயம் முதலியவைகளில் நம்மவர் அறியாமலீடுபட்டுத்தங்களது பணத்தையிழந்து பரதவிப்பதை நாம் யாவரும் கண்கூடாகக் காண்கிறோம். இத்தகைய தீய செய்கையை நம்மவரிடமிருந்து அகற்றத் தன்னாலியன்றவரை உங்களது ஹி.இ. முயன்றிருக்கிறது. இவ்வாறாக இச்சஞ்சிகை உழைத்து வந்திருக்கிற பல அரிய ஊழியங்களை எடுத்துக் கூறிக்கொண்டே இருந்தால் அது மிக விரிந்துகொண்டுபோவதின்றி தற்புகழ்ச்சியுமாகுமென்றஞ்சி விடுத்தனம். பொதுவாகக் கவனிக்குமிடத்து, பத்திரிகைகளினால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பல நிகழ்வதுபோல் தீமைகளும் ஏற்படுகின்றன. இப்பத்திரிகைகளின்மூலமாகமக்களுக்குள்ள குறைகள் இன்னின்னவைகளென்று அரசாங்கத்திற் கெடுத்தறிவிக்கவும், மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவேண்டிய உரிமைகள் இன்னின்னவை என்று எடுத்துக் கூறி அதை அரசாங்கத்திடமிருந்து பெற முயற்சிக்கவும், இஃதேவிதமாக அரசாங்கத்திற்கும் சமுகத்திற்கும் மக்கள் செய்யவேண்டிய கடமை யாவை எனப் பொதுஜனங்களுக்கு அறிவுறுத்தவும் பத்திரிகைகள் மூலமாக வெற்றியுடன் தொண்டு செய்வதுபோல் வேறெந்த முறையாலும் செய்ய முடியாது. அன்றியும்சத்தியத்தை எடுத்துக்கூறி அசத்தியத்தை அகற்றவும் அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்தைப்புகட்டவும், வேற்றுமையை விலக்கி ஒற்றுமையை உண்டுபண்ணவும் செய்யப்படும் முயற்சிகளிலெல்லாம் பத்திரிகைகளின் மூலமாகச் செய்யப்படும்

முயற்சியே வெகு சீக்கிரத்தில் பயன்தரு மென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

எனவே, பத்திரிகைகளானது தனது கொள்கைகளுக்கேற்ப நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து தன்னுடைய கொள்கையை விட்டு மாறுமல் செல்லுமாயின் அதனுல் சமூகத்திற்கு எவ்வளவோ நன்மையேற்படும் ஆனுல், வாயளவிலும் எழுத்தளவிலும் அதைக் கூறிக்கொண்டு குறுகிய மனப்பான்மையால் பொருமையையும் புழுக்கத்தையும் கக்கவாரம்பித்துவிடுமாயின் அதுவே விநாசத்திற்கு முதற் காரணமாகும். இன்னும் நமது சமூகத்தின் துரதிருஷ்டத்தினலோ அல்லது வேறு எக்காரணத்தினலோ நம்மவரி லேற்பட்ட பத்திரிகைகளிற் சில இத்தகைய ஒற்றுமைக்கான வழியிற் செல்லாமல் வேற்றுமைக்கான துறையிலேயே சென்று கொண்டிருக்கின்றன. இத்தகைய பத்திரிகையில் வெளி வரும் துவேஷம் நிறைந்த புழுக்கங்கொண்ட வியாசங்களேயும் தங்களுக்குத்தான் யாவும் தெரிந்துவிட்டது போல் மற்றவரை பரிகசித்தும் நகைத்தும் எழுதிவரும் வியாசங்களேயும் பார்த்தால், பத்திரிகை பார்ப்பதே கூடாது என்று பொது ஜனங்களுக்கு எடுத்துக் கூறுவது நல்லது என்றே தோன்றுகிறது.

உதாரணமாக, சென்ற 20 வருஷங்களுக்கு முன் நம்மவரிடமிருந்த மார்க்க பக்தி, சன்மார்க்கத்தைத் தழுவி நடக்கும் தன்மை, ஒற்றுமை, சகோதர வாஞ்சை இவைகளேயும் இற்றை நாளில் நம்மவரிடை காணப்படும் மேற்கண்ட தன்மைகளேயும் ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்த்தால் நம்மவர் ரத்தக்கண்ணீர் வடிக்கவேண்டியதைத் தவிர வேறில்லே. ஏனெனில், அந்நாளில் நம்மவரிடையே இருந்த தலைவர்கள் தங்களது பொறுப்பையுணர்ந்து மக்களின் நன்மைக்கோ, சன்மார்க்கத்திற்கோ முரணுனவைகளேயும் அவைகளுக்கு தீங்கை யுண்டுபண்ணக் கூடியவைகளேயும் செய்யத் துணிந்தனரில்லே. இதென்ன? அந்நாளில் நம்மவரிடம் பத்திரிகைகளும் இல்லே என்றே கூறிவிடலாம். ஆனுல், அக்காலத்திலுள்ள பெரியார்கள் மக்களின் பொதுநன்மைக்குச் சரியான முறையில் உழைக்கவில்லே என்று கூறி தங்களே தந்நலமற்றவராகவும் தியாகியாகவும் காட்டிக்கொண்டு தங்கள் பத்திரிகைகள் இஸ்லாத்திற்குழைப்பதையே முழுமுதற் கடமையாகக் கொண்டிருக்கிற தெனக் கூறும் பத்திராதிபர்கள் முளைத்த இக்காலத்தில்தான் நம்மவரிடை காதியானிய்யத், அஹ்மதிய்யத், வஹ்ஹாபிய்யத், கைரமுகல்லிதியத் முதலிய பற்பல விதண்டா வாதக் கொள்கைகளெல்லாம் புகுந்து கொண்டு நாட்டிலுள்ள வயோதிகர்கள் ஒரு நோக்கமும், வாலிபர் ஒரு நோக்கமும், தகப்பன் கருத்து ஒன்றும், தனயன் கருத்து ஒன்றும், அண்ணன் கருத்து ஒன்றும், தம்பி கருத்து ஒன்றும், குருவின் கருத்து ஒன்றும், சிஷ்யன் கருத்து ஒன்றும், உபாத்தியாயர் கருத்துஒன்றும், மாணுக்கன் கருத்து ஒன்றுமாக சிதைவு கொண்டு, ஊருகள்தோறும் நாடுகள்தோறும் ஒற்றுமையின்றி, மார்க்கப் பற்றின்றி, சகோதரவாஞ்சையின்றி கொண்டதே கோலம் கண்டதே காட்சி என்று திரிகின்றனர். கூடுகொடியேற்றம் ஷிர்க் முதலியவைகளே ஒழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். அக்காலத்தில் இந்தக்கூடு கொடியேற்றம் முதலிய பித்அத்தான காரியங்கள் இன்னதென்றே தெரியாமல் அத்திபூத்ததுபோல் எங்கேயோ ஓரிடத்தில் அவைகள் இருந்துவந்தன. அதுவும் அவ்வளவு பிரக்கியாதியின்றி சொற்பச்செலவில் நடைபெறுவனுயிருந்தன. இப்பொழுதோ அவைகள் ஒன்றுக்கு மூன்று நான்காகப்பெருகி அனுவசியமான வீண் செலவுகளிலும் ஆடம்பரங்களிலும் கொண்டுவந்துவிட்டன. இவைகளுக்கெல்லாம் பொறுப்பாளிகள் அந்தப் பத்திராசிரியர்கள்தாம் என்று கூறுவது முற்றிலும் உண்மையல்லவென்றுலும் பெரும்பாலும் உண்மை என்று தைரியமாகக் கூறலாம்.

இப்பத்திராசிரியர்கள் ஆசிரியப்பீடத்திலமர்ந்தவுடன் இவ்வுலகுக்கே இவர்கள்தாம் பெரிய 'முஜ்தஹிது' என்றும், சகல விஷயத்தையும் கசடற உணர்ந்தவர்களென்றும் எண்ணிக்கொண்டு பின் விளேயும் பயனே ஒரு சிறிதும் உணராமலும், உசிதா உசிதங்களேச் சீர்தூக்கிப் பார்க்காமலும் கையில் வந்தபடியெல்லாம் பேனவை ஓட்டிவிடுகின்றனர். இவ்வுலகமோ இறுதி நாளே நோக்கிச் சென்றுகொண்டிருப்பதால் மக்களிடை சன்மார்க்கம் பரவும் வேகத்தைப் பார்க்கிலும் துன்மார்க்கம் அதிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இவ்வித நிலேயில் தன்

னைப் பெரிய 'முஜ்தஹிது' என நினைத்துக் கொண்டு யாவரையும் அடக்கியாளக் கருதி எழுதும் பத்திராதிபரின் பேனு வேகத்தால் கெட்ட கொள்கைகளும் அனுச்சாரச் செய்கைகளும் நல்லவையேபோல் எடுத்துக் காட்டப்படுகின்றன. இதனைக் கண்ணுறும் சாமான்யரும் அதை மெய்யென நம்பிக்கை கொள்ள வாரம்பித்து விடுகின்றனர். இவ்விதமான பின் யோசனையற்ற ஆசிரியர்களாலும் மக்களுக்கு அநேகம் தீங்குகள் நேர்ந்திருக்கின்றன. எனவே, இத்தியாதி தீங்கான காரியத்திற்கு உங்களது ஹி. இ. பத்திரிகை சென்ற நான்கு ஆண்டுகளாக வயப்படாமல் இஸ்லாத்திற்கும் சமூகத்திற்கும் உழைத்து வர நல்லுதவி புரிந்த அந்த சாக்ஷாத் இரக்ஷகனுக்கு இனியில்லா வண்ணம் நன்றி செலுத்துகிறோம். இனி வரும் 5-வது மலரும் மக்களுக்கு நறுமணத்தைக் கமழச்செய்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் நலன் விளைய அந்த ரஹ்மான் நல்லுதவி புரிவானாக ஆமீன். இந்நான்காண்டுகளாக உங்களது ஹி. இ. பத்திரிகையை ஆதரித்து அதற்கு விஷய தானமும், வியாசதானமும், செல்வ தானமுமீந்த எல்லா நண்பர்களுக்கும் யாம் மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதுடன் வருகிற புது வருஷத்தில் நம் அபிமானிகளும் உதவியாளர்களும் சந்தா நேயர்களும் மற்றையோரும் சகல பாக்கியங்களையும் அடைந்து இன்புற்றிருக்கவும் உங்களது ஹி. இ. பத்திரிகையானது வாரம் ஒருமுறையாக உங்களது கைகளில் வந்துலாவவும், இனியும் மென்மேலும் இஸ்லாத்திற்கும் சமூகத்திற்கும் பல நற்றொண்டுகளைச் செய்யவும் அவ்வல்லோன் அருள் புரிவானாக.

ஆமீன் ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

சயன்ஸ்காரர்களின் ஞானோதயம்

பகுத்தறிவாளர் இனி என்செய்வர்?

லண்டன் கௌண்ட்டி கௌன்சிலின் ஆதரவில் கால்னி ஹிட்ச் என்னுமிடத்தில் ஒரு பயித்தியக்கார ஆஸ்பத்திரி இருந்துவருகிறது. ஷை ஆஸ்பத்திரியில் வயித்தியராகவும் ஆராய்ச்சிக்காரராகவும் இருந்த டாக்டர் அலக்ஜாந்தர் கானன் எம். ஏ, எம். டீ, எப். ஆர். ஜீ. எஸ், எம். ஆர். எம். பி. ஏ, எப். ஆர். எஸ். எம், என்பவர் "மறைந்திருக்கும் மாயசக்தி" என ஒரு நூல் எழுதி இருக்கிறார். அதில், இவருக்கு மந்திரம், ஜாலவித்தை, ஆவி சம்பந்தமான விஷயங்கள், ஹிப்னாட்டிஸம் முதலியவைகளில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவருகிறது.

1. சில யோகாப்பியாசங்களை அப்பியசிப்பதால் உடல் உரம்பெறுவதுடன் மனத்துறவு ஏற்பட்டு விடுவதாகவும், இதனால் சாமான்யர்களைவிட இதை அப்பியசிப்பவர்கள் அதிக காலம் இவ்வுலகில் வாழ முடியும் எனவும் ஹிந்துக்கள் நம்புகின்றனராம். ஜஸ்டிஸ் மெக்கார்டி என்பவர் துப்பாக்கியால் சுட்டுத் தன்னைத் தற்கொலை செய்துகொண்டாராம். இவ்வாறு இவர் தற்கொலை செய்துகொண்டதற்கு இவர் ஒரு விசித்திரமான காரணங் கூறுகிறார். அதாவது, இந்த நீதிபதியானவர் மரிப்பதற்கு ஏழாண்டுகளுக்கு முன்னர் ஒருவருடன் சச்சரவு செய்ய நேர்ந்ததாம். அது போழ்து அந்த மனிதர் இந்த நீதிபதியைப் பார்த்து "இன்னமும் ஏழாண்டுகளுக்குள் நீ துப்பாக்கிக்குண்டினால் மரணமடைவாய் இம்மரணம் என்னால் நடக்குமாயினும் உலகத்தார் இதனை அறியமாட்டார்கள்" என்று கூறினாராம். இவர் கூறியபிரகாரமே அந்த நீதிபதி குறித்த காலத்தில் தவறாமல் தற்கொலை செய்துகொண்டிறந்தாராம். இவரது மரணம் முற்கூறிய அந்த மந்திரவாதியின் மாயச் சக்தியினால்தான் இறந்தார் என்பதை கிராண்டு லாமா என்ற திபேத்துக்காரர் மூலமாக மனோரதச் செய்தியால் அறிந்துகொண்டாராம்.

2. ஷை டாக்டருக்குள்ள ஒரு நண்பர் யோகியாக இருந்தாராம். பல அற்புதக் காரியங்களை எல்லாம் செய்திருக்கிறாராம். இந்த

யோகியானவர் இராக்காலங்களில் படுக்கைக்குச் சென்றால் அவரது உடலைவிட்டு உயிர் பிரிந்து விடுமாம்; உயிரற்ற உடலமே அவரது படுக்கையில் கிடக்குமாம். ஆனால் காலையில் நம்மைப்போல—சாதாரண மனிதரைப்போலெழுந்திருப்பாராம்.

3. இந்த யோகியும் ஷெ டாக்டரும் ஒரு தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் ஆங்குள்ள புராதன காலத்து அத்திமரத்தை நோக்கி "நீ இத்துணை காலமட்டும் பலனளித்து வந்தாய்; மாயப் பிரபஞ்சமாகிய இவ்வுலகைவிட்டுப் பிரிந்துபோகுங்காலம் உனக்கு வந்துவிட்டது; இப்பொழுது நீ இறந்துபோ; இனி நீ ஜனனமாகாதே" என்று கூறினாராம். உடனே அந்த மரம் உதிர ஆரம்பித்து வரண்டுபோய் பட்டுவிட்டதாம். ஷெ டாக்டர் அதைச் சோதித்து அது உண்மையிலேயே பட்டுவிட்டதாகக் கண்டாராம். அந்த மரம் இருந்த இடத்தில் பசும்புல்கூட முளைக்காமல் கட்டாந்தரையாக இருக்கிறதாம். அந்த மரம் உதிரும்போது அதை போட்டோ எடுத்து வைத்திருக்கிறாராம்.

4. திபேத்திலுள்ள பௌத்தமத சந்நியாசிகள் இறந்தவர்களை உயிர்ப்பித்து வருகின்றனராம். இவர்கள் இவ்வாறு உயிர்ப்பித்த விபரத்தை இவர் நேரில் பார்த்ததாகவும் மேற்படி புத்தகத்தில் கூறி இருக்கின்றார். இவ்வாறு உயிர்ப்பிப்பதற்கு இவர்கள் ஏதோ மந்திரங்களை ஓதுகின்றனராம்.

5. இதுமட்டுமா. ஷெ டாக்டரும் அவரது நண்பரும் பௌத்த சந்நியாசியைப் பார்க்கத் திபேத்து நாட்டில் மலைப்பாறைகளைக் கடந்துசெல்லும்போது வழியில் குறுக்கிட்ட 50 அடி அகலமுள்ள ஆற்றிற்குள் இறங்காமல் தண்ணீர் மட்டத்திற்கு மேலிலிருந்தே அதில் நடந்து சென்றாராம். இவ்விதம் நடக்கும் வித்தையை இந்த டாக்டர் அந்த நண்பரான யோகியிடம் கற்றுக்கொண்டிருக்கிறாராம்.

6. இன்னமும் பிறர்காணாமல்-பிறருடைய பார்வைக்குத் தென்படாமல் உலகத்தில் உலாவித் திரியும் வித்தையையும் கற்றுக்கொண்டிருக்கிறாராம்.

சோதரீர்! இவ்விபரங்களைக் கூறியவர் மேனாட்டிலுள்ள பிரபல டாக்டராகவும், ஆராய்ச்சிக்காரராகவும், ஸயன்சுக்காரராகவுமிருப்பதால் அடிமைநாடாகிய இந்தியாவின் பகுத்தறிவு வாதிகள் அதற்கு எவ்வித மறுப்பும் கூறவில்லை. அவ்வாறில்லாமல் அடிமை நாட்டு மக்களில் ஒருவர் அதிலும் பகுத்தறிவுக்காரர்கள் மிக மிக மேன்மையாகக் கருதிவரும் ஆங்கிலங் கற்றவராக இல்லாமல் இந்தியப் பாஷைகளைக் கற்றவராக இருந்தால் உடனே வானம் இடிந்து அவர்கள்மேல் விழுந்திருக்கும். பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் அனுப்பி இருப்பார்கள். ஆனால் இதை யுரைப்பவர் ஆங்கில நாட்டவராகவும் அறிஞராகவுமிருப்பதால் இந்தியப் பகுத்தறிவுக்காரர்களுக்கு அது ஒரு தெய்வ வாக்கேபோல் தோன்றிவிட்டது. என்செய்வர்? பாபம்! இந்தியப் பகுத்தறிவுக்காரர்கள் புத்தி, ஆங்கிலப் பகுத்தறிவுக்காரருக்கு அடிமைப்படாமல் சுயேச்சையாக இருந்தாலன்றோ அதில் தங்களுடைய புத்தியையும் புகுத்தி இவர் கூறுவது எம்மாத்திரம் மெய் என்பதைச் சிந்தனை செய்து பார்ப்பார்கள்.

இத்தகைய புத்தகங்கள் நம் இந்திய நாட்டில் யோகிகளாலும், தபசிகளாலும், முனிவர்களாலும், ரிஷிகளாலும் எழுதப்பட்டு பற்பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன; அப்புத்தகங்களிலுள்ள முறைகளை அந்த முனிவர்களும் ரிஷிகளும் யாவரிலும் வழங்கும்படியான பாஷையில் எழுதிவைக்காமல் பரிபாஷையில் எழுதிவைத்திருக்கின்றனர். இத்தகைய வித்தைகளில் ஆர்வமுள்ள நம்மவர் இப்புத்தகங்களை அதிகப் பிரயாசையுடன் தேடிக் கண்டுபிடித்துப் படித்து வருகின்றனர். எனினும், பரிபாஷையையுணர்ந்துகொள்ள முடியாமல் இதை வாசிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றும் விதமாகப் பொருள் செய்துகொள்வதால் இதை அப்பியசிப்பதில் சித்தியடைவதில்லை. எனவே, இவர்களின் முயற்சி வீணாக ஆகிவிடுவதைக்கண்டு நம்மிந்தியப் பகுத்தறிவாளர்கள் இதிலீடுபடுபவர்களைப் பயித்தியக்காரர்கள் என்றோ முழு மௌட்டீயம் நிறைந்த மூடாத்மாக்களென்றோ கூறிவருகின்றனர். ஆயினும், இற்றைநாளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதிவைக்கப்பட்ட இத்தகைய நூல்களை உள்ளது உள்ளபடி யுணர்ந்து அதனை அப்பியசிப்பதில் சக்தியடைந்தவர்

கள் நமது நாட்டில் இல்லாமற் போகவில்லை. ஆதலின், நம் நாட்டவருக்கு அதாவது பகுத்தறிவாளர் என்று சொல்லிக்கொண்டு தங்களது சிந்தனை சக்தியையும் அறிவையும் ஆற்றலையும் மேனாட்டவருக்கு அடிமைப்படுத்தாமல் இருக்கும் அறிஞர்களுக்கு மேனாட்டு டாக்டர் கூறியது புதுமையன்று. எனவே, இவ்வித வித்தைகள் அப்பியசிப்பதாலும் பயிற்சியினாலும் உண்டாகுவது ஒரு புறமிருக்க இதில் உச்சரிக்கப்படும் மந்தரங்களைப் பற்றியும் கவனிப்போம்:

திபெத்து நாட்டுச் சந்நியாசிகள் சில மந்திரங்களை உச்சரித்துச் செத்தவர்களை உயிர்பித்ததைத் தாம் பார்த்ததாக மேனாட்டு டாக்டர் கூறுகிறார். இந்த டாக்டரும் அந்தச் சவத்தைப் பரிசீலனைசெய்து பார்த்ததில் அது மிகக் குளிர்ந்து இருந்ததுடன் அது மரித்து வெகு காலமாயிருக்கு மென்று தோன்றிற்றாம். இந்த டாக்டர் இம்மாதிரி கூறிடினும் அதை உயிர்ப்பித்த பௌத்த சந்நியாசியானவர் "அந்த சவம் பல நூற்றாண்டுகள் வாழ்ந்த ஒரு மனிதருடையது; இன்னும் அவ்வுயிர் போகவில்லை ; எனினும், உடல் நசித்துவிட்டது; ஏழு ஆண்டுக்கொரு முறை நாங்கள் அதனை அழைக்கிறோம்" என்றுங் கூறினாராம். இதிலிருந்து அந்த சந்நியாசியின் எண்ணத்தில் மரித்த மனிதரை உயிர்ப்பித்ததாகத் தெரியவில்லை; உடல் நசிக்கப்பட்டவரை உசுப்பிக் காட்டுவதாகவே இருக்கிறது என்பதை உணரவேண்டும். மரித்தவர்களுக்கு மறுபடியும் உயிர் கொடுப்பதென்பது எல்லாம் வல்ல அந்த ஏகப்பரம்பொருளுக்கல்லாது வேறு யாருக்கும் அவ்விதச் சக்தியில்லை என்பது, இஸ்லாம் மதம் எடுத்துக் கூறும் விஷயமாகும். ஆனால், திருகுர்ஆனில் ஹஜ்ரத் ஈஸாநபியவர்கள் பறவைகளையும் பக்ஷி ஜாதிகளையும் களிமண்ணினால் செய்து கடவுள் கட்டளைப்படி ஊதுவாராம் ; அது உயிர் பெற்றுவிடும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதையன்றி ஹஜ்ரத் இப்ராஹீம் நபியவர்கள் இறைவன் எவ்விதம் மரித்தவர்களை உயிர்ப்பிப்பான் என்பதை மனமார அறிந்துகொள்ளுவதற்காக இறைவனைப் பிரார்த்தித்தபோது அவரது மனதுக்குத் திருப்தியுண்டாவதற்காக இறைவன், இப்ராஹீம் நபியவர்களுக்கு உயிர்ப்பித்துக்காட்டிய விபரம், ஹஜ்ரத் உஜைர் நபியவர்கள் சம்பந்தமாக அவர்கள், 100 வருஷம் வரை நித்திரை செய்ததும், அவருடைய கழுதையானது மரித்து உக்கின எலும்புக்கூடாகக் கிடந்ததும் அவருடைய பானம் மாத்திரம் பழமையாகாது புத்தம் புதிதாக இருந்ததும், பின்னர் அக்கழுதை அந்த நபியவர்கள் முன்னிலையில் உயிர் பெற்றெழும்பிய விபரமும் காணப்படுகிறது. நான்காவதாக மூஸா நபியின் கூட்டத்தினர் இறைவனைக் காண்பதற்காக ஸீனாய் மலைக்குச்சென்று இடி முழக்கத்தால் பீடிக்கப்பட்டு மரித்ததும், பின்னர் மூஸா நபியவர்களின் பிரார்த்தனையின்பேரில் அவர்கள் மறுபடியும் உயிர்பெற்றெழும்பிய விபரமும் காணப்படுகிறது. ஐந்தாவதாக வேறு நபியை மூஸா நபியவர்கள் சந்தித்துப் பேசச் சென்றபோது நடந்த விருத்தாந்தத்தைப் பற்றிய இடத்தில் மூஸாநபியவர்கள் கொண்டு சென்ற பொரித்த மீனானது உயிர் பெற்றதாகவும் தப்ஸீர்களில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விபரங்களெல்லாம் பகுத்தறிவுக்காரர்களால் பௌராணிகர்கள் என்று கருதப்பட்டுவரும் ஒரு கூட்டத்தாருக்குப் பழைய பாடமாக இருக்க, புத்தியில் சிறந்தவர்கள் என்று மனப்பால் குடித்துக்கொண்டு பகுத்தறிவுக்காரர்கள் என்று தங்களைப் பெருமையாய்ச் சொல்லிக்கொள்பவர்களுக்கு இப்பொழுதுதான் மூளையில் ஏறுகிறாப்போலிருக்கிறது. எனவே, இந்தப் பகுத்தறிவுக்காரர்களின் மூளையில் மந்த சக்தி அதிகமிருப்பதாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது.

எனவே, நமது முஸ்லிம்களின் கொள்கைப்படி மரித்தவரை உயிர்ப்பிப்பது அந்த அல்லாஹ் ஒருவனுக்குத் தானிருப்பதால் இவ்விதமாக உயிர்ப்பிப்பதாகச் சொல்லப்படும் ஜனங்களின் நிலைமையை நாம் ஆராய்ந்துபார்த்தல் அவசியமாகும். அல்லாஹ்வுக்குச் சொந்தமாக உள்ள இந்த சக்தியானது அவனுடைய அனுக்கிரகத்திற்காளான நல்லடியார்களாகிய நபிமார்களிடத்திலும் ரசூல்மார்களிடத்திலும் ஸாலிஹீன்களிடத்திலும் அவன் கட்டளைப்படி சிற்சில சமயங்களில் தோன்றி வெளியாயிருக்கின்றன. அதுவும் அவனது பரிசுத்த மதத்தின் பெருமையை அங்கிருந்தவர்களுக்கு எடுத்துக் காண்பிப்பான்வேண்டிச் செய்து காட்டப்பட்டது.

சர்வ சாதாரணமாக எப்பொழுதும் அனுவசியமாக அவர்கள் அதனைச் செய்ததாகவும் தெரியவில்லை. அன்றியும் தங்களுடைய தெய்வீக சக்தியால் அதனைச் செய்வதாகவும் அவர்கள் தாவாச் செய்யவில்லை. அல்லாஹ்வின் கட்டளைப்படியே அதனைச் செய்ததாக அப்பெரியார்கள் கூறி இருக்கின்றனர். எனவே, அல்லாஹ்வுக்குரிய இவ்விசேஷ சக்தியானது மனிதரிடம் காணப்படவேண்டுமாயின் அப்படிப்பட்ட அம்மனிதர் அல்லாஹ்வின் அநுக்ரஹத்திற்காளானவராக இருப்பது அவசியமாகிறது. அல்லாஹ்வின் சத்தியத்தை நிலைநிறுத்தும்பொருட்டு அவனியோருக்கு அபூர்வமாகச் செய்துக்காட்டவேண்டும். இவ்விரு நிபந்தனைகளுக்குமுட்படாத எவரேனும் இதைச் செய்வதாகக் கூறின் அதை முஸ்லிம்கள் நம்புவது கூடாது. எனவே, திபெத்துச் சந்நியாசிகள் பௌத்தர்கள் என்று சொல்லப்படுவதால் அவர்கள் முஸ்லிம்கள் அல்லர் என்று நன்கு தெரிகிறது. ஆனால், அவர்கள் இஸ்லாம் மதத்திலுள்ள சட்ட திட்டங்களின்படி நடந்து இஸ்லாமியக் கொள்கைகளை யுடையவர்களாக அந்தரங்கத்தில் மாறி வெளிக்குக் காட்டாமலிருக்கலாம். அதை இந்த டாக்டர் உணராது பௌத்தர்கள் என்று கூறியிருக்கலாம் எனப் பகுத்தறிவாளர் பகருதல் கூடும். தவிர, அந்தச் செய்கை நடைபெற்றதானது ஏதேனும் விசேஷ சம்பவத்தை யொட்டியதாகவும் தோன்றவில்லை. அன்றியும் என்னென்னவோ மந்திரங்களை ஓதியதாகவும் சொல்லுகிறார். ஆதலால், இத்தியாதி காரியங்களை எல்லாம் கவனிக்குமிடத்து உண்மையிலேயே மரித்தவர்களை அந்தச் சன்னியாசிகள் உயிர்ப்பித்திருக்க மாட்டார்கள்; மரித்தவரை உயிர்ப்பிப்பதுபோல இந்த டாக்டரின் கண்ணை மருட்டிக் காண்பித்திருப்பர். இதற்கு இஸ்லாமிய வழக்கில் 'இஸ்தித்ராஜ்' என்று கூறுவர்.

அவ்வாறாயின் இந்த திபேத்து சந்நியாசிகள் தங்கள் மாந்திரீக சக்தியால் கண்கட்டி வித்தை செய்து மரித்தவரை உயிர்ப்பிப்பதாகக் காட்டும்போது, சத்திய சன்மார்க்கத்தைச்சேர்ந்த முஸ்லிம்களில், நபிகள் நாயகமவர்களுக்குப் பின்னர் எவரேனும் மேற்கூறப்பட்ட அபார சக்திகளை அடைந்திருக்கின்றனரா என்று வினவக்கூடும். ஆம்! அநேகர் அவ்விதச் சக்தியை அடைந்தே இருந்தனர் என்று நாம் துணிந்து கூறுவோம். இஸ்லாத்தின் இரண்டாம் கலீபாவான ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் பெயரை அறியாதார் முஸ்லிம் உலகில் இருக்கமாட்டார் என்பது ஒருபக்கல் இருக்க, ஏனை சமூகத்திலுள்ள கற்றறிந்தவர்களெல்லாம் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களை நன்கு உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்பெரியார் இஸ்லாத்தைத் தழுவும் முன்னர் குஸ்திப் பஹில்வானாக இருந்தவர். முரடர், நபிகள் நாயகமவர்களைக் கொலை செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்தால் உருவிய வாளுடன் வந்த இவர், நபிகள்நாயகமவர்களைக் கொலை செய்வதற்கு பதிலாக இஸ்லாத்தைத் தழுவி அந்த நாயகமவர்களுக்கு சிஷ்யரானார். ஹஜ்ரத் உமர் குஸ்திக்காரர், முரடராக இருந்ததால் ஆத்மார்த்த விஷயத்தில் அவ்வளவு ஆழ்ந்த அறிவும் போதியளவு இருக்க நியாயமில்லை எனினும், நபிகள் நாயகமவர்களுக்கு சிஷ்யராகும் பேறு பெற்றதால் இவரது மௌட்டீகமெல்லாம் மாறி கருணாகரனான ஹக்சுபுஹானஹுவதஆலாவின் கட்டளைக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தவராயினர். அதனால், அவனின் கருணைமாரியானது அவர்பால் சொரிந்தது; ஆத்மார்த்தத் துறைகளில் அநேகம் படிகளைக் கடந்தார். இவ்விதம் அல்லாஹ்வின் அருளுக்குரியவரான இவர் கலீபாவாக இருந்த காலத்தில் ஒருசமயம் மதீனாவின்கண் மஸ்ஜிதில் குத்பா ஓதிக்கொண்டிருக்கும்போதே "சைனியங்காள்! மலையின் பக்கல் ஒதுங்குங்கள்" என்று மும்முறை கூறினார்கள். இடையில் இம்மாதிரி கூறியது அங்குள்ள பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தொழுகைக்குப்பின் ஹஜ்ரத் உமர் அவர்களிடம் இதைப்பற்றி வினவியபோது, "ஷாம் தேசத்தில் இன்ன இடத்தில் யுத்தம் செய்துகொண்டிருக்கிற நமது பட்டாளங்கள் என் பார்வைக்கு வந்தன; அவைகள் பலமாக யுத்தம் செய்துகொண்டிருக்கின்றன. ஆயினும், விரோதிகள் பலவான்களாக இருந்ததால் இவர்கள் மலையின் பக்கத்தில் நின்று யுத்தம் புரிந்தால்தான் விரோதிகளை ஜெயிக்க முடியும் என யானுணர்ந்தேன் ஆதலால், நம்முடைய அந்த சைன்யங்களுக்கு "மலையின்பக்கல் சென்று அம்மலை

யைத் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளும் பொருட்டு நான் அவ்வாறு கட்டளையிட்டேன்" என்றார்களாம்.

நபிகள் நாயகமவர்களின் உண்மை சிஷ்யர்களான ஸஹாபிகளுக்கு ஹஜ்ரத் உமர் (ரலி.) கூறியது ஆச்சரியமாகத் தோன்றியிராததலால் அதை அவர்கள் மெய்யென நம்பி இருந்துவிட்டனர். ஆனால், அக்காலத்தில் அவ்வூரிலிருந்த பகுத்தறிவுக்காரர்களின் மந்தம் பிடித்த மூளையில் இது ஏறவில்லை. ஆதலால், ஹஜ்ரத் உமர் (ரலி.) அண்டப்புளுகர் என நினைத்துக்கொண்டு இதை முடிந்து வைத்துக்கொண்டனர்.

இஸ்லாத்தைத் தாக்க வேண்டுமென்ற கொள்கையுள்ள நயவஞ்சகர்களான யூத கிறிஸ்தவருக்கு இது ஒரு பெரும்பிடியாகத் தோன்றிற்று. எனவே, மேற்கூறப்பட்ட ஸ்தலத்தில் யுத்தஞ் செய்தவர்கள் மதீனாவுக்குத் திரும்பிவரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். பட்டாளத்துக்காரர்கள் ஊருக்குள்வரும் முன்பே அவர்களை எதிர் கொண்டழைத்து அன்றைய யுத்தத்தைப்பற்றி விசாரித்தனர். அது போழ்த்து அந்தப் பட்டாளத்தார் அறைந்த தென்னவென்றால் "அன்றைய தினம் எங்களுக்கும் எதிரிகளுக்குமிடையில் கடும்போர் நடந்தது; நாங்கள் அதிக நெருக்கடியிலிருந்தோம். அது சமயம் ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள், "சைனியங்களே! மலையின் பக்கம் செல்லுங்கள்" என்று மூன்றுமுறை சப்தம் கொடுத்ததுஎங்களுக்குக் கேட்டது. கலீபா அவர்கள் கட்டளை என்று கண்டு நாங்கள் மலையின் பக்கமாக ஒதுங்கி நின்று யுத்தம் செய்தோம், வெற்றிமாலை சூடினோம்" என்றுவிளம்பினர். இதைக் கேட்டபின் அன்னோர் இஞ்சிதின்ற குரங்கேபோல் இறுமாந்திருந்தனர்.

இதுமட்டுமோ நமது கஃது நாயகம் குத்துபுல் அக்தாப்ஸெய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல்காதர் ஜீலானி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் ஜீவிய சரித்திரங்களையும் காரணகராமத்துகளையும் படித்துப் பார்ப்போமானால் மரணமடைந்தவர்களில் எத்தனையோபேர் அல்லாஹ்வின் கட்டளைப்படி அப்பெரியாரினது துஆபரகத்தால் உயிர் பெற்றெழும்பி யிருக்கின்றனர் என்பது நன்கு தெரியவரும்.

தவிர, கண்ணனூரில் அடங்கி இருக்கும் மௌலானா ஸெய்யிது முஹம்மதுபுகாரீ (றஹ்) அவர்களின் ஜீவியத்தைப் படியுங்கள். எத்தனை விதமான அற்புதச் செய்கைகள் அதாவது கடலில் நடந்ததென்ன, பெண்ணை ஆணாக்கிய தென்ன மரித்து உயிர்பெற்றெழும்பிய விபரமென்ன இது போன்றஅநேகம் விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

தவிர, ஹிந்துல்வலீ அதாஇர்றசூல் காஜா மூயீனுத்தீனுல் கூஷ்தீ அஜ்மீரி (றஹ்) அவர்கள் சரித்திரத்தையும் அவர்கள் சிஷ்யர்களின் சரித்திரத்தையும் பார்த்தால் இற்றை நாளில் இந்தப் பகுத்தறிவுப் புல்லர்கள்காணும் அதிசய ஆராய்ச்சிகளையெல்லாம் அவர்கள் ஒரு நொடிக்குள் செய்து காட்டுபவர்களாக இருந்தனர் எனினும், ஐரோப்பாவின் மந்த மூளைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தப் பகுத்தறிவுக்காரர்கள் நாம் மேலே எடுத்துக் காட்டியவைகளுக்கெல்லாம் கூடார்த்த வியாக்யானங்கள் செய்து கொண்டிருந்தனர். ஆனால், மேனாட்டார் ஒருவர் இதைக் கூறியவுடன் துள்ளிக்குதிக்கின்றனர். என்னே! இவர்களின் புத்தி இருந்தவாறு.

இவைகளில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில், அந்த நிர்மலனாகிய ஏகனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பெரியார்களால் இத்தகைய செய்கைகள் நிகழுமாயின் அது ஒருவாறு உண்மை என்றும் அங்கனமில்லாதவர்களால் நடைபெறுமாயின் இதில் கோளாறு உண்டென்றும் கொள்வதுடன் நமது சத்திய சன்மார்க்க பக்தர்கள் இவைகளை எல்லாம் கண்டு மருண்டுவிடாமல் தங்கள் ஈமானைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதே. இறைவன் தனது இன்னருளால் நம்மவரின் ஈமானைக் காத்தருள்வானாக, ஆமீன்.

புராதன பைபிள்

சோவியத் அரசாங்கத் தலைநகரான மாஸ்கோ நகரின் லைப்ரேரியில் புராதனமான பைபிள் ஒன்றுண்டு. இந்த பைபிள் கி. பி. நான்காவது நூற்றாண்டில் எழுதப்பட்டதாம். கிறிஸ்தவ சகோதரர்களிடமுள்ள ஆதி பைபிள்களில் இந்த பைபிளும் ஒன்று. பைபிள் அடிக்கடி கிறிஸ்தவர்களால் மாற்றப்பட்டும் திருத்தப்பட்டும் வருகிறதென முஸ்லிம்கள் குறைகூறுவதற்கு பதில் சொல்லும் நோக்கத்துடன் சாலமன் ராமலிங்கம் என்பவர் எழுதிய 'இஸ்லாம்' என்ற புத்தகத்திலும் கூட இந்த பைபிள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் புராதன காலத்தில் எழுதப்பட்டு மியூஸியத்தில்வைக்கப்பட்டிருக்கும் இந்த பைபிளுடன் தற்காலத்தில் அச்சிடப்பட்டிருக்கும் பைபிள்களை ஒத்துப்பார்த்தால் அதில் வித்தியாசம் காணமுடியாது என்று கருத்துக்கொள்ளும் விதமாக அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, மிகவும் புராதனமான இந்த பைபிள் கி. பி. நான்காவது நூற்றாண்டில் எழுதப்பட்டதென இப்பால் நாம் தெரிந்து கொள்கிறோம். எனவே, இந்த பைபிளுங்கூட ஹஜ்றத் ஈஸா நபியவர்களால் இஸ்ரவேலருக்கு அறிவிக்கப்பட்ட அசல் இஞ்ஜீலல்ல என்பதற்கு தக்க ருஜு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்த பைபிள் நாலாவது நூற்றாண்டில் எழுதப்பட்டிருப்பதேயாகும். இவ்விதமான பைபிளை பிரிட்டிஷ் மியூஸியத்தில் வைப்பதற்காக ஒரு லக்ஷம் பவுன் விலை கொடுத்துவாங்க பிரிட்டிஷ் சர்க்கார் முன்வந்திருக்கிறார்கள். இதில் பிரிட்டிஷ்சர்க்கார் தங்களது அரசாங்க பொக்கிஷத்திலிருந்து ஐம்பது ஆயிரம் பவுன்களைக் கொடுக்கும, பாக்கியுள்ள ஐம்பது ஆயிரம் பவுன்கள் பிரிட்டிஷ் பொதுஜனங்களிடம் நன்கொடை மூலமாகச் சேர்க்கப்படும் எனத் தெரிகிறது. இந்த நன்கொடைக்கு மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தி பெருமான் அவர்கள் 100 பவுன்களையும், சக்கிரவர்த்தினி மேரி ராணியார் 25 பவுன்களும் நன்கொடையளித்து இதை வாங்கும் விஷயத்தைப் பாராட்டிச் செய்தி அனுப்பியிருக்கின்றனர். பிரிட்டிஷ் பொதுஜனங்களும் அதற்காகத் தாராளமாகப் பொருளுதவி செய்துவருகிறார்கள்.

இவ்வாறிருக்க ஷை மாஸ்கோவின் மியூஸியத்தில் ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆதி திருகுர்ஆன் கையெழுத்துப் பிரதியும் ஒன்றிருக்கிறது. இப்பிரதியானது நபிகள் நாயகமவர்கள் காலத்தில் எழுதப்பட்ட திருகுர்ஆனுக்கு நேரான காப்பியாக எடுக்கப்பட்டது. இதற்கு "இமாம்" என்று பெயர். இந்த குர்ஆன் மாஸ்கோவுக்குச் போன விபரம் நமது ஹி. இ. வின் சென்ற இதழில் கூறப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பணம் படைத்தவர்களாகவும் அநேகம் அரிய பெரிய அரசாங்கங்களை நடத்துபவர்களாகவும் இருப்பதால் தங்களுடைய புராதன பைபிளுக்கு ஒரு லக்ஷம் பொன் கொடுத்து வாங்க முன்வந்துவிட்டனர். நம்மவரோ நமது புராதன குர்ஆனை விலை கொடுத்து வாங்கச் சக்தியற்றிருக்கின்றனர் என்பது வெளிப்படை. ஆயினும், அதற்கு அத்துணை விலை கொடுத்தேனும் வாங்கி பிறமதத்தவரிடமிருந்து நமது பூர்வீக ஞாபகச் சின்னத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற ஆர்வம் இருப்பதாகக்கூட அறிகுறி தென்படவில்லை. இந்த குர்ஆனுடன் எழுதப்பட்ட மற்றொரு பிரதியைத் தீக்கிரையாகும்படி இவர்கள் விட்டுவிட்டதுதான் இவர்களது மார்க்க பக்திக்குச் சான்றாக இருக்கிறது. மேனாட்டில் நாத்தீகம் வளர்ந்து மார்க்கப் பற்று குன்றி வருவதாக இந்நாட்டில் கூறப்படும் கூற்றுகள் எம்மாத்திரம் உண்மை என்பதற்கு, இந்த பைபிளுக்கு பிரிட்டிஷ் மக்கள் லக்ஷம் பொன் கொடுத்து வாங்க முன்வந்த விஷயம் தக்க மறுப்பாகும் என்று நினைக்கவேண்டியதிருக்கிறது.

இதில் மற்றொரு விசேஷமென்னவெனில், கடவுளே இல்லை என்று கடாவி மாதா கோவில்களையும் மஸ்ஜிதுகளையும் இடித்துத்

தள்ளி அவைகளை சினிமாக் கொட்டகைக ளாகவும் தொழிற்சாலைகளாகவும் ஆக்கி வரும் ரஷ்ய சோவியத் அரசாங்கத்தில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உயிர் நாடியாகவுள்ள பூராதன கையெழுத்துப் பிரதிகளான பைபிளும் திருகுர்ஆனும் போய்ச் சேர்ந்திருப்பதுதான் தெய்வத் திருச்செயலாக இருக்கிறது. இவ்வரசாங்கத்தினர் இவைகளை எரித்து ஒழித்துவிட வேண்டுமென நினைக்காமல் இதுகாறும் பாது காத்து வந்ததற்கு கிறிஸ்தவ உலகம் அவர்களுக்கு நன்றி செலுத்தும் என்பது திண்ணம். அவர்களிடமுள்ள புராதன திருகுர்ஆனை விலை கொடுத்து வாங்க எந்த முஸ்லிம் அரசாங்கமேனும் முன்வருமா என்பதை இனித்தான் அறியவேண்டும்.

சத்தியதூதரின் சற்குண விசேஷம்

உலக ரெட்சகர் எம்பெருமானார் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்களினது அழகிய முன் மாதிரியை ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்போமாகில், தங்களுடைய சொல் செயல் யாவற்றிலும் நமக்குப் போதிய படிப்பினை ஏற்படுகிறதென்பது திண்ணம். தாங்கள், மானிட கோடிகள் தங்கள் கையினால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு வணக்கம் புரியாது உண்மையான கடவுளை வணங்கும் படிப்பினையைக் கற்றுக்கொடுத்தார்கள்; வழி தவறி துர்மார்க்கத்திற் சென்று கொண்டிருந்த வழிகேடர்களுக்கு ஏகத்துவத்தின் வழியை அறிவித்துக் கொடுத்தார்கள்; துர்க்குணமுடைய மக்களுக்கு மேலான உன்னத குணத்தைக் கற்பித்துக் கொடுத்தார்கள். தாங்கள் தயாளகுணம் வாய்ந்த கிருபையாளராக இருந்ததால் சதாவும் ஒவ்வொருவருடன் சாந்த குணமுடைய கிருபையாளராகவே முன் வந்தார்கள். தாங்கள் பிரார்த்தனை செய்வதைப் பார்த்த அநேகரின் மனதில் பிரீதி அதிகரித்துக்கொண்டே சென்று இஸ்லாமிய பந்தத்தில் வந்து நுழையும்படி செய்துவிட்டது. சிலகால் தங்களிடம் யூத கிறிஸ்தவ சமூகத்தினர் விஜயஞ்செய்து அநேக விஷயங்களைக் கேழ்ப்பார்கள். எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் அவ்விஷயங்களுக்கெல்லாம் மன திருப்தி அளிக்கக்கூடிய தக்க விடை அளிப்பார்கள்.

தங்கள்மீது பலவாறான சொல்லத் தரமற்ற கஷ்ட நிஷ்டூரங்கள் புரியப்பட்டன; பற்பலவாறான தொந்திரவுகள் கொடுக்கப்பட்டன ஆனால் அவ்வாறு கெடுதி செய்ய வேண்டுமெனக் கருதி இருந்தவர்கள் விஷயத்தில் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் சதாவும் நலவை நாடியவர்களாகவும் அவர்கள் சன்மார்க்க பக்தி பூண்டவர்களாய்த் திகழவேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களாயும் திகழ்ந்து வந்தார்கள். தாங்கள் மக்கமா நகரில் வாசஞ் செய்த கால் முஸ்லிம் அல்லாதாரால் தங்களுக்கு இழைக்கப்பட்டுவந்த கடுமைகளையும் அநீதிகளையும் சகிக்க முடியாது சுயபதியையே விட்டுவிடும்படி நேர்ந்துவிட்டது. இவ்வாறான கஷ்ட சங்கடங்களை எல்லாம் எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் சகித்துக்கொண்டு பிரதானமாயுள்ள சன்மார்க்கப் பிரசாரத்தைத் துயர்ந்து நடத்திக் கொண்டும் முஸ்லிம் அல்லாத சோதரர்களின் சற்குணங்கள் ஒழுங்காகுவதற்கு முயற்சித்துக் கொண்டும் வந்தார்கள்.

'பத்ர்' யுத்தம் நிகழ்பெறுவதற்கு சற்று முன்பு, ஒரு நாளன்று எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் உஸாமாபின்ஜைத் (ரலி.) யுடன் வாகனத்தின்மீது வீற்று, முஸ்லிம்கள் முஷ்ரிக்கள் எஹூதிகள் விக்கிரஹ ஆராதனைக்காரர் முதலானோர் வீற்றிருக்கும் வழியில் செல்லுங்கால் தங்கள் வாகனத்தினால் புழுதிபறக்க ஆரம்பித்தது. இதனைக்கண்ட காபிரொருவன் புழுதியைக் கிளப்பிவிட வேண்டாமெனக் கூறினான். உடனே எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் கீழே இறங்கி அங்கு வீற்றிருந்தவர்களுக்குச் சலாம் சொல்லி தவ்ஹீதின் பக்கல் அழைத்து, குர்ஆன் ஷரீபின் சில ஆயத்

துகளையும் ஓதிக் காண்பித்தார்கள். அது பொழுது அங்கிருந்த காபிரொருவன் சத்தியத்தூதர் உண்மை நாதர் (ஸல்.) அவர்களை நோக்கி, நீர் கூறுவது ஒழுங்காக இல்லை; நீர் கூறுவது உண்மையான பேச்சாக இருந்தாலும் இந்த இடத்தில் அவைகளைக்கூறி எங்களுக்கு நோவினைக் கொடுக்காது உமது இருப்பிடம் சென்று அங்கு உம்மிடத்துக்கு வருபவர்களிடம் இவ்வாறான வார்த்தைபேசு வீராக எனக் கூறினான். அதே மஜ்லிசிலிருந்த அப்துல்லாஹ்பின் ரவாஹா அவர்கள், எம் பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின் சத்போதனைகளை உண்மையாக்கி வைத்து, அல்லாஹ்வுடைய ரசூலே! இக் கூட்டத்தில் அவசியம் சத்போத ஒழுக்கமான சன்மார்க்கப் பிரசாரம் புரிவதை நாங்கள் முழுதும் ஆதரிக்கின்றோம் எனக் கூறவே, அங்கிருந்த முஸ்லிம்கள், முஷ்ரிக்கள் எஹூதிகளுக்கிடையே பலவாறான தர்க்கங்கள் நடைபெற்றது. அதுபொழுது எம்பெருமானார் சமாதானத்தூதர் (ஸல்.) அவர்கள் சமாதானங் கூறி அமர்க்கை செய்தார்கள். பின்னர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் வாகனத்தின் மீது வீற்று சஅதிப்னு உப்பாதா (ரலி.) அவர்களிடம் சென்று வழியில் நிகழ்பெற்ற சம்பவங்களை விபரமாகக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் சஅத் (ரலி.) அவர்கள், யாரசூலல்லாஹ்! இவ் விஷயத்தைத் தாங்கள் ஒரு பொருட்டாக மதியாது மன்னித்துவிடுங்கள்' எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயாள சிந்தையோடு மன்னிப்பளித்து விட்டார்கள்.

ஒருநாளன்று உலகதயாளர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் காட்டில் துயில் புரிந்து கொண்டிருக்குங்கால் தங்களது வாளாயுதமானது ஒரு மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. அது காலை தங்களுக்கு விரோதியாக இருந்த ஓர் எஹூதி அங்கு வந்து, தாங்கள் துயில் புரிந்துகொண்டிருப்பதைக் கண்டு வாளாயுதத்தை மரத்தினின்று கையிலெடுத்துக்கொண்டு, ஏ முஹம்மதே! இதுபொழுது என்கையிலிருந்து உன்னைக் காப்பாற்றி வைக்கக்கூடிய உம்முடைய நாயன் எங்கிருக்கிறான்? என உரத்த தொனியில் கூறினான். இத்தொனியை செவியுற்ற எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் விழித்துப் பார்க்கும்போது, அவ் எஹூதியானவன் கையில் வாள் ஏந்தியவனாக நிற்பதைக் கண்டார்கள். உடனே அல்லாஹ் என்னும் ஓர் சப்தம் தங்கள் வாயிலிருந்து கிளம்பவே அந்த எஹூதி நடுநடுங்கியவனாய் கையிலிருந்த வாளாயுதத்தைக் கீழே போட்டுவிட்டான். தாங்கள் பூமியிலிருந்து அவ்வாளை கையி லெடுத்துக்கொண்டு ஏ எஹூதியே! உன் கையிலிருந்து என்னுடைய நாயன் என்னைக் காப்பாற்றிக்கொண்டான் இதுபொழுது என் கையிலிருந்து உன்னைக் காப்பாற்றக்கூடியவன் யார்? என தாங்கள்கூறவே, அந்த எஹூதி நாணத்தால் தலை குனிந்துகொண்டு மௌன விரதம் பூண்டு நின்றான். உடனே எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அந்த எஹூதியைநோக்கி அல்லாஹ்வுக்காக உன்னை மன்னித்து விட்டேன் திரும்பச் செல்லும் எனக்கூறினார்கள். அந்த எஹூதியானவர் இவ்வரும் மொழியைக் கேட்டவுடன் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பாதத்தில் விழுந்து உண்மை மனதோடு ஈமான் கொண்டு முஃமினாய் விட்டார்.

உலக ரட்சகர் சமாதானத் தூதர் (ஸல்.) அவர்கள், மக்கா மதீனாவில் வாசஞ்செய்து வந்த முஸ்லிம் அல்லாதாரின் அதிக்கிரமச் செயல்களை மாத்திரம் மன்னித்துவிட்டார்களென்பதல்ல. அவ்வாறான மன்னிப்புக்கு முன் அவர்கள் உறவு கொண்டாடி வந்தார்கள்; அவர்களிடமிருந்துவரும் காணிக்கைகளை ஒப்புக்கொள்வார்கள். உதாஹரணமாக ஒருநாளன்று ஒரு எஹூதியாவான மாது எம்பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களின் சமுகத்துக்கு ஆட்டு மாமிசத்தினின்று ஒரு துண்டை அனுப்பி வைத்தாளாதலின் தாங்கள் சாதாரணமாக அவளுடைய ஹதியாவை ஒப்புக்கொண்டு அதனைச் சாப்பிட்டுவிட்டார்கள். ஆனால் அந்த துர்க்குணம் வாய்ந்த எஹூதியாவானவள் அந்த இரைச்சித் துண்டில் நஞ்சைக் கலந்து அனுப்பி இருந்தாள். ஆனால் அல்லாஹ்த ஆலாவின் கிருபையால் சற்குணத் தூதர் (ஸல்.) அவர்கள் அதனாலேற்படும் கெடுதிக்கு ஆளாகாது காக்கப்பட்டார்கள்.

ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள், உள்ளும் புறமும் ஒன்றுபோல் காபிர்களுக்கு நலவு செய்வதிலீடுபட்டிருந்தார்கள்; அன்

னோர் நேரான பாதையிற் செல்வதற்காக அரும்பாடுபட்டு வந்ததுடன் அதற்காகப் பிரார்த்தனையும் புரிந்து வந்தார்கள். ஒரு நாளன்று, 'துபைல்பின் அம்ருத்தூஸீ' என்பான் எம்பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து தன் தூஸ் கிளையைப்பற்றி ஏதோ பொல்லாங்கு கூறினர். இதனைத் தாங்கள் கேட்டு யா அல்லாஹ்! தூஸ் கிளையார்களுக்கு நேர்வழி காண்பி, என பிரார்த்தனை புரிந்தார்கள். இந்தப் பிரார்த்தனையால், தாங்கள் முஸ்லிம் அல்லாதாருடன் எவ்வாறு நடந்தொழுகினர்களென்பது நன்கு புலனாகும்.

மதீனாவுக்கு விஜயஞ்செய்த பிறகுங்கூட குப்பார்கள் சர்குணமற்றவர்களாயும் காட்டுமிராண்டித் தன்மையான அநாகரீகச் செயலுடனும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் சமுகம் வந்து மரியாதைக் குறைவாகத் தங்களிடம் பற்பல கேள்விகள் கேட்க ஆரம்பிப்பார்கள். ஆனால் தாங்கள் பொறுமையைப் பூஷணமாகக் கொண்டு அவர்களின் அநாகரீகச் செயலைப்பாராது தயாள சிந்தையோடு விடை பகர்வார்கள். ஒரு நாளன்று ஒரு மனிதன் ஒட்டகத்தின்மீதேறி வந்து பள்ளிவாசலுக்குமுன் அவ்வொட்டகத்தை நிப்பாட்டி கீழே இறங்கிவந்து அங்கு கூடி இருப்பவர்களை நோக்கி, உங்களில் முஹம்மது (ஸல்.) என்பவர் யார்? என வினவினர். அதோ சாய்ந்து உட்கார்ந்திருப்பவர்கள்தாம் முஹம்மதாகும் என அறிவிக்கப்பட்டது. உடனே அம்மனிதன் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, யான் தங்களிடம் ஒருமஸ்அலா விஷயமாக கடுமையாகக் கேள்வி கேட்கப்போகின்றேன்; தாங்கள் கோபித்துக் கொள்ளலாகாதெனக் கேட்டுக் கொண்டார். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் கேளும் எனக் கூறினர்கள். அது பொழுது அம்மனிதர், உம்முடையவும் உமக்கு முன்னுள்ளவர்களுடையவும் நாயன்மீது பிரமாணஞ்செய்து கேட்கிறேன்: (1) தங்களை அல்லாஹ் எல்லோர் பக்கலும் நபியாக அனுப்பி இருக்கின்றானா? ஆம். நபியாக அனுப்பி இருக்கின்றான். (2) அல்லாஹ்தஆலா தங்கள் மீது ஐந்துநேரத் தொழுகையை ஏற்படுத்தி இருக்கின்றானா? ஆம். கட்டளை பிறப்பித்திருக்கின்றான். (3) ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு மாதம் நோன்பு நோற்கும்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றானா? ஆம். கட்டளை பிறப்பித்திருக்கிறான். (4) ஜக்காதைக்கொண்டு ஏழைகளுக்கு உபகாரஞ் செய்யும்படி கூறியிருக்கின்றானா? ஆம். என்று கூறவே, இவை யாவற்றையும் தெரிந்துகொண்ட அந்த அரபி, "தாங்கள் கொண்டுவந்த யாவற்றின்மீதும் ஈமான் கொண்டுவிட்டேன்; யான் என் கூட்டத்தாரிட மிருந்து பிரதிநிதியாகத் தங்களிடம் வந்திருக்கிறேன் எனக் கூறியதாக ஹஸ்ரத் அனஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதுவன்றி நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் முஸ்லிம் அல்லாத சமுகத்தாருடன் லேவாதேவி செய்திருக்கின்றார்கள். இச்சம்பந்தத்தில், சிலகால் அடமானவைக்கும் சம்பவமும் நிகழ்ந்திருக்கின்றது. மேலும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதாருக்குமிடையே ஏற்பட்டுள்ள லேவாதேவியில் சமாதானமும் செய்திருக்கின்றார்கள். அவ்வாறான சமாதானத்தில் முஸ்லிமல்லாதார் கட்டுப்பட்டு வராவிடில் அதற்காக கோபங்கொள்ளாது முஸ்லிம்களிடம் சமாதானமான வார்த்தைகள்கூறி இணங்கிவரும்படி சொல்லுவார்கள்.

மேலே கூறப்பட்டவைகளால் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் மக்காவிலுள்ள முஸ்லிம் அல்லாதாருடன் மட்டும் சாந்த குணத்தோடு முன் வந்தார்களென கருதிவிடுக. மதீனாவில் யுத்தம் நடைபெறுவதற்கு முன்பும் ஜெயபேரிகை கொண்டபிறகும் அத்தேசத்தில் வதிந்த முஸ்லிம் அல்லாதாருடனும் ஞாயமான முறையிலேயே நடந்து வந்திருக்கின்றார்கள். முடிவாகக்கூறுமிடத்து, தங்கள் வாணாள் முழுதிலும், தங்கள் சொல் செயல் முதலிய யாவற்றும் குர்ஆன் ஷரீபுக்கு ஒற்றமைந்ததாக இருந்ததெனக் கூறுவது மிகைப்படக் கூறியதாகமாட்டாது. ஆகவே, இப்பூவுலகின்கண் சற்குணத்தில் தங்களை எவரும் மிகைத்துவிட முடியாதென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்களென்பது யாவருக்கும் நன்கு புலனாகும்.

ஆண்டவனற்ற அறிவு.

ஸ்ரீமான் J. M. குமரப்பா M. A. P. H. D. அவர்கள் "மாடர்ன் ரெவ்யு" பத்திரிகையில் மேற்கண்ட மகுடத்தின்கீழ் ஒரு வியாசம் எழுதி இருக்கிறார். அதை அனுசரித்து இவ்வியாசம் எழுதப் படுகிறது. உலகத்தில் மனிதன் மனிதனுக்குத் தொண்டு செய்வதும், மனிதனை மனிதன் பிடுங்கித் தின்பதும், மனிதனை மனிதன் வெறுப்பதும் மதத்தின் பெயராலாயே நடைபெறுகின்றன எனவே மத உணர்ச்சியானது அரசியல் காரணங்களால் மாறுபட்டு ஒன்றையொன்று எதிர்த்துக்கொள்வதால் பெரும்பெரும் கலகமும் கிளர்ச்சியும் தோன்றி இரத்த ஆறுகள் ஓடுகின்றன. இதற்கு உதாரணமாக காசி, கான்பூர், ஆக்ரா, பம்பாய், கல்கத்தா ஹிந்து முஸ்லிம் கலகங்களைக் கவனியுங்கள். இவ்வாறிருக்கும்போது ஒவ்வொரு மதவாதிகளும் "மதம் மனிதவர்க்கத்தை நேசிக்கும்படி செய்கிறது; சமூக முன்னேற்றத்துக்கு மதம் இன்றியமையாத ஊன்று கோலாயிருக்கிறது" என்றும் சொல்லிக்கொள்கின்றனர். ஆழ்ந்து சிந்தனை செய்யாமல் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இச்சொற்கள் சற்றும் பொருத்தமற்றதாகவே காணப்படும். எனவே, இத்தகைய பற்பல மதங்களுக்கும் உறைவிடமாக இருக்கிற இந்திய நாட்டின் மீது ஆதிக்கம் கொண்ட ஐரோப்பியர், கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவராயினும் தங்கள் ஆட்சியை இந்தியரால் நிலைநிறுத்தும் நோக்கத்துடன் யாவருக்கும் மத சுதந்திரம் கொடுத்திருப்பதாகவும், தனிப்பட்ட நபருடைய மத சுதந்திரத்தில் தலையிடுவதில்லை என்றும் நடுநிலைமை வகிக்கும் கொள்கையைக் கையாண்டு மதத்தை அரசியலிலிருந்து பிரித்து விட்டனர். இதனால் அரசாங்கத்தின்மீது முஸ்லிம்களோ ஹிந்துக்களோ மற்றைய ஜாதியினரோ மத சம்பந்தப்பட்ட வரையில் துவேஷமோ வெறுப்போ கொள்ள இடமேற்படவில்லை. இதனால் அரசாங்கத்திற்கு நல்ல பலன் ஏற்பட்டது.

இவ்விதம் செய்துவிட்டதால் "அரசன் எப்படியோ அப்படியே பிரஜை" என்றபடி பிரஜைகள் அரசியல் பதவிகளிலும் செல்வப் பெருக்கைத் தேடுவதிலும் மோகங்கொண்டனர்; மதசம்பந்தமான உணர்ச்சியைக் கைவிட்டனர். இதனால் அரசியல் தர்மமும், அரசியல் சாஸ்திரமும் மக்களிடை தங்குதடையின்றி ஓங்கி வளர ஆரம்பித்தது. மத உணர்ச்சியும் மதப் படிப்பும் கொஞ்சங் கொஞ்சமாய் நசித்துக்கொண்டே வர ஆரம்பித்தது. இறுதியாக சர்க்கார்ப் பள்ளிக்கூடங்களில் மதப் படிப்பை அடியுடன் எடுத்துவிட்டனர். எனவே, முற்காலத்தில் மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி புரியப்பட்டு வந்ததால் மதப்படிப்புக்கு ஏக போக உரிமை அளிக்கப்பட்டிருந்த இடத்தில் ஆண்டவனற்ற அறிவாய லௌகீகக் கல்வி மாத்திரம் போதிக்கப்படுகிறது. ஆயினும், மதப்பற்றுள்ள இந்தியர், சர்வ மதங்களுக்கும் தங்களிடம் இடம் கொடுத்து ஆதரிக்கும் இந்தியர் பிரத்தியேகமாக மதக்கல்வியை ஆதரித்துப் போஷிக்க வேண்டியதாயிற்று. அதாவது மதப்பற்றுள்ள முஹம்மதியர்கள் பலர் தத்தம் வசதிக்கும் சௌகரியத்துக்கும் ஏற்றபடி மதக்கலையைப் வளர்ப்பான்வேண்டி தர்மமாக மதப்பாடசாலைகளை ஏற்படுத்தினர்.

ஆயினுமென்ன, நடுநிலைமை வகித்தல் என்ற உபாயம் இந்தியாவில் நன்கு உரம் பெற்றுவிட்டதால் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குலௌகீகக்கல்வியைப் போதித்து மதக்கல்வியை—ஆண்டவனுள்ள அறிவை அடியுடன் கைவிட்டுவிட்டனர். தனிப்பட்ட ஹோதாவில் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் அரசாங்க உதவி பெறுவதற்காக ஆண்டவனுள்ள கல்வியை விட்டு அவனற்ற அறிவையே அதிகம் புகட்ட வேண்டியதாயிற்று. இதனால் மத உணர்ச்சிக்குப் பெயர்பெற்ற இந்தியாவில் மதபோதனை கைவிடப்பட்டு சன்மார்க்கம் நழுவி விட்டது.

பாடசாலைகளில் மதபோதனை இல்லாமற் போனதால் அவைகளிற் கற்றுத் தேர்ந்தவர்கள் பெரும்பாலும் சன்மார்க்க நெறியினைத்

தெரியாதவராய்த் தோன்றினர். இதனல் சமூகமும் சமூகத்திலுள்ள ஒற்றுமையும் சிறுகச் சிறுகச் சீரழிந்து பற்பல பிளவுக்குள்ளாகிவிட்டது. மதத்தலைவர்களும் சமூகத் தொண்டர்களும் இதையுணர்ந்து இத்தகைய பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பக்கூடாது என்று அக்காலத்தில் பத்வாக்கள் விடுத்து, மதப்பள்ளிக்கூடங்களில் அதாவது பிரத்தியேகப் பாடசாலைகளில் மக்களின் அறிவை வளர்க்கும்படி கூறினர். எனினும் தலைக்குமேல் வெள்ளம் புரண்டோடும்போது இவர்கள் ஏற்பாடுகளெல்லாம் நிலைநிற்குமா? ஆகவே இவர்களை அலக்ஷியம் செய்து விட்டனர். இவர்கள் உபதேசத்தை முதுகுக்குப்பின் தூக்கி எறிந்துவிட்டனர். என்றாலும் இவர்களின் கண்ணைத் துடைப்பதற்காக வடநாட்டிலுள்ள அலிகாரிலும், லாகூரிலும், கான்பூரிலும் டில்லியிலும் உள்ள காலேஜ்களில் அறபிப் பாஷையைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

ஆயினும் அஃது உத்தேச பலனை அளிக்காமல் விபரீதப் பலனை அளிக்கத்தொடங்கிற்று. இப்பொழுது இத்தகைய கல்லூரிகளிற் பயின்ற சில தலைவர்களைத் தவிர்த்து ஏனையோர் அந்தப் பழைய ஆண்டவனற்ற அறிவுக்கே ஆளாகி இருக்கின்றனர். இந்த லௌகீகக் கல்வியை அந்த நடு நிலைமைக்காரரின் திட்டப்படி படிப்பதால் அவர்களுக்கு, இத்தகையோர் அடிமைப்பட்டு அவதிப்படுகின்றனர். இதனல் புதுபுதுக் கிளர்ச்சிகளும் புதுப்புது உணர்ச்சிகளும் தலைகாட்டிமுன்னிலும் அதிகமாக வேற்றுமையைத்தான் உண்டாக்கிவிட்டது. முஸ்லிம்களின் லௌகீகக் கல்விக்குத் தந்தையாய்க் கருதப்படும் ஸர் ஸெய்யிது அஹ்மதுகான் அந்த மேனாட்டினரை முற்றிலும் பின்பற்றி அவர்களைப்போல் சமூகத்தை அதிசீக்கிரத்தில் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என நினைத்துப் பல விதத்தாலும் அநேகம் நற்றொண்டுகளை நஞ் சமூகத்தினருக்கு ஆற்றினர். ஆயினும் மத விஷயத்திலும் மதியில்லாமல் தலையிட்டு, இப்லீஸ், மலக்கு, அற்புத நிகழ்ச்சிகள் ஆகியவைகளுக்கெல்லாம் தம் மனம்போன போக்குப்படி வியாக்யானம் செய்து "நேச்சரி" என்ற பட்டத்தைக் கட்டிக்கொண்டார். இவரை உலமாக்கள் மாத்திரம் குறைகூறுகின்றனர் எனக் கருதவேண்டாம். குலாம் அஹ்மது காதியானியும் அவரது சிஷ்யருமான லாகூர் முகம்மது அலியுள்பட பலரும் அவரை எதிர்த்தனர். இதன் உண்மையை யுணரவேண்டுமாயின் முகம்மது அலியின் உருது தப்ஸீரெனச் சொல்லப்படும் பயானுல் குர்ஆனை நீங்கள் நன்கு கவனித்து வந்தால் இப்லீஸ் மலக்கு ஜின் சம்பந்தப்பட்ட இடங்களில் ஸர் ஸெய்யிது அஹ்மதுகான் கொள்கைகள் கண்டிக்கப்படுவது புலப்படும். இதுமட்டுமா போப்பால் கவர்ன்மெண்ட் கல்வி இலாக்கா டைரக்டர் முதலியவர்கள் எழுதியிருக்கிற தத்துவ இஸ்லாம் போன்ற நூல்களிலும் ஸர் ஸெய்யிது அஹ்மதுகானின் நடவடிக்கைகள் கண்டிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் வைதீக சம்பந்தப்பட்டவரை அவர் பல வகுப்பினராலும் கண்டிக்கப்பட்டாலும் லௌகீக சம்பந்தப்பட்டவரை முஸ்லிம் இந்தியாவுக்குத் தந்தையாக இருக்கிறார் என்பதிலையமில்லை. இவ்விதம் ஸர் ஸெய்யிதைக் கண்டிக்க முன்வந்த குலாம் அஹ்மது, முஹம்மது அலியேனும் நேரான வழியிலிருந்தனரா என்றால், அவர்களும் வேறு விஷயங்களில் படுகுழியில் விழுந்து பலராலும் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களாகிவிட்டனர். ஆனல், இற்றைநாளிலுள்ள நடுநிலைமைக்காரர் கற்பித்த ஆண்டவனற்ற அறிவைப்பெற்ற நம்மவர் மேற்கூறப்பட்ட ஸர் ஸெய்யித், குலாம் அஹ்மத், முஹம்மது அலி இவர்களின் நடவடிக்கைகளைக்கண்டு மருண்டு அவர்களைப்போற்றவும், அவர்களில் மத சம்பந்தமாகக் காணப்பட்ட சில குறைகளை எடுத்துக்கூறிக் கண்டித்த உலமாக்களைத் தூற்றவும் தலைப்பட்டு விட்டனர். எனவே, நடுநிலைமை வகிக்கக் கல்விகற்றவர்கள் மதவிஷயத்தில் தலையிடாமல் இருக்கவேண்டியதிருக்க அதில் அனாவசியமாய்த் தலையிட்டு உலமாக்களைத் தாக்கி வருகின்றனர்.

இதற்கு இவர்கள் கூறும் காரணம் யாதெனில், இங்கிலீஷ் படிப்புக் காபிரான படிப்பு அதைப் படிப்பது ஹறாம்; மார்க்கம் வேறு, பகுத்தறிவு வேறு, ஆதலால் மார்க்கவிஷயத்தில் அறிவைச் செலுத்தாமல் கண்மூடித்தனமாகப் பின்பற்றவேண்டும் என்கின்றனர் என்று கூறுகின்றனர். இவர்கள் கூறும் இந்தக் காரணங்கள் விஷயத்தை விளங்காமல் கூறுவதாகும். இங்கிலீஷ் பாஷையே படிக்கக்கூடாது என்று எவரும் பத்வாக்கொடுக்க

வில்லை. ஆனால்இந்த நடுநிலைமைப் பள்ளிக் கூடம் சென்று பரங்கிப் பாஷையைக் கற்று வருபவர்கள் சன்மார்க்க நெறி தெரியாமல் தடுமாறுவதால் அத்தகைய குறை ஏற்படாம லிருந்தால் அதைப் படிக்கலாம்; அக்குறை ஏற்படுவதாயின் அதைப் படிப்பது கூடாது என்று நிபந்தனை ஏற்படுத்தினர். ஏனெனில் "மதபோதனையற்ற படிப்பைவிட அறியாமையே மேல்" என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். இரண்டாவதாக இஸ்லாம் மதம் பகுத்தறிவுக்கு ஒத்ததாகத்தானிருக்கிறது. அம்மதத்தில் சொல்லப்பட்ட ஒவ்வொரு சட்ட திட்டமும் பகுத்தறிவுக்கு ஒத்துத்தானிருக்கிறது என்றாலும், இக்காலத்தில் பகுத்தறிவு ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெற்று விடவில்லையாதலாலும், இன்னார் தான் பகுத்தறிவிற் சிறந்தவர் என்றும், அவரிடத்தில் எல்லாப் பகுத்தறிவும் இனி இல்லாவண்ணம் நிறைந்து விட்டதென்றும், இவரைப்போல் பகுத்தறிவிற் சிறந்தவர் இவ்வுலகத்தில் இப்பொழுதுமில்லை இனி எப்பொழுதுமில்லை என்றும் முடிவு கட்டப்பெற்றில்லையாதலாலும் தத்தம் புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத மார்க்க விஷயங்களில் தமது புத்திக்குத் தகுந்தவிதமாக மார்க்கத்தைப் புரட்டவேண்டாம் என்றே உலமாக்கள் கூறுகின்றனர். இவ்வுண்மையை யுணராது இந்த நடுநிலைமைக்காரர்களான ஆண்டவனற்றஅறிவைப் படைத்தவர்கள் உலமாக்களைத் திட்டவும் ஏசவும் பேசவும் தலைப்பட்டுவிட்டனர்.

ஆனால், இவர்களின் கண்களைத் திறக்கும் படியாக கல்கத்தா யூனிவர்ஸிட்டி கமிஷன் ரிப்போர்ட்டு கூறுவதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அதாவது:—

"நமது பள்ளிக்கூடங்களும் சர்வகலாசாலைகளும் மாணவர்களின் குணாதிசயங்களையும் யோக்கியதையையும் விருத்தி செய்யத் தவறிவிட்டன. பிறப்பின் பயனென்ன? மக்களின் கடமையென்ன? பொறுப்புக்கள் என்ன? என்னும் அம்சங்களைத் தற்காலப் படிப்பு அறவே மறந்துவிட்டது. பாடசாலைகளில் ஆத்மார்த்தமான உணர்ச்சியைத் தரும் மத போதனையின்மையே இத்தவறுதலுக்குப் பிரதம காரணமாகும்" என்பதே

இங்கிலாந்திலிருந்துவந்த இந்தக் கமிஷனானது இவ்விதம் மதபோதனையை வற்புறுத்தி விட்டது. மத போதனையைக் கைவிட்டதால் இப்பயன் விளைந்திருக்கிறது. தற்காலம் பகுத்தறிவுக் குஞ்சுகளால் முல்லாக்கள் என்று திட்டப்படும் ஒரு கூட்டத்தார் இவ்வாங்கிலக் கமிஷனர்கள் கூறியதை முன்னரே யுணர்ந்து அவ்வாறான தீங்கேற்பட்டுவிடாமல் தடுப்பான்வேண்டி ஆங்கிலம் கற்பதற்குச் சில விதிகளை ஏற்படுத்தினால் அது அவர்களுடைய விசால அறிவையும் தீர்க்க தரிசனத்தையுமேதான் காட்டக்கூடியதாக இருக்கிறது. இதற்காக அவர்களை நம்மவர் பாராட்டவே கடமைப்பட்டிருக்கின்றனர். இதை விடுத்து அவர்களை வாய்கொண்ட மட்டும் ஏசவும் பேசவும் எவ்வித நியாயமுமில்லை.

எனவே, மேனாட்டவரின் மூளைக்கு அடிமைப்பட்ட நமது பாரதநாட்டு முன்னேற்ற வாதிகள் மதபோதனையின் அவசியத்தை இப்பொழுதுதான் உணர ஆரம்பித்திருக்கின்றனர். என்றாலும், அதை எவ்விதம் நடாத்தல் வேண்டும் என்ற முறை தெரியாமல் தவிக்கின்றனர். இச்சிக்கலை அவிழ்த்துவிடக்கூடிய உபாயத்தைத்தான் நாம் கைக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கு அமெரிக்கா வழி காட்டுவதாகவும் ஹார்வார்ட், ஏல், பிரின்கூடன், கொலம்பியா, பிரௌன், ரட்ஜர்ஸ்போன்ற இடங்களிலுள்ள சர்வ கலாசாலைகளில் மதப்படிப்பு புகட்டப்படுவதாகவும் முன்னர் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்கள் இப்பொழுதும் மதக்கல்வியைப் புகட்டுவதற்கனுகுணமாகத் திருத்தப்பட்டு வருவதாகவும் வியாசக் கருத்தா அந்த ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகிறார்.

சுயபுத்தியில்லாமல், தன் மதிப்பு இல்லாமல் கண்மூடித் தனமாக மேனாட்டாரின் கல்வி முறையைக் கைக்கொண்டதால்தான் நமது நாட்டுமக்களின் மதக்கொள்கைகளும் சன்மார்க்க நெறியும் தவறி இவ்வித அலங்கோல நிலைமைக்கு வந்துவிட்டது. ஆத்ம ஞானம், மதம் சம்பந்தப்பட்டவரை இவ்வுலகம் தோன்றியதுமுதல் இன்றுவரை மேனாட்டினருக்குக் கீழ் நாட்டினர்தான் அறிவுச் சுடர் கொளுத்தினர். மேனாட்டினர் இவ்விஷயத்தில் இதுவரை பூஜ்யமாகவே இருந்திருக்கின்றனர். இதைப் பொருத்தவரை அவர்கள் கீழ் நாட்டினரின் கைக்குழந்தைதான் என்பதை நம்மவர் உணர்ந்து மேனாட்டின

ரைப் பின்பற்றும் அந்த பரந்த நோக்கத்தையும் தாராள சிந்தையையும் கைவிட்டு நமக்குள்ளேயே பல அறிஞரைக்கூட்டி ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அமெரிக்காவில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயரும், ரஷ்யரும், ஜர்மானியரும், இத்தாலியரும் ஆக ஐரோப்பிய தேசத்தவரே இருக்கின்றனர். இவர்கள் யாவரும் கிறிஸ்து மதத்தைத் தழுவி இருப்பவர்கள்; இவர்களுக்குள் இருக்கும் பேதகமானது சிறுசிறு கக்ஷி பேதம் தான் ஆதலால் இவர்களை வெவ்வேறு மதத்தினர் என நினைத்துக்கொண்டு இவர்கள் ஏற்படுத்திய சட்டதிட்டங்களையும் போதனா முறையையும் இந்தியர் பின்பற்றுதல் என்பது குளிக்கப்போனவன் சேற்றைப் பூசி வந்த கதைபோல்தான் முடியும். ஏனெனில், நமது நாட்டிலோ முஸ்லிம், கிறிஸ்து, ஹிந்து போன்ற முப்பெரும் மதங்கள் ஒன்றுக்கொன்று அடிப்படையான அம்சத்தில்கூட எவ்விதச் சம்பந்தமுமில்லாத விதமாக இருக்கின்றன. சத்தியம், சகோதரத்துவம், மக்களுக்கு மக்கள் செய்யும் கடமை, கடவுளுக்கு மக்கள் செய்யுங் கடமை, ஒழுக்கம் என்ற விபரங்கள் இம்மதங்களில் பெயரில்மாத்திரம் ஒற்றுமையாக இருக்கின்றன. கிரியாம்சையில் அவைகள் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசப்பட்டவைகளா யிருக்கின்றன. ஆதலின் மேனாட்டுக் கல்விப் போதனாமுறையும் சட்டதிட்டங்களும் நமக்குப் பொருந்தாது. நமக்குப் பொருந்தும்படி செய்யக்கூடிய சிறந்த ஒளஷதம் நம்மவரிடமே இருக்கிறது. அதையே கண்டுபிடித்துச் செய்ய வேண்டும்.

இதற்கு நாமொரு யோசனை கூறக்கூடும்: அதாவது நம்மவரில் மதக் கல்வியை மாத்திரம் கற்றவர் என்றும் லௌஹீகக் கல்வியை மாத்திரம் கற்றவர் என்றும் இரண்டு பிரிவினர் உளர். இவ்விருபிரிவினரிலும் திறமைசாலிகளும் நிபுணர்களும் பலருளர். இவ்விரு சாராரும் மனம்விட்டு நேசப்பான்மையுடனும் தாராளசிந்தையுடனும் விஷயத்தை நன்கு கலந்து ஆலோசனை செய்தால் இதற்குத்தக்க மார்க்கம் கண்டுபிடிக்கப்படுவது நமக்குக் கஷ்டமல்ல. முதலில் ஏற்பட்டுப்போன ஒருவாறான தப்பபிப்பிராயம் நீங்கினாலொழிய நம்மவருக்கு நன்மை பயக்கக்கூடிய வழியை நாம் சுலபத்தில் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல.

நிற்க, வட இந்தியாவில் ஐக்கிய மாகாணம் பஞ்சாப்போன்ற மாகாணங்களில் முஸ்லிம்களில் உயர்தரக் கல்வி கற்றவர்கள் விகிதம் நமது சென்னை மாகாணத்திலில்லை இதற்குக் காரணம் யாதெனக் கவனிப்பதற்காக ஒரு விசாரணை நடத்தப்பட்டது. முஸ்லிம்கள் மதக்கல்வியை உயிர்போல் மதிக்கின்றனர். மதக்கல்வி இல்லா மமதைக்கல்வியை இரண்டாந்தரமாகவே கருதுகின்றனர். ஆதலால், 'இளமையிற்கல்' என்றபடி சிறுவர்களை முதலில் மதப்படிப்புக்கு அனுப்பி அப்பால் மமதைப்படிப்புக்கு அனுப்புவதால் அனாவசியமாகக் காலதாமதமேற்படுகிறது. ஆதலால் சிறுவயதிலேயே தக்கவிதமாகக் கல்வி புகட்டப்பட்டு உயர்ந்த படிப்புக்கு வரத் தடையேற்படுகிறது என்பதையுணர்ந்து இனிமேல் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் முஸ்லிம்களுக்கு மதப்படிப்பும் புகட்டப்படவேண்டும் என சென்னை அரசாங்கத்தார் ஒரு சட்டத்தைப் பிறப்பித்துவிட்டனர். இச்சட்டம் ஒழுங்குப்படி இடையில் எவ்விதக் கோளாறுக்கும் சூழ்ச்சிக்கும் வயப்படாமல் நிறைவேற்றப்படுமாயின் சர்க்காரின் உத்தேசப்பலம் ஐந்துக்கிரண்டு பழுதில்லாமல் கைகூடுமெனக் கூறலாம். ஆனால், இந்தியாவின் பிறவியிலேயே கலந்திருக்கிற தன்மையானது இதில் புகுந்துகொண்டது: உடனே ஹிந்துக்கள் தங்களுக்கும் மதப்படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும் எனக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இவ்விதக் கிளர்ச்சியும் அவசியமும் இதுவரை உணரப்படாத ஒரு வகுப்பாருக்கு இப்பொழுது ஏழைகளாய, சிறுபான்மையினராய, கல்வி, கைத்தொழில், வர்த்தகம் முதலிய பற்பல தொழிலும் பின்னடைந்திருக்கிற முஸ்லிம்களுக்கு ஒரு சிறு உதவி புரிய அரசாங்கம் ஒத்துக்கொண்டவுடன் சகல விஷயங்களிலும் உச்சஸ்தானத்தை அடைந்த ஒரு பெரும்பான்மை சமூகத்தினர் இத்துணை புழுக்கமும், பொறாமையும், வயிற்றெரிச்சலும் கொள்வதுதான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவ்விதக் குறுகிய மனப்பான்மையில் நமது சகோதர ஹிந்துப் பத்திரிகைகளும் சில படித்த மேதாவிகளும்கூடக் கிடந்துழல்கின்றனர். எனவே, யான் முன்னர் கூறியபடி மதக் கல்வியை மட்டும் கற்றவர் இளை

கிகக் கல்வியை மட்டும் கற்றவர் என்ற பாகுபாட்டையும், முஸ்லிம், ஹிந்து, கிறிஸ்தவன் என்ற ஜாதி துவேஷத்தையும் பொறுமையையும் அசூயையையும் அகற்றிக் கள்ளங்கபடமற்றவராய் மாசற்ற மனத்தை யுடையவராய் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற பரந்தநோக்கமும் தாராள சிந்தையும் கொண்டு ஒரு தாய்வயிற்றில் பிறந்த சகோதரர்களைப்போல் சம உரிமையுடன் இருந்து விஷயத்தைக் கொட்டி அளந்தால்தான் இனி வரப்போகும் நமது சந்ததியினர் மனம் பண்பட்டு துராசைகளை விலக்கி பாவ புண்ணியத்தைப் பகுத்தறிந்து சீரிய சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கத் தகுந்த ஒரு முறையை நமது பாடசாலையில் ஏற்படுத்தக்கூடும். இம்முறையை அதிக துரிதமாகக் கண்டுபிடித்து அமல் நடத்துவது நமக்கு மிகமிக அத்தியாவசியமுமாகும். சன்மார்க்கம் வாழ்க! சன்வார்க்கத் தொண்டர் வாழ்க! மதம் வாழ்க! மதத்தலைவர் வாழ்க!

ஹஸ்ரத் காஜாஹஸன் பஸரீ (ரஹ்)

இமாமுல் ஆரிபீன் ஹஸ்ரத் காஜா ஹஸன் பஸரீ (ரஹ்.) அவர்கள், ஹிஜ்ரீ 21-ம் ஆண்டு ஷஃபான் மதி 17-ன் அதிகாலையில் மதீனமா நகரில் ஜனனமானார்கள். ஹஸ்ரத் அவர்களின் மாதாவான உம்முல் மஹாவின் அவர்களுக்கும் ஹஸ்ரத் உம்முஸல்மா (ரலி.) அவர்களுக்குமிடையே நெறுங்கிய தோழமை இருந்ததால், உம்முல்மஹாவின் விசேஷமாய் மதினாவிலேயே வாசஞ்செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் ஜனனமானவுடன் உம்முஸல்மா (ரலி.) அவர்கள் மடியிலெடுத்து, ஹஸ்ரத் அவர்கள் அழகில் சிறந்து விளங்கியதால் தங்களுக்கு ஹஸன் என்னும் பெயர் நாமஞ்சூட்டக் கருதினார்கள்.

உம்முஸல்மாவின் பிரீதி

உம்முஸல்மா (ரலி.), ஹஸ்ரத் அவர்கள் மீது அளவற்ற பிரீதி கொண்டவர்களாக இருந்ததால் சதாவும் தங்களிடத்திலேயே வைத்திருந்தார்கள். அது பொழுது தாயார் அவர்கள் ஏதாகிலும் வேலையிலீடுபட்டிருக்குங்கால் ஹஸ்ரத் பசியின் மேலீட்டால் அழ ஆரம்பிக்கும்போது உம்முஸல்மா (ரலி.) அவர்கள் தங்கள் மார்பில் அணைத்துக் கொண்டவுடன் அல்லாஹுதஆலாவின் அற்புத சக்தியால் பால் வெளியாகி ஹஸ்ரத் அவர்கள் குடித்துவிட்டு அழாதிருந்துவிடுவார்கள். இப்பாலின் பயனானது அளவற்ற பிரயோசனத்தை அளித்ததென்பது வெள்ளிடை. தாங்கள் ஆரிபீன்களின் தலைவராக விளங்கினார்கள்; தங்கள் வார்த்தையில் அபார சக்திவாய்ந்த குணபாடு ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் கீர்த்திவாய்ந்த பிரசாரகராய்த் திகழ்ந்ததன் பயனாய், அவர்களின் ஒவ்வொரு வார்த்தையிலும் அதிஅற்புதமான சக்தி அமைந்திருந்தது; அவர்களின் அபார சக்தி அமைந்திருந்த பிரசங்கமானது அநேக உண்மைகளை வெளியாக்கக்கூடியதாக இருந்தது. இதன்பயனாய் மகான் அவர்களின் பிரசங்கங்களைக் கேட்போர் தெய்வபக்தி கொண்டவர்களாய்த் திகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

கல்வி

ஹஸ்ரத் அவர்கள் ஆரம்பமுதல் நுண்ணிய அறிவுடையவர்களாயும் ஆழ்ந்த சிந்தனையுடையவர்களாயுமிருந்து வந்தார்கள். உம்முஸல்மா (ரலி.) ஹஸ்ரத் அவர்களுக்கு குர்ஆன்ஷரீபைக் கற்பித்துக் கொடுத்து அதன் விசேஷக் கருத்துக்களையும் அறிவித்துக் கொடுத்தார்கள். 11 பிராயமானவுடன் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் சென்று கல்வியின்மீது தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அதன்மீது ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் அளவற்ற பிரீதியோடு கல்வி அறிவு கற்பித்து வந்ததன் பயனாக மாபெரும் தேர்ச்சியாளராய்த் திகழ்ந்தார்கள்.

மகான் அவர்கள், தங்கள் காலத்தின் பிரதான புருஷராய் விளங்கி வந்ததுடன் குர்ஆன் ஷரீபின் சகல நுட்பங்களையும் நன்கு தெரிந்துகொண்டவர்களாக இருந்

ததினால், அவர்கள் மிக மிக சிரேஷ்டராய்ச் சிறந்து விளங்கினார்கள். கூர்மையான அறிவுடையவர்களா யிருந்ததின் பயனாக பெரும் பெரும் கஷ்டமான மஸ்அலாக்களை எல்லாம் வெகு சுளுவில் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களாய்த் திகழ்ந்து வந்ததுடன் குர்ஆன் ஷரீபில் பொதிந்து கிடக்கும் அருமைப் பொக்கிஷங்களை மனம் கவரும் விதத்தில் எடுத்துக் கூறுபவராகவு மிருந்துவந்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் வெளிரங்கமான கல்வியில் விசேஷ தேர்ச்சியடைந்தவுடன் அல்லாஹ்த ஆலாவை அறிவது அதாவது, 'மஅரிபத்' என்னும் கல்வியைக் கற்றுக் கொள்ள விருப்பங்கொண்டு ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் மறுமுறையும் சென்று அவ்வழியிற் செல்லவேண்டிய முறைகளைத் தெரிந்துகொண்டார்கள். அதன்பின் அப்பாதையில் முயற்சித்து ஹிஜ்ரீ 41-ம் ஆண்டின் இரவுகளில் 150 ரக்அத் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டும் 3-ஆயிரம் சலவாத் ஓதிக்கொண்டு மிருந்தார்கள். இவ்வாறாக வணக்கம் புரிந்துவரும் நிலைமையிலும் ஹஸ்ரத் அவர்கள் திரேகம் திடகாத்திரமாக இருந்துவந்தது. எனவே இஷாத் தொழுகைக்குச் செய்யும் ஒளுவைக்கொண்டு சுப்ஹு தொழுகையை நிறைவேற்றுபவராகவும் பகலின் மிகசொற்பநேரமே தூங்குபவர்களாயும் இருந்தார்களென்று ஷெய்கு அபுல்பதஹ் கூறுகின்றார்கள். சிலகால் அழுகையில் ஆரம்பித்து விடுவார்களாயின் கண்களில் வீக்கமேற்பட்டுப் போய்விடும். இந்நிலைமையில் ஹஸ்ரத் அவர்களின் சிநேகிதரொருவர், தாங்கள் எதற்காக இவ்வாறு அழுகின்றீர்களெனக் கேழ்க்கவே 'யான் பாவவாளியாக இருப்பதால் அப்பாவத்தை நினைத்து அழுகின்றேன்' எனக் கூறினார்கள்.

ஒரு நாளன்று ஹஸ்ரத் அவர்கள் வீட்டு மாடியில் உட்கார்ந்திருக்குங்கால் ஒரு அரபிக் கவியைப் படித்து அழுதுகொண்டிருந்தார்கள். தற்செயலாக கண்ணீரின்று சிலசொட்டு பாட்டைசாரியாக நடந்துசென்ற ஒருவரின் சட்டைக்கையில் விழுந்தது. உடனே அம்மனிதர் இத்துளியானது சுத்தமானதா? அன்றி அசுத்தமுடையதா வென வினவினர். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், வெகு தாழ்மையோடு என் சகோதரரே! உன் சட்டைக் கையைத் துப்பரவு செய்துகொள்ளும் இந்தத் தண்ணீரானது பாவவாளியாகிய என் கண்ணிலிருந்து வெளிவந்ததாகும், எனக் கூறவே அம்மனிதர் பெரும் உணர்ச்சிபெற்றவராய் மௌனமாய்ச் சென்றுவிட்டார்.

உண்மை உரைத்தல்.

ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்கள் ஜாமிஃ மஸ்ஜிதில் "உண்மையை வெளியாக்கவேண்டும்" என்னும் பொருள்கொண்ட சொற்பெருக்காற்றிக்கொண்டிருக்குங்கால் ஹஜ்ஜாஜிப்னுயூசுப் அங்குவந்து பிரத்தியேகமான ஓர் இடத்தில் தனியே உட்கார்ந்துகொண்டார். ஹஸ்ரத் அவர்கள் தங்கள் பிரசங்கத்தினிடையே,

"இக் கூட்டத்தில் சிலர் வீற்றிருக்கின்றனர்; அன்னோர் தங்களை மானிடர்களின் பதவியைவிட மேலான பதவியிலிருப்பதாகக் கருதிக்கொண்டு ஒரு சாதாரணமான முஸ்லிமை தாழ்மையான ஒரு கொசுவைவிடக் கேவலமாக மதிக்கின்றனர்; அன்னோரிடம் எழைகள் உட்காருவது பாவமாகவும் வார்த்தையாடுவது பாவமாகவும் அவர்களிடம் தர்க்கம்புரிவது கொல்லப்படுவதற்குக் காரணமாகவு மிருக்கின்றது. எழையான ஒரு முஸ்லிம் சுயேச்சையோடு அவர்கள் முன்னிலையில் எதாகிலும் வார்த்தையாட நாடுவானாகில் அன்னோரின் வதனங்களில் கோபாக்கினி தோன்றி எவ்வகையிலும் தங்களுக்கு எற்பட்டுள்ள கோபத்தை அடக்கிக்கொள்ள சக்தியற்றவர்களாய் விடுகின்றார்கள். அல்லாஹ்த ஆலா, மனிதனுக்கு மனிதன் சாஷ்டாங்கம் புரிவதை விலக்கி இருக்கின்றான்; ஒருவர் தாழ்ந்தவர் மற்றொருவர் மேலானவர் என்னும் பாகுபாட்டை அடியோடு அகற்றி, எவன் பேணுதலுடையவனாக இருக்கின்றானோ அவன்தான் மானிடரில் சிரேஷ்டமானவனாகும் எனக் கூறியிருக்கின்றான். இத்தொனியின் பேரோசையானது உலகமெங்கணும் முழங்கிக்கொண்டிருக்கின்றது. மனிதன் தான் தானென்று கர்வங் கொள்வதை அழித்து ஒழித்துவிட்டது. எனவே இஸ்லாமென்னும் தோற்றத்தில் எழை, பணக்காரன், தலைமைக்காரன் வேலையாள் முதலிய சகலரும் ஒரேவிதமான அந்தஸ்து வகித்திருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கிடையே காணப்படும் வித்தியாசங்களெல்

லாம் சாலிஹான அமல்களும் ஆண்டவனுக்கு மிகுதம் பயந்து நடப்பதுமாகவே இருக்கின்றது. ஏ, அழிந்து நாசமாகப் போகக்கூடிய மானிடர்களே! எதற்காக அழிந்து நாசமாகக் கூடிய ஒரு சக்தியைக் கொண்டு பெருமை பாராட்டுகின்றீர்கள்; ஜனங்கள் உங்கள் அதிகாரத்தின்மீது வெறுப்புக்கொண்டிருக்கும் நிலைமையில் உங்களை அவர்களின் தலைவரென்று அழைப்பதற்கு விருப்பங்கொள்கின்றீர்களா" எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் இவ்வாறு சொற்பெருக்காற்றிக்கொண்டிருப்பதைக் கண்ட சபையினர், நிச்சயமாக ஹஜ்ஜாஜிப்னுயூசுப், ஹஸ்ரத் அவர்களைக் கொன்று போடும்படி உத்திரவிடுவானெனக் கருதினர். ஆனால் அவன் அவ்வாறு செய்யாது மௌனமாக வீடு சென்றுவிட்டான். ஒருவாரம் சென்றபின்னர் ஹஸ்ரத் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, சந்திப்பை விரும்புவதாகத் தெரியப்படுத்தி இருந்தான். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் அக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்து "அநியாயக்காரனுடைய கரம் தொட்டதை யான் தொடமாட்டேன்" எனக் கூறவே, அக்கடிதம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. உடனே ஹஸ்ரத் அவர்கள் அக்கடிதத்தின் பின்புறத்தில், அல்லாஹ்வின் மூர்க்க குணமுடைய அடியானாகிய ஹஜ்ஜாஜே! ஏழைகள், தாம் புரியும் அதிக்கிரமங்களைப் பார்த்து மனஞ்சகியாது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில் யான் உம்மைச் சந்திக்க விரும்பவில்லை என எழுதும்படி செய்து அக்கடிதத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இந்த ஜவாபைப் பார்த்தவுடன் ஹஜ்ஜாஜ் கோபத்திலாகி ஹஸ்ரத் அவர்களைக் கைது செய்துகொண்டு வரும்படி கட்டளை பிறப்பித்தான். அவ்வாறே கைதுசெய்யப்பட்டு அவனிடம் கொண்டு வரப்படவே 'என் விஷயமாக யாது கூறுகின்றீர்கள்' என வினவினான்.

காஜா சாஹிப்: நிச்சயமாக ஜனங்கள் உம்முடைய ஆக்ஷியை விரும்புகின்றார்களில்லை; நீர் ஏழைகள்மீது அதிகமாய் அதிக்கிரமம் புரிந்திருக்கின்றீர். ஆதலின் உம்மை அநியாயக்காரனென்று அழைக்காது போனால் யான் அநியாயக்காரனாய் விடுவேன் எனக் கூறினார்கள். இவ்வரும் மொழிகளைச் செவியுற்ற ஹஜ்ஜாஜ் உணர்ச்சிபெற்று ஹஸ்ரத் அவர்களை விடுதலை செய்துவிட்டான். இவ்வரும் நிகட்சியால் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது யாதெனில், ஒரு காலத்தில் நாம் வாள் முனையினுங்கூட உண்மையை வெளியாக்குகிறவர்களாக இருந்தோம்; ஆனால் துர் அதிர்ஷ்டவசமாய் இது காலை அவ்வாறான மகிமையை இழந்து உட்கார்ந்திருக்கின்றோம். இதன்பயனாய் வெட்கம் நாணத்தின் காரணமாய் நம்முடைய மனமானது துண்டு துண்டாய்ப்போயிருக்கின்றது. என்பதே. இந்தியாவில் வதியும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஈமானின் பலக்குறைவால் பகிரங்கமாக அநீதிக்கு அடிமைப் பட்டுக்கிடக்கும் நிலைமையில், தங்களை சரியான முஃமின்களென்று கூறிக்கொள்வதைப் பார்க்கின்றோம்.

உணர்ச்சிபெறுதல்.

ஹஸ்ரத் அவர்கள் ஒவ்வொரு ஜும்ஆ அன்றும் கபரஸ்தானுக்குச் சென்று வருவார்கள். இவ்வாறு சென்று வருங்கால், ஒரு நாளன்று ஒரு கபருக்குச் சமீபமாக நின்று பாத்திஹா ஓதிக்கொண்டிருக்கும்போது தலைவரொருவரின் ஜனாஸா அங்கு கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டவுடன் ஹஸ்ரத் அவர்கள் ஆவேசம் நிறம்பிய பிரசங்கமொன்று புரிந்தார்கள். அதில்,

சுவண்டியை அனுபவிப்பதென்னும் மதுவை அருந்தி மயக்கங்கொண்டிருப்பவர்களே! இன்று இவ்விடம் ஒருமகத்தான காட்சி தென்படுகின்றது: இங்கு கபர்களில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களெல்லாம் இவ்வுலகில் பெரும் சுவண்டியை அனுபவித்து காலங்கழித்தவர்களாகும். அவர்களின் தலைக்குமேல் பயமின்மையின் நிழலானது கொடையிட்டுக் கொண்டிருந்தது; இவ்வுலகின் அற்பவாழ்க்கையினைக்கண்டு மதிமயங்கி இருந்தார்கள். இவ்வுலகமானது நம்கண்முன் எவ்வளவு பகட்டாகத்தென்படுகிறதோ அவ்வாறே அவர்களுக்கும் தோன்றிக்கொண்டிருந்தது. அன்னோர் அதனைக் கண்டு ஏமாந்துபோய் கடைசியாக இங்கு வந்து மண்ணிற்குள் புதைக்கப்பட்டுப் போயிருக்கின்றார்கள். அவ்வாறே நாமும் புதைக்கப்படுவர்களாயிருக்கின்றோம். உலகமென்னும் விளக்கில் மாண்டு போகும்படியானவிட்டில் பூச்சிகளே! சற்றுகண் விழித்துப்பாருங்கள்! பூமியின்கண் தோற்றக்

208336
இ7m211,N30H1
N34.5.1-2

டிகூய பலவாறான காட்சிகள் அப்படியே இருந்துவரும் நிலைமையில் அதைப்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மாறிப்போய் விட்டார்கள். இன்று அவர்கள் சென்றுவிட்டார்களாதலின் நாளை நாம் செல்லக்கூடியது நம்முன் நிற்கின்றது. நீங்கள்யாவரும் இங்கு வந்து உணர்ச்சிபெற்றுக் கொள்வதின் கல்வியைக் கற்றுக்கொள்ள வில்லையா? இக்கூட்டத்தில் பலவாறான மனிதர்கள் வீற்றிருக்கின்றார்கள். தனவந்தர், ஏழை, உயர்பதவியுடையோன், தாழ்ந்தோன் முதலிய சகலருமிருக்கும் நிலைமையில்நல்லடியார்கட்குமட்டுந்தான் இங்கு சங்கை கிடைக்கும். இக்கபரஸ்தானில் தூங்கிக்கொண் டிருப்பவரில் சிலர் பாவிகளாகவும் சிலர் ஆண்டவனுக்கு பயந்துநடந்த பேணுதலுடையவராகவும் இருக்கின்றார்கள். எவர்கள் பேணுதலுடையவராக இருந்தார்களோ அன்னோர் ஜயம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் உலகிலிருக்குங்கால் பலவாறான கஷ்டசங்கடங்களை அனுபவித்தும் மட்டில்லா துன்பங்களுக்காளாகியும் சற்றேனும் அதனைப்பற்றிய தூஷணையை வெளிப்படுத்திக் காட்டினார்களில்லை. ஏ சுவண்டியிலும் பலவாறான இன்பசுகங்களிலும் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்பவர்களே இன்று இவ்வாறான பாழடைந்துபோன காட்டில் படுத்துத்தூங்கிக்கொண்டிருப்பவர்கள் ஒருகாலத்தில் எவ்வாறான அழகுபொருந்திய மாடமாளிகைகளில் படுத்துக் காலங்கழித்து வந்தார்களென்பது உங்களுக்குத் தெரியாதா? அன்னோர் எவ்வளவு கியாதி வாய்ந்தவர்களாயும் யாதொரு கவலையுமின்றி காலங்கழிப்பவர்களாயு மிருந்தார்களென்பது உங்களுக்குத் தெரியாததன்று. அவர்களின் திரேகம் விலையுயர்ந்த ஆடைகளைக்கொண்டு சிங்காரிக்கப்பட்டிருந்தும் இன்று ஒருசாதாரண உடையில் அடங்கிக்கிடக்கின்றது. சுருங்கக்கூறின் 'அஜல்' என்னும் தவணையானது இன்னோரின் சுவண்டிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி வைத்துவிட்டது. ஆதலின் இன்னோர் மண்ணின்மீது படுத்திருக்கின்றார்கள். ஓ ஜனங்களே! இவ்வரும் நிகட்சியைக்கண்டு நீங்கள் உணர்ச்சி பெறலாகாதா? நீங்கள் மறு உலகயாத்திரைக்காக ஏதாகிலும் முற்கூட்டியே தங்கரியஞ் செய்துவைக்கலாகாதா? எனக்கூறினார்கள்.

ஹஸ்ரத்அவர்களின் இவ்வரும் மொழிகளைச் செவியுற்றவர்களின் கண்களிலிருந்து தண்ணீர் வடிந்துகொண்டிருந்த தென்றும் மனங்கள் உருகிப்போய் நிலையற்றதாக ஆய்விட்டதென்றும் ராபிஉஇப்னு மாலிக் அவர்கள் கூறி இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அவர்கள், வீட்டின் அறை ஒன்றில் கிரந்தம் வாசித்துக்கொண்டிருக்குங்கால், பனூஆஸிம் குடும்பத்திலுள்ள ஒரு இளமாது ஹஸ்ரத் அவர்களிடம் வந்து, யான் இஸ்ஹாகிப்னு மாலிக்கின் மனைவியாகும்; யான் கணவர்மீது அளவற்ற பிரீதி கொண்டிருக்கின்றேன்; ஆனால் அவர் வன்னஞ்சமுடைய அநியாயகாரரா யிருப்பதால் என் பரிதாப நிலைமையின்மீது சற்றும் கவனஞ் செலுத்துகின்றாரில்லை எனக் கூறினாள். அம்மாது தன் மனவிருப்பம் அவ்வாறிருப்பதைக் கூறுங்கால் முகம் திறந்ததாயும் நெஞ்சிலிருந்து துணி அகன்றதாயும் கை திறந்ததாயு மிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் இதனைப்பார்த்து ஏ மாதே! திரேகத்தைமறைத்துக்கொண்டு பேசுவாயாக! எனக்கூறினார்கள். அதற்கு அம்மாது, எனக்கு பெரும் ஆச்சரியமாக இருக்கின்றது! யான் என் புருஷன்மீது கொண்டுள்ள அன்பின் பிரீதியால் என் திரேகத்தில் யாதிருக்கின்றது? எந்த பாகம் வெளியாகிக்கொண்டிருக்கிறதென்றுகூட அறிந்துகொள்வதற்கு உணர்வில்லாதவளாக இருக்கின்றேன்; தாங்கள் அல்லாஹ்த ஆலாவின்மீது பிரீதிகொண்டு அப்பிரீதியிலேயே மூழ்கிப்போயிருக்கும் நிலைமையில், என் திரேகத்தின் சிலபாகம் திறந்திருப்பதைத் தாங்கள் தெரிந்துகொள்ளும் நிலைமையிலிருப்பது பேராச்சிரியமாக இருக்கிறதென்று கூறினாள். ஹஸ்ரத் அவர்கள் இவ்வார்த்தையைச் செவியுற்றவுடன் அதனால் பெரும் உணர்ச்சி பெற்றுக்கொண்டார்கள்.

ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்கள் 'தஜ்லா' கடல் கரையில் உலாவிக்கொண்டிருக்குங்கால் ஒரு ஹபஷியின்மீது இவர்களது பார்வை விழுந்தது. அவன் ஒரு மரத்திற்குக் கீழால் ஒரு பெண்ணை அணைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் நிலைமையில் ஒரு பாட்டலைத் திறந்து அதிலிருந்து தானும் குடித்துக்கொண்டு அப் பெண்பிள்ளைக்கும் கொடுத்துக் கொண்டிருந்தான். இதனைப் பார்த்தவுடன் இவன் பெரும் பாவஞ்செய்யக்கூடிய குடிகாரனாக இருக்கிறான்போலும்; இவனைவிட தாங்கள் மேலானவர்களாகும்,

என்னும் எண்ணம் ஹஸ்ரத் அவர்களின் மனதில் தோன்றிற்று. இவ்வெண்ணம் ஏற்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு படகு தென்பட்டது. அப்படகு பெரும்புயலில் அகப்பட்டதேபோல் தோன்றிற்று. அதில் அறுவரிருந்தனர். அக் கடல்கரையில் வீற்றிருந்த ஹபஷியானவன் அந்த அபாயத் தோற்றத்தைப் பார்த்தவுடன் உடனே கடலில் குதித்து அளவற்ற பிரயாசையோடு ஐந்து நபர்களைக் கரைகொண்டு சேர்த்துவிட்டான். இவ்வாறு அவன் ஜெயம்பெற்றபின் ஹஸ்ரத் காஜாசாஹிப் அவர்களை நோக்கி, ஏ மகானே! தாங்கள் என்னைவிட மேலானவர்களாயிருப்பீர்களாயின் கடலின் அலையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஆறுவது மனிதனைக் கரைகொணர்ந்து சேர்த்துவிடுங்கள் பார்ப்போம்? எனக் கூறிவிட்டு, மறுபடியும் கடலில் குதித்து அம்மனிதனையும் கரைகொணர்ந்து சேர்த்துவிட்டான். இச்சம்பவத்திற்குப்பின் அம்மனிதன் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, ஏ நேர்வழி காட்டக்கூடியவர்களே! தாங்கள் ஒருவனுடைய வெளிரங்க தோற்றத்தைக்கண்டு அந்தரங்கத்தை எவ்வாறு தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? இதுபொழுது, யான் பாவஞ் செய்யக்கூடிய குடிகாரனல்லவென்பதை அறிவித்துத் தருகின்றேன்: அதாவது, இந்தப் பெண்பிள்ளை என் தாயாகும். இந்த பாட்டலில் தண்ணீர் இருக்கிறது சாராயமில்லை எனக் கூறினன். ஹஸ்ரத் அவர்கள் இவ்வார்த்தையைச் செவியுற்றவுடன் அந்த ஹபஷியின் பாதத்தில் விழுந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளும்படியும் அவருடைய பதவியை அறியாது போனது வருந்தற் குறியதென்றும் கூறினர்கள்.

மகானன ஹஸ்ரத் அவர்கள், ஹிஜ்ரீ 111-ம் ஆண்டு ஜமாதுஸ்ஸானிமீ 27-ந்திகதி மரணமடைந்து பஸராவிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இஸ்லாமிய பர்தா

நமது அருமைத் தாய் நாடானது அடிமைப் பட்டிருக்கிறது. இவ்வடிமை நாட்டை ஆளுபவர்கள் அந்நிய நாட்டினரான மேனாட்டினராக இருக்கின்றனர். இம்மேனாட்டுச் சீதோஷ்ண நிலைமையோ நமத நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கு ஒத்திலலை. இந்நாட்டின் பழக்க வழக்கமோ அந்த நாட்டுப் பழக்கவழக்கத்திற்கு ஒத்ததல்ல. இந்நாட்டின் கலையும் ஞானமும் நாகரீகமும் அந்நாட்டின் கலைக்கும், ஞானத்திற்கும் நாகரீகத்திற்கும் வேறானவை. இந் நாட்டு மக்களின் கொள்கையோ தெய்வ பக்தியிலும், தெய்வ நியதியிலும் சார்ந்ததாக இருக்கிறது. அந்நாட்டு மக்களின் கொள்கையோ பெரும்பாலும் தங்களது சுயநம்பிக்கையிலும் சுய முயற்சியிலும் லகித்து தெய்வபக்தி யற்றதாக இருக்கிறது. எனவே, அந்நாட்டு மக்கள் தங்களுக்கு பல துறைகளிலும் வேறுபட்ட இந்நாட்டை எப்படியோ கைப்பற்றி இப்பொழுது ஆட்சி புரிந்து வருகின்றனர். நாமோ தற்சமயம் நமது குறையினல் அடிமைப் பட்டுழல்கின்றோம். இவைகளெல்லாம் அரசியல் சம்பந்தமான நமது குறைகளினல் ஏற்பட்டவை. நாம் செய்ததவறுக்குத் தண்டனையாக அரசுரிமையை அந்நியரிடம் ஒப்புவித்து அடிமைப்பட்டு விட்டோம். எனவே, இக்காலத்தைய நமது மக்கள் அரசுரிமையில் அடிமைப் பட்டிருப்பது போதாதென்று நமது பழக்கவழக்கத்திலும் அடிமைப் பட்டு வருகிறார்கள். இவ்விதம் அடிமைப்பட்டவர்கள், நமது நாட்டின் மக்களில் யாவரும் எவ்வித ஜாதிமத பேதமின்றிச் சேர்ந்திருந்தாலும் ஏனையமதத்தவரைப்பற்றி எழுத நமக்கு எவ்வித அதிகாரமோ உரிமையோ இல்லை. ஆயினும், நமது சத்திய இஸ்லாத்தைப் பின்பற்றிய மக்களைப் பற்றிக் கவலைகொள்ள முஸ்லிமாக உள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையும் கடமையுமுண்டு. இவ் வுரிமையை அனுசரித்தே இவ்வியாசம் வரையப்படுகிறது. எனவே,

இவ்வியாஸத்தில் மேனுட்டு நாகரீகத்தைக் கண்மூடித்தனமாகப் பின் பற்றுபவர்களை "ஜெண்டில்மேன்" என்றும் பகுத்தறிவுக்காரரென்றும், முன்னேற்ற வாதியென்றும் யாம் கூறுவோமாயின் தனிப்பட்ட நபர்கள் யாரும் தங்களைத்தான் கூறுவதாகக் கொள்ளற்க. தனிப்பட்ட நபர்களைப்பற்றிக் குணதோஷங் கூறுவது எமது நோக்கமுமன்று. இவ்விதமான மனப்பான்மையுள்ளோர் தங்கள் சொந்த ஹோதாவில் செய்துகொள்வதை யாம் பலமாக ஆக்ஷேபிக்கத் தயாராகவுமில்லை. ஏனெனில், இவ் வாங்கில ஆட்சியில் யாரையும் நிர்ப்பந்திக்கமுடியாது. முஸ்லிம் சகோதரர் என்ற முறையில் சகோதர வாஞ்சையாலும் இஸ்லாமியக் கடமையாலும் யாம் எடுத்துக்கூறுவோம் எனினும், இத்தகையோர் தங்களது தவறிய கொள்கையைப் பிறரிடமும் பிரசாரம்செய்து வருவாராயின் அதனை ஆக்ஷேபிக்கவும், அதிலிருக்கும் அனுசாரங்களையும், அருவருக்கத்தக்க விஷயங்களையும் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டி இஸ்லாமிய சன்மார்க்கச் சட்டங்களின் தன்மையை விளக்குவது கடமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பர்தா என்பது இன்னது என்று முஸ்லிம் சகோதரர்கள் யாவரும் பொதுவாக நன்கறிவர். ஆதலின், அதன் விருத்தாந்தத்தை அதிகம் விவரிக்கவேண்டியதன்று. எனினும், ஜெண்டில்மேன்கள், பர்தா சம்மந்தமாக மேனுட்டினரைப் பின்பற்றிச் செய்யும் இந்தக் காரியம் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு ஒத்ததென்றும், இதுவரை வழக்கத்திலிருந்துவந்த பர்தாவானது இஸ்லாமிய ஷரீஅத்துக்கு விரோதமானதென்றும், இதனை யுற்பத்தி செய்தவர்கள் இடைக்காலத்தில் தோன்றிய சில புகஹாக்களென்றும் இதற்கு இஸ்லாத்தில் எள்ளத்தனையும் ஆதாரம் கிடையாதென்றும் எடுத்துக்காட்ட முயற்சிக்கின்றனர். அதற்குச் சிறிது சமாதானம் கூறுவாம்.

பர்தாவை ஆதரிப்போரின் முழுக்கவனமும் கித்தாப், சுன்னத் ஆகியவைகளிலேயே இருக்கிறது. தங்களுக்கு அவசியமான ஒவ்வொரு காரியத்திற்கும் திருகுர்ஆன், ஹதீது ஆகியவைகளின் தீர்மானத்தையே எதிர்நோக்குகின்றனர். ஆனல், ஜெண்டில்மேன்களோ திருகுர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மிக மிகத் தூரத்திலிருக்கிற ஐரோப்பியமேனுட்டு நாகரீகத்தையே முக்கியமாகக் கொள்கின்றனர். எனவே, தங்களுடைய நோக்கப்படி திருகுர்ஆனுக்கும்ஹதீதுக்கும் வியாக்யானம் செய்து, தங்கள் செய்கை சரியென ருஜுப்பிக்கப் பிரயத்தனப் படுகின்றனர். சுருங்கக் கூறுமிடத்து, தங்களுடைய ஒவ்வொரு செய்கைக்கும் ஐரோப்பிய நியூ பாஷனை நீதிபதியாக்க நினைக்கின்றனர் என்றே கூறவேண்டும். ஆனல், தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்வதாலும் இஸ்லாமிய சகோதரத்துவம் என்ற வட்டத்திற்குள் இருக்கப் பிரியப்படுவதாலும் பகிரங்கமாக இதைச் சொல்லிக்கொள்ள சங்கடப்படுகின்றனர். இவர்கள் திருகுர்ஆனுக்குச் செய்யும் வியாக்யானங்களையும் தாத்பரியங்களையும் கூடார்த்தங்களையும் லாகூர் லக்ராமும், காதியாணி குலாம் அஹ்மதும், சக்டால் அப்துல்லாஹ்வும் கண்டால் தங்களுடைய "திறமை" யினும் இவர்கள் "திறமை" அம்மா பெரிதென்றகமகிழ்வர்.

எனவே, இவ்விதக் கொள்கைக்காரர்களுடன் வரைதுறையில்லாமல் விவாதம் புரிந்தால் அதற்கு முடிவுகாண்பதே முடியாத காரியமாகும். ஆதலின், அதற்காக ஒரு முறையை நாம் கைக்கொள்ளவேண்டும். இவ்வித முறை நம்மவரால் எடுக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. ஸஹாபிகள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள் முஜ்தஹிதுகளான இமாம்கள் ஆகியவர்கள் கையாண்ட முறையையே பின்பற்றவேண்டும். அவ்வாறில்லாமல் சுயமே இஜ்திஹாத் செய்வதென்ருல் இப் பகுத்தறிவாளர்கள் செய்யும் சுய நிர்ணயப் பிரயோகத்தின் முன் இமாம் அபூஹனீபா, இமாம் கஜ்ஜாலி, இமாம் ஷாபிஈ, இமாம் ராஜீ, இமாம் இப்னுஹஜர், ஷாஹ் வலியுல்லா தெஹ்லவீ ஆகிய பாரவான்களின் மூளை எல்லாம் மூலைக்குப்போகவேண்டியது தான் என்று சொல்லவேண்டும்.

1. ஒரு ஆயத்தில் கூறப்பட்ட ஒருவிதியானது விபரமில்லாமல் பொதுவாகஇருக்குமாயின் அதற்குரிய விபரத்தை அது சம்பந்தமாகவுள்ள வேருெரு ஆயத்திலிருந்து எடுக்கவேண்டும். தாங்கள் கூறும் பிரச்சினைக்கு ஆதாரமாக அந்த விவரமில்லாத ஆயத்தை

மாத்திரம் வைத்துக் கொண்டு விபரமாக வுள்ள மற்ற ஆயத்துகளைக் கவனிக்காமல் விட்டு விடுவதும் அதனை அசட்டை செய்வதும் கூடாது.

2. திருகுர்ஆனில் விபரமில்லாமல் வந்திருக்கும் ஆயத்துகளுக்குத் திருக்குர் ஆனிலிந்தே விபரம் கிடைக்க வில்லையாயின் ஸஹீஹான (உண்மை யென்று ருஜூப்பிக்கப் பட்ட) ஹதீதுகளிலிருந்து அதற்கு விபரம் தெரிந்து கொள்ளவேண்டியதிருக்கிறது. ஒரு ஹதீதானது நம்பத்தக்க ராவீகள் மூலமாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதுதான் என்று ருஜூவாய் விட்டால் பின்னர் அதை ஒப்புக் கொண்டு அதில் கூறப்பட்டிருக்கும் விதியை அனுசரிப்பதில், அது திருக்குர் ஆனுக்கு அடுத்த பதவியில் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஏனெனில், திருக்குர் ஆனுக்குச் சரியான விதத்தில் வியாக்யானஞ் செய்பவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாக இருக்கிறார்கள். நாயகமவர்கள் முபஸ்ஸிருல் குர்ஆன் என்றும் அழைக்கப்படுகிறார்கள். எனவே, திருக்குர் ஆனை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு எல்லா விஷயங்களையும் அதிலிருந்தே விபரமாகத் தெரிந்து கொள்ளலாம் என நினைத்து ஹதீது ஷரீபுகளை அலக்ஷியம் செய்வதானது வழிகேட்டில்தாம் கொணர்ந்து விடும். எவ்விதமெனில், அப்துல்லாகக் டாலவி என்பவர் ஆங்கிலங் கற்றவர்களுக்கு வழி காட்டுவதாகக்கூறி அவர்களைப் பாதாளத்தில் தள்ளிவிட்ட கதையைப்போலாகும். இவர் திருகுர் ஆனிலிருந்து மாத்திரம் மார்க்கச் சட்ட விதிவிலக்குகளைக்கூற ஆரம்பித்து விபரமில்லாச் சட்டதிட்டங்களுக்குத் தமது சார்பாகத் தப்பான வியாக்யானம் செய்து கொள்கின்றனர்.

3. குர்ஆன் ஹதீது ஆகியவைகளில் ஒரு பிரச்சினை சம்பந்தமான மாறுபட்ட கட்டளைகள் தென்படுமாயின் அதுசமயம் அந்த ஆயத்துகளும் ஹதீதுகளும் எந்தச்சந்தர்ப்பத்தில் எந்தக்காரணத்திற்காக எந்தக்காலத்தில் சொல்லப்பட்டவை, இவைகளில் முந்திய கட்டளைகள் எவை, பின்னர் சொல்லப் பட்ட கட்டளைகள் எவை என்பதையெல்லாம் கவனித்துச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட கட்டளைகள் ஹதீது கித்தாபுகளில் பலவிருக்கின்றன. ராவிகள் எல்லா ஹதீதுகளையும் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இவர்களது அலுவலும் தாங்கள் தாங்கள் கேட்டதைத் தெரிவிக்கவேண்டும் என்று தானிருந்தது. இவைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகளை விவரித்துக் கூறும் வேலை முஜ்தஹிதுகளான இமாம்களின் வேலையாக இருந்தது. இதற்கு மாறாகச் சிலர் தங்களது வரைதுறையில்லாச் சுய நிர்ணயப் பிரயோகத்தைச் செய்து பற்பலவிதமாக பிரிவுகளை முஸ்லிம்களுக்குள் உண்டுபண்ணி இஸ்லாமிய சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் உருக்குலையச் செய்துவிட்டனர்.

4. குர்ஆன் ஹதீது ஆகியவைகளுக்கு அறபி இலக்கண இலக்கியச் சட்டப்படி பற்பல விதமான பொருள் செய்யச் சந்தர்ப்பம் ஏற்படுமாயின் அதுசமயத்தில் ஸஹாபிகள் தாபியீன்கள் தபஉத்தாபியீன்கள், முற்காலத்தைய முபஸ்ஸிரீன்கள், இமாம்கள் கூறிய அபிப்பிராயத்தைத் தழுவியே பொருள் கொள்ளவேண்டும்.

“மூமினானவர்கள் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்” என்றும் “தங்களுடைய வெட்க ஸ்தலங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்” என்றும் திருகுர் ஆனில் கூறப்பட்டிருக்கிறது. இதை நமது ஜென்டில்மேன்கள், பெண்களின் பர்தா சம்பந்தமான ஆயத்தல்ல; இந்த ஆயத்தில் ஆண் பெண் ஆகிய இரு பாலருக்கும் பொதுவான விதிதான் கூறப்பட்டிருக்கிறது; இந்த ஆயத்தினால் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; மறைக்க வேண்டிய அவயவங்களை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று மாத்திரமே கூறப்படுகிறது என்று வாதிக்கின்றனர். மெய்தான். இந்த ஆயத்து ஆண் பெண் ஆகிய இரு பாலாருக்கும் பொதுவானதுதான். ஆணையினும் பெண்ணையினும் அந்நியர்களைப் பார்க்கக்கூடாது என்பதும் பார்வையைத் தாழ்த்திக்கொள்ளவேண்டும் என்பதும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பது உண்மையே. ஆனால், தங்களுடைய வெட்க ஸ்தலங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதற்கு மறைக்கவேண்டிய அவயவங்களைத் துணியால் மறைத்துக்கொள்ளவேண்டும் என்று

பகுத்தறிவாளர் பகருவது சரியான பொருளாகாது. திருகுர்ஆனில் எங்கெந்த இடங்களில் வெட்க ஸ்தலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றதோ அந்தந்த இடங்களிலெல்லாம் பெரும்பாலும் விபசாரம் செய்யாமலிருக்கவேண்டும் என்ற கருத்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

தவிரவும், இவ்வாயத்தில் கூறப்பட்ட இவ்விரு விதிகளும் மாத்திரம்தான் ஆண்களையும் பொருத்துக் கூறி ஆடவர்களின் பரிசுத்தத் தன்மைக்கு இதுவே பெரும்பாலும் போதும் என்பதை சுட்டிக்காட்டும் நோக்கத்தில் "இது ஆண்களுக்கு மிகப் மிகப் பரிசுத்தமானது" என்று கூறுகிறது. அப்புறம் அதே ஆயத்தில் பெண்களுக்கென வேறு நான்குவிதமான வரையறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன: தங்களுடைய அழகைக் காட்டக்கூடாது என்று கூறி இருக்கிறது. எனினும், அதில் வெளியானதைத் தவிர என்று விலக்கு ஒன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விலக்கை ஆதாரமாகக்கொண்டு ஸ்திரீகள் தங்கள் முகங்களையும் கைகால் போன்ற அவயவங்களையும் வெளிப்படுத்தி உலாவலாம் எனக் கொள்வது கூடாது. முகம் கை கால்தான் மனிதருக்கு அழகைக் காட்டும் முக்கிய கருவிகளாயிருக்கும்போது அதைமட்டும் வெளிப்படுத்தலாம் என்று யூகித்தெடுப்பதுபொருந்தாது. எனவே, அவ்விலக்கானது உடைக்குமேல் தெரிவதைத் தவிர என்றுதான் கொள்ளவேண்டும். இவ்விதம் கருத்துக்கொள்ளாமல் முகம் கை கால் இவைகளை எல்லாம் திறந்து போட்டுக்கொண்டு பெண்டீர் வெளியிற் செல்லலாம் என பகுத்தறிவாளர் கூறுவதை ஒப்புக்கொள்வதாயின் இந்த ஆயத்து வந்ததன் பலனே இல்லாமலாகிவிடும். ஏனெனில், கிறிஸ்தவராகட்டும், மஜூஸியாகட்டும், யூதராகட்டும், கன்பூஷியஸராகட்டும், புத்தர்களாகட்டும், ஜைன ராகட்டும், இந்துக்களாகட்டும், இன்னும் வேறு எவருமாகட்டும் இவர்களிலுள்ள எந்த ஸ்திரீயும் நிர்வாணமாக அலைவதில்லை. பர்தாவழக்கத்தை அனுஷ்டிக்காத இவர்களும் கை கால் இவைகளில் சிறிது பாகத்தையும் முகத்தையும் தவிர தேகத்தின் ஏனைய பாகங்களை ஆடையால் மறைக்கின்றனர். ஆதலின், இந்த ஆயத்தினால் இஸ்லாமிய ஸ்திரீகளுக்கு விசேஷித்த கட்டளை வந்ததாக ஏற்படமாட்டாது. எனவே இந்த ஆயத்தின் மூலமாக ஸ்திரிகளும் புருஷர்களும் அந்நியரைப்பார்க்கவும் கூடாது, விபசார தோஷத்திற்காளாகவும் கூடாது, ஸ்திரீகள் தங்களது அங்கங்களை மறைத்துக்கொள்ளவேண்டும் என்று ஏற்படுகிறது.

இதை இந்த நவநாகரீகக்காரர்கள் பார்த்து புதிய ஒரு பிரச்சினையைக் கிளப்புதல் தகாது. அதாவது இந்த ஆயத்தின்படி ஸ்திரீகள் தங்கள் தேகத்தை மறைத்துக்கொண்டு வெளியிற் செல்லலாம் என்று வாதிக்கக்கூடும். இதுவும் சரியன்று. ஏனெனில், ஸ்திரீகள் சம்பந்தமாக திருகுர்ஆனின் சூரத்து அஹ்ஸாபில் "ஸ்திரிகள் வீட்டிற்குள் தங்கி இருக்கவேண்டும், இஸ்லாத்திற்கு முன் காலமாகிய ஜாஹிலிய்யத்தில் வெளிப்புறப்பட்டதுபோல் வெளியேறித் திரியக்கூடாது. இன்னும் தொழுகையை நிறைவேற்றுங்கள். ஜக்காத்தைக் கொடுங்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபடுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்தின் கட்டளைப்படி ஸ்திரீகள் முற்காலத்தில் கட்டுதிட்டமில்லாமல் கண்டபடி வெளியில் உலாவித் திரிந்ததுபோல் உலாவித் திரியாமல் வீட்டிலமர்ந்திருக்க வேண்டும் என்பது நன்கு தெரிகிறது. ஆனால், நமது ஜெண்டில்மேன்கள் இந்த ஆயத்து, நபிகள்நாயகமவர்களின் வாழ்க்கைத் துணைவிகளுக்கென வந்தது என்றும் பொதுவாக எல்லா ஸ்திரீகளுக்கும் வரவில்லை என்றும் வாதிக்கின்றனர். இது தவறு. ஏனெனில் இந்த ஆயத்தில் கூறப்பட்ட கட்டளைகள் ஐந்து. அவைகளாவன :—வீடடங்கி இருத்தல், வெளியில் கண்டபடி திரியாதிருத்தல், தொழுதல், ஜக்காத்துக் கொடுத்தல், அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் வழிப்படுதல்.

இந்த ஐந்து விதிகளில் எல்லா ஸ்திரிகளும் கட்டுப்படவில்லை யாயின் ஏனைய ஸ்திரிகள் மீதும் தொழுகை, ஜக்காத்து, அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும் வழிப்படுதல் ஆகியமூன்றும் விதிக்கப்பட்டடில்லையா? கடமையில்லையா? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். ஒரு ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளிற் சில,சில குறிப்பிட்ட ஸ்திரிகளுக்கு மட்டுமென்றும், மற்றுஞ்சில எல்லா ஸ்திரீகளுக்கென்றும் சட்டம் வருமா? அவ்வாறு ஒன்றுக்குள் பலதும் இணைக்கப்படுவது வழக்கமில்லையாதலின்,

இந்த ஆயத்தில் கண்ட எல்லா விதிகளும் எல்லா ஸ்திரீகளுக்கு மென்றே கொள்ள வேண்டியதிருக்கிறது. தவிரவும், பிரபல வியாக்யானிகளெல்லாம் இந்த ஆயத்து வெளியாகுவதற்கு நாயகமவர்களின் நம் பிராட்டிமார்கள் காரணஸ்தராக இருந்தா லும் இதில் கூறப்பட்ட விதிகள் யாவருக்கும் பொதுவானதே என்று விளக்கிக் கூறியுள் ளார்கள். எனவே மேலே கூறப்பட்ட எல்லா ஆயத்துகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது அனுவசியமாக ஸ்திரீகள் வெளியிற் செல்லக்கூடாது என்பதையும், வீடடங்கி இருக்கவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்வதுடன் வெளியிற் செல்லவேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமுமேற்படின் அது போது தங்களது திரேகத்தை மற்றவர் பார்க்காவண்ணம் மறைத்துக்கொண்டு, பிற ரைப் பார்க்காமல் குறித்த அலுவலுக்குச் செல்லலாம் என்று தெரிகிறது. இதற்கு ஆதாரமாக ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவா யத்தும் சாக்ஷியங் கூறுகிறது. அதாவது, "நிர்ப்பந்தமின்றி வீட்டைவிட்டு வெளியே றிச்செல்லும் விஷயத்தில் ஸ்திரீகளுக்கு (ஆட வர்களிடம்) பங்கு இல்லை. இன்னும், ரஸ்தா வில் நடக்கும் விஷயத்தில் அதன் ஓரங்களில் நடப்பதைத் தவிர (நடு ரஸ்தாவில் நடக்க) ஸ்திரீகளுக்கு உரிமையில்லை என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார் கள்" என்பதே.

இந்த ஹதீதிலிருந்தும் சிலர் ஸ்திரீகள் வெளியிற் செல்ல அனுமதி இருப்பதாக வாதிக்கின்றனர். அதாவது நிர்ப்பந்தமின்றி என்ற நிபந்தனை இருப்பதால் அவசியத்தின் நிமித்தம் வெளியிற் செல்லலாம்; சதா வீட டங்கி இருப்பதில் ஸ்திரீகளின் திரேகம் கெட் டுப் போகிறது; திரேகத்தைக் காப்பாற்றும் அவசியத்தின் நிமித்தமாக வெளியிற் சென்று நல்ல காற்றையுட் கொள்ளலாம் என்கின்ற னர். இந்த வாதம் பொருந்தாது. வெளியில் உலாவச் செல்லாவிட்டால் திரேகம் கெட்டுப் போகும் என்றால், வெளியில் உலாவச் செல் லுவோரெல்லாம் சிக்கின்றி திடகாத்திரமாக இருப்பதாக ஏற்படவேண்டும். வயித்திய சாஸ்திர நிபுணர்கள் இவ்வாறு கூறுவதில்லை. எனவே, இவர்கள் அவசியமெனக்கூறும் காரியம் அவசியமாக ஏற்படுவதில்லை.

தவிர, சென்னை, பம்பாய், கல்கத்தா, லாகூர் முதலிய முக்கிய பட்டணங்களில் இருக்கிற ஸ்திரீகள் வெளியில் வந்தால் பஜா ரைப் பார்க்காமலிருக்க முடியுமோ? என்ப தை இந்த ஜன்டில்மேன்களே நிதானிக்கட் டும். இந்த நகரங்களிலுள்ள கடைத்தெருக் களிலிருக்கும் ஷாப்புகளின் அலங்கார மென்ன? சினிமாக்களென்ன? இதர தமா ஷாக்களென்ன? மோட்டார் வாகனமென்ன? டிராம் வண்டிகளென்ன? யுவர்களின் நவ நவமான உடையென்ன? தடபுடலென்ன? இவைகளை எல்லாம் அந்த ரஸ்தாவில் நடக் கும் ஸ்திரீ பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்ள முடியுமா? இது மனித இயற்கை யால் சாத்தியப்படுமா? என்பதைச் சிந்திக் கட்டும். இதனால் ஸ்திரீகளை அவமதிப்பதாகக் கருதவேண்டாம். ஸ்திரீகள் பிறரைப் பார்க் கக்கூடாது என்ற தடையை மீறவேண்டிய தேற்படுமன்றோ? இவ்வாறு மீறிவிட்டால் இதன்பயன் நாளடைவில் எவ்விதம் வரும் என்பதை யாவரும் சிந்திக்கவேண்டியதாக இருக்கிறது. தவிரவும், விபசாரம் வேண் டாம் என விலக்குச் செய்துவிட்டு ஸ்திரீ களைக் கெட்ட நடப்புக்குக் கொண்டுவந்து விடக்கூடிய இதர காரியங்களில் கவனஞ் செலுத்தாதுவிட்டால் அந்த விலக்குச் சரி யாக அமல் நடத்தப்படுமா? எனவே அதை யுற்பத்தி செய்யக்கூடிய ஏனைய காரியங்களி லும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமா கும்.

இதன் மத்தியில் இப்பகுத்தறிவுக்காரர்கள் மற்றொரு ஆயத்தை ஒப்பிட்டுக் கூறுவதும் கூடாது. அதாவது, "மானக்கேடான வேலை யைச் செய்த பெண்களின்மீது (அவர்கள் குற்றவாளிகள்தாம் என்பதற்கு) நான்கு சாக்ஷிகள் உங்களில் இருக்கவேண்டும். என வே, (அந்த சாக்ஷிகள்) சாக்ஷியங்கூறிவிட் டால், அவர்கள் மரணமடையும்வரை அல் லது அல்லாஹ் அவர்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்தும்வரை வீடுகளில் தடுத்து வையுங் கள்" என்பதே.

விபசாரம் செய்தவர்கள் தாம் வீட்டி லிருக்கவேண்டும்; மற்றவர்கள் வெளியில் வர லாம் என்று இந்த ஆயத்திலிருந்து யூகித் தெடுக்கும் யூகசாலிகளே! விபசாரம் செய் தவர்களை வீட்டில் தடுத்து வைக்கும்படி அவர்களின் போஷகர்களுக்கு இதில் கட்

டளையிடப்பட்டிருக்கிறது. இவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் வெளியிற் செல்லக் கூடாது. இதனால் இவர்களை வீட்டில் கைதியாக வைக்கும்படி சொல்வது நன்கு தெரிகிறது. ஆனால், மேலே காட்டிய ஆயத்தில் ஸ்திரீகள் தாங்களாகவே தங்கி இருக்கவேண்டும் என்றும், அவசியத்தின்பேரில் வெளியில் வர உரிமை உண்டென்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே, ஸ்திரீகள் வீடடங்கி இருப்பதானது அவர்களுக்குத் தண்டனை என்றும், சிறைக் கூடமென்றும் வியாக்யானங் கூறி பொது ஜனங்களை ஏமாற்றுவது பொருத்தமற்றதாகும். தவிரவும், பின்னர் கூறிய ஆயத்தானது வியபிசாரம் செய்தவருக்கு தண்டனை இன்னது என்று நிர்ணயிப்பதற்கு முன்னர் சொல்லப்பட்டதாகும். பின்னர் தண்டனையை நிர்ணயம் செய்து அது சம்பந்தமாக 18-வது ஜுஜுஸ்உவில் சூரத்துநூரில் கூறப்படவே இந்த ஆயத்தின் கட்டளையானது மாற்றப்பட்டுவிட்டது.

இனி வீட்டிலிருப்பதைப்பற்றிய ஹதீதுகளாவன :—"ஸ்திரீகள் முற்றத்தில் தொழுவதைப் பார்க்கிலும் வீட்டில் தொழுவது நல்லது. இன்னும் ஸ்திரீகள் வீட்டில் தொழுவதைப் பார்க்கிலும் அதிலுள்ள உள்ளறையில் தொழுவது நல்லது. பெண்களோ மறைக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவர்கள் வெளியேறினால் அவர்களைச் சாத்தான் பின்றொடருகின்றான்."

"எந்தப் பெண் வாசனைத் திரவியத்தைப் பூசிக்கொண்டு ஜனக்கூட்டத்தில் வர, அந்த வாடையை ஜனங்கள் உணருவாராயின், அவள் வியபசாரியாகும்."

"அந்நியப் பெண்ணும் ஆணும் தனித்திருப்பாராயின் ஷைத்தான் அவர்களில் மூன்றாவதாக இருக்கிறான்." இவைபோன்ற இன்னு மநேக ஹதீதுகளை எடுத்துக் காட்டக் கூடுமாயினும் விரிவஞ்சி விடுத்தனம்.

இந்த ஜெண்டில்மேன்கள், சரித்திரங்களில் முன் பெண்பாலர் போர்க்களங்களில் செய்த சில வேலைகளையும் முஸ்லிம் அரசிகள் செய்த சிலவேலைகளையும் ஆதாரமாகக்காட்டி அந்த மாதரசிகளின் விலை மதிக்க முடியா மார்க்க பக்தியை மாறான தோற்றத்தில் காட்டுகின்றனர். இம்மாதரசிகள் எவ்விதமாக இவ் அரிய ஊழியங்களைச் செய்தனரென்பதை இயம்புமுன் இவ்வுதாரணங்கள் மார்க்க ஆதாரங்களாகுமோ? அல்லது இவர்கள் மார்க்கத் தலைவர்களோ? என்பதைச் சிந்திக்கவேண்டும். சரித்திரங்களில் கூறப்பட்ட விபரமில்லா விஷயங்களை விரிவான நூல்களிலிருந்து விளக்கமாகத் தெரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு முடிவு கூறுவது முறையாமோ? ஹஜ்ரத் பாத்திமத்துஸ் ஸஹ்ரா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள், திருகையறைத்ததாகவும், தண்ணீர் எடுத்து வந்ததாகவும், வீட்டு வேலைகள் யாவற்றையும் தாமே செய்ததாகவும் ஹதீதுகளில் வந்திருக்கிறது. இதனால், பகற்காலத்தில் பர்தா இல்லாமல் வெளியிற் சென்றதாகக் கருத முடியாது. அவ்வாறு அவசரப்பட்டு முடிவு செய்வது அனர்த்தமாகவே முடியும். பகற்காலங்களில் பர்தா இல்லாமல் வெளியிற் சென்று தண்ணீர் எடுத்து வந்ததாக எந்த ஹதீதிலும் வெளியாகவில்லை. அவ்விதம் செல்ல நேர்ந்த காலத்தில் அந்நாயகி யவர்களுக்குப் பதிலாக ஸெய்யிதுனா அமீருல் முமினீன் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களே தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்ததாக ஹதீதுகளில் காணக் கிடக்கின்றது. அவர்களுக்கும் அசந்தர்ப்ப மேற்பட்ட காலத்தில் வேறு ஆட்கள் கொண்டுவந்ததாகத்தான் தெரியவருகிறது. நபிகள்நாயகமவர்களே தங்களது அருமைப் புதல்விக்குத் தண்ணீர் எடுத்துவந்ததாகவும் ருஜுவாகிறது. நாயகியவர்கள் பகற்காலத்தில் பர்தாவின்றி வெளியிற் சென்று தண்ணீர் கொண்டு வருவதாக இருந்தால், இவ்வுலக மனைத்திற்கும் நாயகமாகவும், மனு ஜின் ஆகிய இருவர்க்கத்திற்கும் வழிகாட்டியாகவும் சர்வ அண்டங்களுக்கும் றஹ்மத்தாகவும் அவதரித்த எம்பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தண்ணீர் எடுத்து வருவதையோ, அல்லது தமது மணாளரான அஸதுல்லாஹில் காலிப் முர்த்தஜா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தண்ணீர் எடுத்துவருவதையோ நாயகியவர்கள் அனுமதித்திருப்பார்களா? அவ்வாறு எடுத்து வருவதைச் சகித்திருப்பார்களா? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

'ஜிஹாத்' செய்து காயமடைந்த ஸஹாபாக்களுக்கு, பெண்கள் வயித்திய உதவி செய்ததாக ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது.

அதனை ஆழ்ந்து கவனிக்கும்போது அப் பெருமாட்டியர் அந்நியருக்கு ஊழியஞ் செய்ததாக ருஜுவாகவில்லை. ஹஜ்ரத் அஸ்மா (றலி.) அவர்கள் தமது கணவரான ஹஜ்ரத் ஜுபைர் இப்னு அவாம் (றலி.) அவர்களுக்கும் ஹஜ்ரத் கௌலாபின்த் அஸ்தர் அவர்கள் தமது சகோதரர் லர்ரார் (றலி.) அவர்களுக்கும், பனூதையுடைய ஸ்திரீகள் தங்கள் பந்துக்களுக்கும் வயித்திய உதவி செய்ததாகத் தெரிகிறது. இவைகளெல்லாம் பர்தாவின் கட்டளை பிறந்தபின்னர் நடைபெற்றவிஷயம். அதற்குமுன்னர் அவர்கள் அவ்வாறான பாகுபாடு செய்திருக்கவில்லை. இவைகளன்றி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எல்லா ஸ்திரீகளிடமும் சம்பாஷணை செய்ததாகக் கூறப்படுகிறது. பர்தாவின் கட்டளை பிறந்த பின்னர் நாயகமவர்களும் பர்தாவை அனுஷ்டித்ததாகவே தெரிகிறது. "ஒரு ஸ்திரீயிடத்தில் ஒரு கடிதமிருந்தது. அந்த ஸ்திரீ நாயகமவர்களிடம் அக்கடிதத்தைக் கொடுப்பதற்காகப் பர்தாவுக்கு அப்பாலிருந்து கையை நீட்டினார்" என்று ஹஜ்ரத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து பர்தாவின் கட்டளை பிறந்தபின்னர் நாயகமவர்களும் பர்தா விஷயத்தில் அதி ஜாக்கிரதையாக இருந்ததாகவே புலப்படுகிறது.

ஜுபைதா காத்தூனைப்பற்றி யறியாத முஸ்லிம்களிருக்கமாட்டார்கள். இவ்வம்மையார் ஹாரூனுர் ரஷீதின் பத்தினியார் என்பதும், பக்தாத் கிலாபத்தாட்சியில் மாணிக்கமாக விளங்கினாரென்பதும் உலகப்பிரசித்தம். கல்வியுலகில் அவரது கீர்த்திக்களவில்லை. அரியபெரிய அறிஞர்களுக்கும் இமாம்களுக்கும் அந்தச் சக்கிரவர்த்தினிக்குமிடையில் மார்க்க சம்பந்தமான விவாதங்கள் நடைபெற்ற விபரமும் அவர்களின் அபாரப்பாண்டித்யமும் சரித்திரமறிந்தவருக்குத் தெரியாத விஷயமன்று. ஒருமுறை ஒரு குலாம் தவறுதலாக அந்தப்புரத்தில் சென்று உடனே திரும்பி விரைவாய் வந்தனன். அவனைப் பின்றொடர்ந்து அம்மாதரசியின் ஆள் வந்து அவனை அணுகி "சக்கிரவர்த்தினியின் எந்த அவயவத்தை நீ பார்த்தனை" என்று வினவ, அவன் பதைபதைத்து 'கொண்டையின் கூந்தலைக் கண்டேன்' எனப் பதில் கூறினான். உடனே அரசியார் ஸ்திரீ ஹஜ்ஜாமை அழைத்து "எமக்குப் பிறர் கண்ணில்பட்ட கூந்தல் வேண்டாம்" என்று கூறி அவன் கூறிய அளவிற்கு அக்கூந்தலைக் கத்தரித்து நீக்கிவிட்டார்கள். இச்சம்பவத்தை யுணர்ந்தபின் நீங்களே யோசித்துப்பாருங்கள். அம்மாதரசி கல்விசம்பந்தமான விவாதித்ததில் ஈடுபட்டது பர்தாவுக்கு அப்புறத்திலிருந்தா அல்லது பர்தாவின்றியா என்பது தானாகப் புலனாகும். இம்மாதிரியான உதாரணங்கள் இந் நாட்டிலும் நாம் கேள்விப்படாத விஷயமன்று. மௌலானா அப்துல் பாரீ மர்ஹூம் அவர்கள் இந்தியாவிலுள்ள பிரபல மார்க்க அறிஞர் என்பதும், தலைவர் என்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயம். திருச்சி மஜ்லிசுல் உலமா மகாசபையின் ஈரோட்டுக் கூட்டத்திற்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். இப்பெரியார் ஷை மகாநாட்டிற்கு வருவதாக இருந்து, நோய்வாய்ப்பட்டமையின் காரணமாக வரமுடியவில்லையாயினும் அவருக்குப் பதிலாக மௌலானா குத்புத்தீன் அப்துல்வாலீ அவர்கள் தலைமை வகித்து மௌலானா மர்ஹூம் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தைப் படித்தார்கள். அப் பிரசங்கத்தில் ஷை பெரியார் அவர்கள் தமது மாதாவிடமே பெரும்பாலும் கல்விபயின்றதாகக் கூறப்பட்டிருக்கிறது எனவே, இப்பெரியாரின் மாதா அவர்கள் அத்தனை கல்வியையும் பிறரிடம் பர்தா இல்லாமல் சென்று கல்வி பயின்றனர் எனக் கொள்வது பொருந்துமோ?

இதுபோல் இன்னும் பல ஸ்திரீரத்னங்களை எடுத்துக் காட்டக்கூடும். ஆயினும் விரிவஞ்சி விடுத்தனம். எனவே பகுத்தறிவுக்காரர்களான சில இங்கிலீஷ் படிப்புக்காரர்கள் இஸ்லாம் மதத்தைப்பற்றி அரைகுறையாக அறிந்து கொண்டு தங்கள் யுக்திப்படி கூடார்த்தம்செய்துகாட்டும் சாதுரியமான பேச்சைக் கேட்டுப் பொதுஜனங்கள் ஏமாந்துபோக வேண்டாம் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

சமரஸ உடன்படிக்கை

மார்க்கத் தீர்ப்பளிக்கும் உலமாக்கள் சபை

ஹிபாஜத்துல் இஸ்லாம், தாருல் இஸ்லாம் ஒப்பந்தம்

("ஹிபாஜத்துல் இஸ்லாம்" அறிக்கை)

நமது ஹிபாஜத்துல் இஸ்லாத்துக்கும் தாருல் இஸ்லாத்துக்கும் சென்ற 22-10-33-ல் ஏற்பட்ட சமரச உடன்படிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத் தீர்ப்புக் கமிட்டி அங்கத்தினராகிய உலமாக்களுக்கு ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசியாகிய மௌலவி ஹாஜி ச. அ. முகம்மது அலி சாகிப் பாக்கவீ, தாருல் இஸ்லாம் மாஜி ஆசிரியர் பா. தாவூத்ஷா சாகிப் ஆகிய இருவரும் கையொப்பமிட்டுக் கூட்டழைப்புக் கடிதம் அனுப்பியதும், நாளதுமீ 19உ ஜும்ஆவுக்குப் பின் 3 மணிக்கு ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியாலயத்தில் மீட்டிங் கூடுமென்று குறிப்பிட்டிருந்ததும் இதற்குமுன் நாங்கள் வெளியிட்டவை. இ. அறிக்கை மூலமாக நேயர்கள் அறிந்திருக்கலாம்.

உலமாக்களுக்கு அனுப்பிய ஆங்கிலக் கடிதத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு:—

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியாலயம்
43-ஏ. போஸ்ட் ஆபீஸ் தெரு ஜார்ஜ் டவுன் சென்னை.
ஜனவரி 8, 1934.

அன்பார்ந்த ஜனுப்,

அஸ்ஸலாமு அலைக்கும், வறஹ்மத்துல்லாஹிவபரகாத்துஹு

எங்களிருவர்களில் ஒருவர் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்துடனும், மற்றொருவர் தாருல் இஸ்லாம் பத்திரிகையுடனும் சம்பந்தப்பட்டிருப்பதில், எங்களிருவர்களில் ஒருவரான தாவூத்ஷாவால் பிரசுரிக்கப்பட்ட பல வியாசங்களிலும், பல் புத்தகங்களிலும், பல துண்டுப் பிரசுரங்களிலும் அபிப்பிராயங்களிலும் வற்புறுத்தப்படும் பல விஷயங்கள் சம்பந்தமாக எங்களிருவர்களிடையே பலத்த விவாதம் நடந்து வருவதை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இந்த விவாத விஷயங்களை கீழே குறிப்பிட்டுள்ள ஏழு பிரபல உலமாக்களின் தீர்ப்பிற்கு சமர்ப்பித்து அவர்களளிக்கும் தீர்ப்பின்படி நடந்துகொள்ளுவதென 22-10-33-ல் சமரஸ உடன்படிக்கை யொன்று செய்து கொண்டுள்ளோமென்பதைக் கேட்டு நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்.

இவ்விவாத விஷயத்தில் தீர்ப்புக்கூற தெரிந்தெடுக்கப்பட்டுள்ள உலமாக்களில் தாங்களும் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்களென்பதை தங்களுக்கு அதிக சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவ்வுலமாக்களின் கூட்டம் 19-1-34ல் ஜும்ஆத் தொழுகைக்குப்பின் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியாலயத்தில் கூடவேண்டுமென்று ஏற்பாடு செய்துள்ளோம். அன்றைய தினம் தயவு செய்து வந்திருந்து எங்களிருவர்களுக்கிடையே இருக்கும் விவாத விஷயங்களைத் தீர்த்து வைத்து எங்களுக்கு உதவிபுரியும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பைஸல் செய்ய தெரிந்தெடுக்கப்பட்டுள்ள உலமாக்கள் பின்வருமாறு:—

(1) மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாகிப் பஹாதுர் (கான்பகதூர்).

(2) மௌலானா மௌலவி சையித்முர்த்துஜா சாஹிப் பஹாதுர் எம். எல். ஏ.

(3) மௌலானு மௌலவி முப்தீ ஷேக் ஆதம்சாஹிப் பஹாதுர்.
(4) மௌலானு மௌலவி முப்தீ அப்துல் அஜீஸ் சாகிப் பஹாதுர்.
(5) அப்ஜலுல் உலமா சையித் அப்துல் வஹ்ஹாப் புகாரி சாஹிப் பஹாதுர் எம். ஏ. எல். டி., எப். எம். யூ.
(6) அப்ஜலுல் உலமா எம். அப்துல் ஹக் சாஹிப் பஹாதுர் எம். ஏ.
(7) மௌலானு மௌலவி அல்ஹாஜ் பி.எஸ். முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் பஹாதுர்.

(ஒப்பம்) எஸ். ஏ. முஹம்மத் அலி.
(ஒப்பம்) பி. தாவூத்ஷா.

மேற்கண்ட கடிதம் சிலருக்கு ஆங்கிலத்திலும், சிலருக்கு உருதுவிலும், சிலருக்கு தமிழிலும் அனுப்பப்பட்டது.

மேற்படி அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்ட 19-1-34 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பின் 3 மணிக்கு உலமாக்கள் சபை கூடிற்று. ஒப்பந்த ஷர்த்தில் கண்டபடி தாருல் இஸ்லாம் பிரசுரங்களிலும், நூற்களிலும் பத்திரிகைகளிலும் உள்ள மார்க்க முரணுனவை எங்களின் பரிசீலனைக்கு எட்டியவரை எடுத்து ஜாபிதாவாக எழுதி நாங்கள் கூறும் ஆக்ஷேபனைகளுக்கு மார்க்கக் கிரந்த ஆதாரங்களுடன் சபையில் சமர்ப்பிக்கத் தயாராக இருந்தோம். ஆனுல் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு சமூகம் தந்த உலமாக்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து மீட்டிங்கை நடத்தாமல் ஒத்தி வைத்து மீட்டிங் புக்கில் பின்வருமாறு எழுதி கையெழுத்துச் செய்து கலைந்துவிட்டார்கள்.

"22-10-33ல் கூத்தாநல்லூரில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கக் காரியதரிசியான மௌலவி ஹாஜி முஹம்மது அலி சாஹிபுக்கும், "தாருல் இஸ்லாம்" ஆசிரியரான தாவூத்ஷா சாஹிபுக்கும் இடையே ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதில் 7 உலமாக்கள் ஒரு சபை கூடி "தாருல் இஸ்லாம்" பத்திரிகையிலும், அவரால் இயற்றப்பட்ட 'ஜவாஹிருல் புர்க்கான்' முதலிய நூற்களிலும் சுன்னத்துவ ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு விரோதமான வியாசங்கள் தாவூத்ஷாவால் பிரசுரிக்கப் பட்டிருப்பது சம்பந்தமாக மேற்படி உலமாக்கள் எந்தெந்த வியாசங்கள் சுன்னத்து ஜமாஅத்து அக்கீதாவுக்கு விரோதமாகக் காணப்படுகின்றன என்பதைப் பரிசீலனைசெய்து தீர்ப்பளிக்க வேண்டியதென்றும், மேற்படி தீர்ப்பின்படி தாருல் இஸ்லாம் பத்திரிகையிலும், அவருடைய நூல்களிலும் பிரசுரங்களிலும் காணப்படும் தவறுகளை தாவூத்ஷா சாஹிப் திருத்திக் கொள்ளவேண்டுமென்றும் காணப்பட்டிருக்கிறது. அதை முன்னிட்டு அடியிற் கையொப்பமிட்டுள்ள எங்களுக்கு மேற்கண்ட இருவரின் கைசாத்துடன் அழைப்புக் கடிதம் கிடைத்தது. அதன்படி 19-1-34 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின், ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியாலயத்திற்கு நாங்கள் வந்தோம். எங்களுக்கு அழைப்பு அனுப்பிய இருசாரார்களில் மௌலவி ஹாஜி முஹம்மது அலி சாஹிப் முதலியவர்கள் ஆஜராகி யிருந்தனர். ஆனுல், தாவூத்ஷா சாஹிப் வரவில்லை. அவர் வராமைக்கு நாங்கள் வருந்துகிறோம்.

4½ மணிவரை எதிர்பார்த்திருந்து மீட்டிங்கு ஒத்திவைக்கப்பட்டது. ஆனுல், மௌலவி ஹாஜி முஹம்மது அலி சாகிப் வகையராவின் எண்ணம் உலமாக்கள் கூட்டத்தை ஒத்திவைக்காமல் நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டுமென்றிருந்தபோதினும், எங்களுடைய அபிப்பிராயத்தில் தாவூத்ஷா சாகிபுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றிருந்ததால் நடவடிக்கையை ஒத்திவைத்திருக்கிறோம்."

(ஒப்பம்)
ஜியாவுத்தீன் முஹம்மது உபிய அன்ஹு,
ஷேய்கு ஆதம் உபிய அன்ஹு,
ஸெய்யிது முர்த்துஜா உபிய அன்ஹு,
19—1—34.

மேலே கையொப்பமிட்டுள்ள மார்க்கத் தீர்ப்புக் கமிட்டி உலமாக்களைத்தவிர ஏனைய உலமாக்கள் இச்சபைக்கு ஆஜராக முடியாமற்போனதற்குரிய அசந்தர்ப்பங்களை அறிவித்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக இனி நடைபெறும் காரியங்களைப் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.
காரியதரிசிகள். "ஹிபாஜத்துல் இஸ்லாம்"

உலமாக்களுக்குச் சமர்ப்பித்த யாதாஸ்து.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தார், தாருல் இஸ்லாம் பத்திரிகைகளையும் அதன் ஆசிரியர்கள் இயற்றிய நூல்களையும், பிரசுரங்களையும் ஆராய்ந்துபார்த்து அவைகளினுள் காணப்படும் மார்க்க முரணான தவறுகளைத் திரட்டி, கூத்தாநல்லூரில் 22-10-33ல் நடைபெற்ற ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உலமாக்களின் கமிட்டுக்கு சமர்ப்பித்தயாதாஸ்த்து.

ஜவாஹிருல் புர்கான்.

இது லாகூர் முஹம்மத் அலியால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஹோலி குர்ஆனை பா. தாவூத்ஷா சாஹிபால் மொழிபெயர்க்கப்பட்டதாகும். அந்த ஆங்கில ஹோலி குர்ஆனின் பல இடங்களிலும் தவறுகளிருக்கின்றனவென்று வட இந்திய உலமாக்களாலும் எகிப்து அரப் முதலிய தேச உலமாக்களாலும் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எகிப்து உலமாக்களின் (பத்வா) மார்க்கத் தீர்ப்பின்பேரில் அத்தேச அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது. அத்தேச உலமாக்களால் ஆக்ஷேபிக்கப்பட்ட விஷயங்கள் யாவும் இத்தமிழ்மொழி பெயர்ப்பில் காணப்படுகின்றது. எனவே இத்தமிழ் மொழிபெயர்ப்பை யாங்கள் ஆராய்ந்து பார்த்ததிலிருந்து எங்களுக்குத் தென்பட்ட தவறுகளின் விவரம் வருமாறு:—

(1) பக்கம் 17, நோட்டு 8-ல்,

"மாலிக் என்னும் அரப் வார்த்தைக்கு அரசன் என்று சிலர் தவறாக பொருள் செய்திருக்கின்றனர். இப்பதத்திற்கு அரசன் என்பது சரியான மொழி பெயர்ப்பாக மாட்டாது" என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில் 'மாலிக்' என்னும் பதத்திற்கு அரசனென்று பொருள் கொள்வதாகச் சொல்லுவது தவறாகும்.

(2) பக்கம் 19, நோட்டு 9-ல்,

"மனிதர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் அது அதற்குறிய பலாபலனானது அப்பொழுதைக் கப்பொழுதே விழைந்து கொண்டிருப்பதால் ....இந்த ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமானது இவ்வுலகில் ஒவ்வொரு வினாடியும் நிகழ்ந்து கொண்டே வருகிறதென்று ஈண்டுச் செவ்வனே தெரிந்து கொண்டோம் ...." எனக் கூறப்பட்டிருக்கிறது.

இது, ஹஷர் நஷர் ஏற்பட்டு கியாமத் ஒன்றுண்டு என நாம் ஈமான் கொண்டிருப்பதை மறுப்பதாக இருக்கிறது.

(3) பக்கம் 24, நோட்டு 15-ல்,

"நபிமார்களுக்கு ஆண்டவனால் அருளப்பெற்ற அனுக்ரகங்களுள் தேவ இரசியத்தைத்தெரிந்துகொள்ளக்கூடிய வஹீ என்னும் ஞான வெளிப்பாடும் ஒன்றாதலின் அதை நேர்வழியில் செல்லக்கூடிய ஒவ்வோர் உண்மை முஸ்லிமும் அடைதல்கூடும். ஆனால் வஹியைப் பெறுவதால் மட்டும் ஒருவரும் நபியாய் விடமாட்டார்." எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில், நேர்வழியில் செல்லக்கூடிய ஒவ்வொரு உண்மை முஸ்லிமுக்கும் வஹீ வரலாமென்றும், வஹீ வருவதனால்மட்டும் யாரும் நபியாய்விட மாட்டாரென்றும் கூறப்பட்டிருப்பது தவறாகும்.

(4) பக்கம் 26, நோட்டு 17-ல்,

"இப்னு அப்பாஸின் வியாக்யானமும் இதுதான்...........வாஸ்தவந்தான் ....திருமதியிலும் இதேவிஷயம் 'ஹஸன் கரீப்' கூறியதாக வரையப்பட்டிருக்கிறது" என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில், 'ஹஸன் கரீப்' என்னும் ஹஸ்ரத் யார்; அவர் எவ்வூர் வாசி; அவர் தாய் தந்தையர் பெயர் என்னெ?

(5) பக்கம் 85, ஆயத்து 1-ல்,

"நான் அல்லா (ஹ்), அதிகம் அறிந்தவனாக இருக்கிறேன்"

என்று 'அலிப்லாம்மீம்' என்ற ஆயத்துக்கு தர்ஜுமா செய்திருப்பது தவறாகும்.

(6) பக்கம் 50, நோட்டு 30-ல்,

"ஆனால் நபிகள் நாயகமவர்களுடைய உம்மத்தில் சேர்ந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய அனுக்ரகத்தின் பயனால் ஆண்டவனுடைய வஹீயானது வெளியாகக்கூடியதாக இருப்பதினாலும் இவ்வாறு இதுவரையில் இவ்வுலகில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அப்படிப்பட்ட அனுக்ரகத்தை அருளப் பெற்றிருப்பதனாலும்.... ...." எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தில், நாயகம் (ஸல்.) அவர்களின் உம்மத்தோர்களில் ஆயிரக்கணக்கானோருக்கு "வஹீ" வந்திருப்பதாகக் கூறப்படுகிறது இஃது மா பெருந்தவறாகும்.

(7) பக்கம் 75, நோட்டு 73-ல்,

"ஆகாயத்திலிருந்து பொழியும் மழையைப்போல் ஆண்டவனிடத்திலிருந்து பொழியும் ஞான வெளிப்பாடானது நம்மீது வருஷித்தாலல்லாமல் நம்முடைய ஆத்மசக்திகளெல்லாம் அந்தரங்கத்தில்தான் அழுந்திக் கிடந்து விடும்". எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தில், நம் ஒவ்வொருவருக்கும் "வஹீ" அவசியம் வந்தே தீரவேண்டுமென்றும் அவ்வாறு வராவிட்டால் நமது ஆத்மசக்திகள் அழிந்துவிடுமென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இஃதுவும் மாபெருந்தவறாகும்.

(8) பக்கம் 79, நோட்டு 78-ன் கடைசிப் பாராவில்,

"சஹாபாக்களும் தாபயீன்களும் நரகத்துக்கு ஒரு காலத்தில் அவசியமாக முடிவு உண்டென்று ஒத்துக்கொண்டிருக்கின்றனர்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில், நரகத்துக்கு முடிவுண்டென்று வற்புறுத்தப்படுகிறது. இது பெரும் தவறாகும்.

(9) பக்கம் 80, நோட்டு 79-ல்,

"இங்கே நீர்ச்சுனை என்பது நற்செய்கைகளைக் குறிக்கும்"

இது தவறாகும். ஏனெனில், 'நன்னம்பிக்கைகொண்டு நற்கருமங்கள் செய்கிறவர்களுக்கு நீர்ச்சுனைகள் ஓடுகின்ற உத்தியான வனங்கள் அவர்களுக்கு உண்டென்று நற்செய்தி கூறுவீராக' என்று அல்லாஹுத ஆலாவின் திருவேதத்தில் கூறப்பட்டிருக்கிற நீர்ச்சுனை (ஆறு)களுக்கு இவ்வித கூடார்த்தமான வியாக்கியானஞ் செய்வது பெரும் தவறினும் தவறாகும்.

(10) பக்கம் 80 ஆயத்து 25-ல்,

சுவர்க்கத்தைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கும் "காலிதூன்" என்ற பதத்திற்கு "அங்கேயே நிலைத்திருப்பார்கள்" என்று பொருள் செய்துவிட்டு, நரகத்தைப்பற்றி பிரஸ்தாபிக்குமிடத்து அதே "காலிதூன்" என்னும் பதத்திற்கு "நெடுங்காலம்" என்று பொருள் செய்து நரகம் ஒருகாலத்தில் முடிந்துவிடுமென்று பொருள் செய்திருக்கின்றார். இவ்வாறு அருத்தஞ் செய்வது பெருந்தவறு. ஏனெனில் ஒரே வார்த்தைக்கு இரண்டு விதமான கருத்துக்கொண்டு சுவர்க்கம் நரகம் இவ்விரண்டிற்கு மிடையில் பாகுபாடு செய்து கூறுவது தகாத காரியமாகும்.

(11) பக்கம் 106, நோட்டு 122-ல்,

"இப்லீஸ் மலக்குகளில் ஒருவனென்றும் எல்லா மலக்குகளைக் காட்டினும் அதிகமான அறிவு அவனுக்கு உண்டென்றும் கூறும் கூற்றுக்கள் அனைத்தும் எஹூதிகளின் கதைகளிலிருந்து இஸ்லாத்திற்குள் நுழைந்திருக்கின்றன" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில், ஆதாரமற்ற அநேகம் கதைகள் இஸ்லாத்திற்குள் வந்து நுழைந்துகொண்டதாகக் கூறுகிறார். இவ்வாறு அவர் நினைப்பதும் கூறுவதும் தவறாகும். எந்த ஆதாரமற்ற கதைகளும் இஸ்லாத்தின் சட்டதிட்டங்களில் வந்து நுழைந்துகொள்ளவில்லை. சில தப்ஸீர்களில் இவ்வாறான சில ரிவாயத்துகளை எடுத்துக் காட்டப்பட்டிருந்தாலும் அதனை அந்த முபஸ்ஸிர்கள் இஸ்லாமிய கொள்கையாகவோ சட்டமாகவோ வற்புறுத்திக் கூறவில்லை. ஆகவே இவ்வாறு கூறியிருப்பது மாபெரும் தவறாகும்.

(12) பக்கம் 110, நோட்டு 124-ல்,

"இந்த இப்லீசுக்கும் காபிர் என்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதத்துக்கு ஸுஜூது செய்யாததினால் அவன் காபிராக்கப்படவில்லை. ஆனால் அதற்கு முன்னரே அவன் காபிராய் இருந்ததனால்தான் மற்றைய மலக்குகளைப்போல் ஸுஜூது செய்யாது

மறுத்துவிட்டான்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்ததினால்தான் இப்லீஸ் காபிரானான் என்று குர்ஆன்ஷரீபில் அல்லாஹுதஆலா ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்க, அதனை மறுத்து இவர் கூறியிருப்பது தவறாகும். மேலும் எல்லா மலக்குகளும் ஸுஜூது செய்யவில்லை என்று கருத்துக்கொள்ளும்படியாகவும் எழுதியிருக்கிறார்.

(13) பக்கம் 110, நோட்டு 126-ல்,

"இங்கே ஜன்னத்தென்பது எல்லா விதமான சுகத்துடனும் சௌகிரியத்துடனும் யாதொருவிதமான கஷ்டமேனும் நிஷ்டூரமேனும் வந்தணுகாமலும் எவ்வகை துக்கமும் துயரமும் உண்டாக இடமில்லாமலும் சமாதானத்துடன் சாந்தி அடைந்திருக்கும் நிலையைக் குறிக்கும்." எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் "ஜன்னத்" என்னும் பதத்திற்குச் செய்திருக்கும் தாத்பரியம் சரியானதன்று பெரும் தவறாகும்.

(14) பக்கம் 121, ஆயத்து 39-ல்,

"அவர்கள்தான் நெருப்பில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அதில் நெடுங்காலம் தங்கி இருப்பார்கள்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் 'அஸ்ஹாபுன்னார்' என்ற பதத்திற்கு நெருப்பில் வாழ்பவர்களாயிருக்கிறார்கள் என்றும் 'காலிதூன்' என்ற பதத்திற்கு நெடுங்காலம் தங்கி யிருப்பார்களென்றும் தர்ஜுமாச் செய்திருப்பது தவறாகும்.

(15) பக்கம் 141, நோட்டு 183-ல்,

"குர்ஆன் ஷரீபில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தார்கள் கடல் தாண்டிய விஷயம் அடிக்கடி காணப்படுகின்றது. ஆனால் அவர்கள் எவ்வாறு அந்தக் கடலைக் கடந்தார்களென்னும் விவரமேனும் அந்தக் கடல் நீரானது எவ்வாறு பிரிக்கப்பட்டதென்னும் விவரமேனும் இவ்வேதத்தில் காணப்படவில்லை........ ....பனீ இஸ்ராயீல் கூட்டத்தாரை மூஸா நபி (அலை.) அவர்கள் எகிப்திலிருந்து சிரியாவுக்குக் கொண்டு சென்றார்களென்பது மட்டும் நிச்சயமாகத்தானிருக்கிறது. அப்படி அவர்கள் சென்றபோது அங்கே எவ்விடத்தில் கடலானது குறிக்கிடுகின்றது? சூயஸ் என்னும் பூசந்தி வழியாக அவர்கள் எல்லோரும் சென்றிருக்கலாம்..................அந்த வடகோடியின் வழியே செல்லுவதற்கு முன் இராமுழுதும் அடித்த பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் வறண்டுபோயிருக்கலாம். அவ்வாறு அங்கிருந்த ஜலமானது தெற்குநோக்கி ஒதுக்கப்பட்டபோது மூஸா நபியும் அவருடைய மனிதர்களும் அதைத்தாண்டி யிருக்கலாம். ஆனால் பிர்அவ்னும் அவனுடைய மனிதர்களும் பின் தொடர்ந்து வருமுன் அங்கே கடல்நீர் வந்து நிறம்பி இருக்கலாம். இதனால் அவர்கள் எல்லோரும் மூழ்கிப்போயிருக்கலாம்...................... மூஸா நபியும் அவருடைய மனிதர்களும் செங்கடல் செல்லும் வரையில் பிர்அவ்ன் இடங்கொடுத்திருக்கமாட்டான். அவர்களெல்லோரும் நீலநதிக்கருகில் செல்லுமுன்னரே அவன் அவர்களைத் தொடர்ந்து சென்றிருப்பான். ஆதலின் நீல நதியோ அக்காலத்திருந்த வேறு நதியோ அங்கே குறிக்கிட்டிருக்கலாம். இதுதான் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது................அக்காலத்தில் அவர்கள் தாண்டியது நீலநதி என்று வைத்துக்கொண்டபோதிலும் அப்பொழுது அஃதொரு சாதாரணமான ஆறாய் இருந்திருக்கலாம். அதனால் அதில் சில இடங்களில் குறுக்கே தாண்டிச் செல்லும் படியான வசதிகளும் இருந்திருக்கலாம். ஆனால் பிர்அவ்ன் முதலியோர் அவர்களைப் பிடிக்க வேண்டுமென்னும் ஆத்திரத்தால் ஆற்றில்வரும் நீர்ப்பெருக்கை நிதானிக்காமல் அதில் இறங்கி மாண்டிருப்பார்கள்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறான வியாக்கியானஞ் செய்வது திருக்குர்ஆனையே மறுப்பதாக இருக்கிறது. ஏனெனில், திருக்குர்ஆனின் ஸூரத்துஷ்ஷுஅரா 63-ல்,

'அவர்களை (மூஸா அலைஹியின் கூட்டத்தார்களை) அவர்கள் (பிர்அவ்ன் கூட்டத்தார்

கள்) அதிகாலையில் பின்தொடர்ந்தனர். (பின்னர்) அவ்விரு கூட்டத்தினரும் (பிர்அவ்ன், மூஸா) ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டபோது மூஸாவின் கூட்டத்தினர், நிச்சயமாக நாம் அகப்பட்டுக்கொண்டோமே என்று கூறினர். (அதற்கு மூஸா அலை அவர்கள்) அவ்வாறன்று. நிச்சயமாக என்னுடைய ரப்பு என்னுடன் இருக்கிறான். (நாம் தப்பித்துக்கொள்ள) சீக்கிரத்தில் எனக்கு வழிகாட்டுவான் என்று கூறினார்கள் (அப்பொழுது)உமது அஸாவினால் கடலை அடியும் என்று நாம் (அல்லாஹ்) வஹி அறிவித்தோம். அதனால் அக்கடல் பிளந்தது. எனவே (கடலின்) ஒவ்வொரு பிரிவுகளும் பிரமாண்டமான மலையைப்போலாய்விட்டது பின்னர் ஆங்கு மற்றவர்களை (பிர்அவ்ன் கூட்டத்தாரை) நுழையச்செய்தோம். எனவே மூஸாவையும் அவருடனிருந்த யாவரையும் (பிர்அவ்னிடம் அகப்பட்டுக் கொள்வதை விட்டு) காப்பாற்றினோம். (பிர்அவ்ன் கூட்டத்தார்களாகிய) மற்றவர்களை முழுகடித்தோம். நிச்சயமாக இதில் (அல்லாஹ்த ஆலாவின் தத்துவத்தைப் பற்றிய) திருஷ்டாந்தமிருக்கிறது. ஆனால் அநேகர் (இதனை) நம்புகிறவர்களாயில்லை'

என்று அல்லாஹ்த ஆலா மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறான். இவைகளன்றி ஸூரா 7, 10, 20, 44 முதலிய ஸூரத்துகளிலும் ஏனைய விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர் செய்திருக்கும் வியாக்யானம் குர்ஆனுக்கு நேர் முரணாக இருக்கிறதென்பது வெள்ளிடை.

(16) 60-வது ஆயத்தில்,

"மேலும் மூஸா தம்முடைய கூட்டத்தாருக்காக தண்ணீர்க் கேட்டபோது உமது அஸாவினால் அக்கல்லை அடியும் என்று நாம் கூறினோம் (அக்கல்லை அடித்தார்) எனவே அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுகள் வெடித்துக் கிளம்பின. ஒவ்வொரு மனிதரும் தத்தம்முடைய நீர்த்துறையை அறிந்துகொண்டனர்''.

என்று அல்லாஹ்த ஆலா தனது திருமறையில் விவரமாகக் கூறியிருக்க, இதற்கு வியாக்யானஞ் செய்ய முன்வந்த தாவூதுஷா சாஹிப்

பக்கம் 156-ல்,

"அடியிற் காணுமாறு மூன்றுவிதமான பொருளைக்கொள்ளும் (1) மலையின்மீது உம்முடைய தண்டத்தைக் கொண்டு அடிப்பீராக (2) மலையின்மீது உம்முடைய தண்டத்தைக்கொண்டு செல்வீராக. (3) மலையின்மீது உம்முடைய கூட்டத்தைக்கொண்டு செல்வீராக. ஆதலின் இவ்வாக்கியத்திற்கு அந்த மலையில் உம்முடைய கூட்டத்தாருடன் சென்று ஒரு வழியைக்கண்டு பிடிப்பீராக என்றும் பொருள் செய்யலாம். பைபிள் நூலில் இதன் சார்பான விஷயம் ஒன்றும் அதிக ஆதாரமாகக் காணப்படவில்லை............ஆனால் பனிரண்டு வகுப்பினரும் பன்னிரண்டு ஊற்றுக்கிடையில் வசித்தனர் என்பதனால் மூஸா நபி அவர்கள் தங்களுடைய கூட்டத்தாருடன் மலைமேல்சென்று அந்த பனிரண்டு ஊற்றுக் கண்களையும் கண்டு பிடித்தார்கள் என்பதுதான் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது''

எனக் கூறியிருக்கிறார். இவ்வாறான குதர்க்க வியாக்கியானஞ் செய்து அன்பியா அலைஹிமுஸ்ஸலாம் அவர்களின் முஃஜிஸாக்களை மறுத்துக் கூறுவது குர்ஆனையே மறுப்பதாக இருக்கிறது.

(17) பக்கம் 161, குறிப்பு 217-ல்,

"இமாம் மஹ்தி அவர்கள் தோன்றி இம்முஸ்லிம்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் அவர் தாமே செய்து எதிரிகளை வென்று வெற்றி மாலை சூடி முஸ்லிம்களிடத்தில் அவருடைய வெற்றியால் கிடைக்கும் புதையல்கள் முழுவதையும் கொடுத்துவிட்டுப் போகவேண்டுமென்று அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாய் ஏங்கி நிற்கின்றார்கள்''

எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் இமாம் மஹ்தீ அவர்களின் வருகையை அனாவசியமாகப் பிரஸ்தாபித்து முஸ்லிம்களின் கொள்கையை ஏளனஞ் செய்கின்றார்.

(18) 63-வது ஆயத்தில்,

"உங்களிடத்தில் நாம் உறுதி மொழி வாங்கிய நேரத்தை நினைத்துப் பாருங்கள். இன்னும் உங்களுக்கு மேலில் தூர்மலையை உயர்த்தினோம். உங்களுக்கு நாம் கொடுத்ததை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். இன்

னும் நீங்கள் (தீமையை) தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு அதிலுள்ளதை சிந்தித்துப் பாருங்கள் (என்றும் கூறினேம்.)''

இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பவைகளை விவரித்து ஸூரா 7.171ல், அவர்களுக்கு மேலில் மலையை குடைபோல் உயர்த்தினேம். நிச்சயமாக அந்த மலையானது தங்கள்மீது விழுந்துவிடுமோவென்று எண்ணினர் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து பனீ இஸ்ராயில் கூட்டத்தாரின் தலைக்குமேல் கற்பாறையைக் குடையைப் போல் உயர்த்தி அச்சமூட்டி 'தவ்ருத்' வேதத்தில் கூறப்பட்ட கட்டளைப்படி நடக்க வேண்டுமென்று அறுதிமானம் வாங்கியதாகத் தெளிவாய்த் தெரிகிறது. இக் கருத்தையே ஸஹீஹ்புகாரியும் வற்புறுத்திக் கூறுகின்றது. உண்மை இங்ஙனமிருக்க இந்த ஆயத்தின் விரித்துரையில் ஜவாஹிருபுல் புர்கான் 169-ம் பக்கத்தில்,

"இந்த ஆயத்தில் மலையானது அதனுடைய ஸ்தானத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு அவர்களுடைய தலைக்குமேல் கொண்டுவரப்பட்டதென்று கூறுவதுசரியான தாத்பரியமாகமாட்டாது. பனீ இஸ்ராயில் கூட்டத்தார்களை பயமுறுத்தாட்டி கீழ்படியும்படி செய்யுமாறு நெடும் பருவதமொன்று பிடுங்கிக்கொண்டு வரப்பட்டு அவர்களுடைய தலைக்குமேல் ஆகாயத்தில் தொங்கவிடப்பட்டதென்று கூறும் ஆதாரமற்ற கதைக்கு இவ்வேதத்தில் ஒன்றும் அத்தாட்சி இல்லை. ஆனல் அவர்களெல்லோரும் மலையின்கீழ் அப்பொழுது நின்ருர்கள் என்பதுதான் இதன் சரியான தாத்பரியமாக இருக்கின்றது. அவர்கள் கீழே நின்ருர்கள். மலையானது அவர்களுடைய தலைக்குமேல் உயர்ந்து நின்றது. சஹீஹ்புகாரியில் ....கற்பாரையானது எங்களுக்காக உயர்த்தப்பட்டது என்றிருந்தபோதிலும் இங்கே நாம் கொள்ளவேண்டிய தாத்பரியமானது எம்முடைய கண்களுக்கு முன்னே கற்பாரையானது வெளித் தோன்றிற்று என்பதாயிருக்கும். இங்கே கற்பாரையானது உயரமாக்கப்படவில்லை. ஆனல் அதன் உயரமானது கண்ணுக்குப் புலனுயிற்று...............நீங்கள் என்னுடைய ஏவல்களுக்கு வழிப்பட்டு நடக்க இணங்காமற் போவீர்களேல் இந்த மலையை உங்கள் தலைமீது போட்டு விடுவேனென்று பயமுறுத்தாட்டும்பொருட்டு அல்லாஹ்த ஆலாவானவன் அவர்களுக்குமேல் உச்சியில் ஒரு மலையைக் கொண்டுவந்து ஆகாயத்தில் தொங்கவிட்டான் என்று எண்ணுவதானது குர்ஆன் ஷரீபின் முழு கருத்துக்குமே முரணுயிருக்கின்றது. ....ஆனல் உண்மையில் நடந்தது யாதெனில், மூஸா நபி அவர்களுக்கு ஆண்டவனுடைய கட்டளைகள் வெளியாக்கப்பட்டபோது பனீ இஸ்ராயில் கூட்டத்தாரின் முதியோர் உயர்ந்த மலையின்கீழ் அதன் அடிவாரத்தில் நின்று கொண்டிருந்தார்கள் என்பது தான்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இவர் இவ்வித வியாக்கியம் செய்ததானது பஹிரங்கமாக திருமறையில் கூறப்பட்ட ஆண்டவனுடைய அபார சக்தியை மறுப்பதாயிருக்கிறது. ஏனெனின், மேலே கூறப்பட்டுள்ள ஸூரா 7,171-ல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற 'நதக' என்னும் அரபிப் பதத்திற்கு வேருடன் பிடுங்கி எடுப்பது பொருளாகும். மேலும் அதில் குடையைப் போல் மலையை உயர்த்தப்பட்டது என்றும் பிரஸ்தாபிக்கப் பட்டுளது.

(19) ஸூரா 2-65,66-ல்,

'உங்களினின்று ஓய்வு நாளில் வரம்பு கடந்தவர்களை நிச்சயமாக நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். (அவர்கள் அடிக்கடி வரம்பு கடந்து கொண்டிருந்ததனல்) சிறுமையுற்ற குரங்குகளாக ஆகிவிடுங்கள் என்று அவர்களுக்கு நாம் சொன்னேம். (அவர்கள் குரங்குகளாக ஆகிவிட்டார்கள்) ஆகவே இதை (தண்டனையை) இதற்கு முன்னு லிருந்தவர்களுக்கும் இதற்குப் பின்னுலிருப்பவர்களுக்கும் படிப்பினையாகவும், தக்வா உள்ளவர்களுக்கு உபதேசமாகவும் ஆக்கினேம்' என்று கூறியிருக்கிருன்.

இதில் ஹஸ்ரத் தாவூத் (அலை.) அவர்களின் கூட்டத்தாரில் ஒரு பிரிவார் ஓய்வு நாளில் அல்லாஹ்த ஆலாவுக்கு வணக்கம் புரியாமல் அல்லாஹ்த ஆலாவின் கட்டளைக்கு மீறி மீன்பிடிக்கும் தொழிலிலீடுபட்ட

தால் அவர்கள் குரங்குகளாக மாற்றப்பட்டு, அல்லாஹ்த ஆலாவின் கட்டளையை மீறுபவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்று விளக்கப்பட்டிருக்கிறது. இவ்வாயத்துக்கு ஜவாஹிருல் புர்கான் 171, 172 பக்கத்தில்.

"அவர்கள் உண்மையில் குரங்குகளாக மாற்றப்பட்டுப் போகவில்லை. அவர்களை அல்லாஹ்தஆலா கழுதைக்கு உவமையாக்கிய உவமானத்தைப் போன்ற உவமையையே அவர்களுக்குப் பொருத்தமாகக் காட்டியிருக்கிறான். அஃதாவது அவர்களுடைய மனமானது மாறிவிட்டதேயல்லாமல் உண்மையில் அவர்கள் குரங்குகளாக ஆக்கப்படவில்லை...........அந்த ஜாதியார்கள் ஒருநாள் காலையில் திடுமன குரங்குகளாக உண்மையில் மாற்றப்பட்டுப் போய்விட்டார்களென்று கூறும் கதைகளெல்லாம் ஆதாரமற்ற அசம்பாவிதக் கதைகளாகவே காணப்படுகின்றன"

என்று கூறப்பட்டிருக்கிறது. இது குர்ஆன் ஹதீதில் கூறப்பட்டிருப்பவைகளுக்கு முற்றும் மாற்றமாக இருக்கிறது.

(20) 72, 73-வது ஆயத்துகளில்,

"மேலும் ஒரு ஜீவனை நீங்கள் கொன்றுவிட்டு அதைப்பற்றி வாது செய்தீர்கள். அதனால் அல்லாஹ் நீங்கள் மறைத்துவைத்திருப்பதை வெளிப்படுத்துகிறவனாக இருக்கிறான். எனவே அதனுடைய (காளைமாட்டினுடைய) ஒரு பகுதியைக்கொண்டு அவனை அடியுங்களென்று சொன்னோம். இம்மாதிரியே மரணமடைந்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிக்கின்றான். இன்னும் உங்களுக்கு, நீங்கள் உணர்ந்துகொள்ளும்பொருட்டு தன்னுடைய திருஷ்டாந்தங்களைக் காட்டுகின்றான்'

இந்த ஆயத்துகளும் இதற்கு முந்திய 68, 69, 70, 71 ஆயத்துகளும், மூஸா நபி (அலை.) அவர்கள் காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, இஸ்ரவேலர்களிலுள்ள ஒரு தனவந்தரை அவருடைய சகோதரரின் மைந்தன் பணத்தாசையினால் படுகொலை புரிந்தனன். கொலைக்குற்றம் செய்தவன் இன்னானென்று புலப்படாததால் மூஸா நபி (அலை.) அவர்களிடம் சென்று அவர்களது தெய்வீக சக்தியால் கொலைத்தொழில் புரிந்தவனைக் கண்டுபிடித்துத் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். எனவே அவர்கள் அல்லாஹ்த ஆலாவிடம் துஆச் செய்ததின்பேரில் ஒரு மாட்டை அறுத்து அதன் ஒரு அவயவத்தைக்கொண்டு கொலையுண்ட மனிதர்மீது அடிக்கும்படி ஏவினான். இஸ்ரவேலர்கள் அவ்விதம் செய்யவே கொலையுண்டவர் உயிர் பெற்றெழும்பி தன்னைக் கொலை செய்தவன் இன்னானெனக்கூறிவிட்டு மறுபடியும் மரித்துவிட்டார். இச்சம்பவத்தை அல்லாஹ்தஆலா இவ்வாயத்துகளில் எடுத்துக்கூறி இஸ்ரவேலர்களுக்குச் செய்த அனுக்ரகத்தை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்காலத்திலிருந்த யூதர்களுக்குச் சொல்லிக்காட்டியிருப்பதுடன், மரித்தவர்கள் மறுமை நாளில் உயிர்ப்பிக்கப்படும் விஷயத்தில் நம்பிக்கையற்றிருந்த அக்காலத்திய ஜனங்களுக்கு, இவ்விதமாகத்தான் அல்லாஹ் மரித்தவர்களை உயிர்ப்பிப்பான், என்று அறிவுறுத்துகின்றான்.

இந்த 72,73 ஆயத்துகளில் முந்திய ஆயத்தை இரண்டாவதை விட்டுப்பிரித்து ஜவாஹிருல் புர்கான் 178-ம் பக்கத்தில்,

"ஒருவனுடைய சொத்துக்காகவும் அவனுடைய பெண்ணுக்காகவும் ஒருவனை ஒருவன் கொலை செய்வதானது இவ்வுலகில் ஒரு சகஜமான காரியமாய்க் காணப்படுகின்றது.இப்படிப்பட்ட சர்வ சாதாரணமான விஷயத்தைப்பற்றி இந்தத் திருமறையானது இங்கே விவரிப்பதற்கு என்ன அவசியம் நேரிட்டிருக்கிறது...............ஆனால் இங்குள்ள விஷயத்தின் நுட்பத்தை எல்லாம் ஆழ்ந்து நோக்குங்கால் ஒரு சாதாரண மான மனிதனல்லாமல் மிகப் பெரிய ஒருவரைப்பற்றிய பிரஸ்தாபமே செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்கிறோம்...............ஆதலின் இங்குள்ள எல்லா சந்தர்ப்பங்களைக் கொண்டும் நபியாகிய ஒருவர் கொல்லப்பட்ட விஷயமே இங்கே கூறப்பட்டிருக்கிறதென்று செவ்வனே விளங்கிக் கொள்கிறோம்..... ....இத்தன்மைத்தாகிய கொலையானது அஃதாவது, அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிடும்படி

யாயிருந்த கொலையானது ஈஸா நபியின் (அலை.) சிலுவையின் விஷயத்தைப் பற்றித்தான் கூறுகிறதென்று கொள்வதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை............ ஈஸா நபி அவர்கள் சிலுவையின்மீது மூன்று மணி நேரந்தான் அறையப்பட்டிருந்தார்கள். இவ்வளவு குறுகிய கால அளவுக்குள் ஒருவரும் சிலுவையின் மீது மரணமடைந்துவிடுவது முடியாது. இவர்களுடன் சிலுவையிலறையப்பட்ட மற்றிரண்டு திருடர்களின் கால் எலும்புகளும் முறிக்கப்பட்டதேபோல் இவர்களுடைய கால்கள் முறிக்கப்படவில்லை. இதனால்தான் மரணமாவதைப்போன்ற ஒரு நிலைமை உண்டாயிற்றென்று கூறுகிறோம். இவ்விதமாகத்தான் அல்லாஹ் மரித்தவரை உயிர்ப்பிக்கிறான். இங்கே ஈஸா நபி அவர்களுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதாகவே கூறலாம். ஏனெனில், மற்றையோரால் மரணமடைந்து விட்டதாகக் கருதப்பட்ட ஈஸா நபியை ஆண்டவன் இப்படித்தான் உயிர்ப்பித்திருக்கிறான். உண்மையாகவே இறந்து போகிறவர்கள் மீண்டும் இவ்வுலகத்திற் திரும்ப முடியாது....................ஆதலின் இங்கே நாம் கொள்ளவேண்டிய வியாக்கியானமானது 'அவரை அறைகுறையாக மரிக்கச் செய்யுங்கள் அல்லது அவருடைய நிலைமையை அறைகுறையான மரணத்தை அடைந்த ஒரு மனிதனைப்போல் செய்துவிடுங்கள்' என்பதாயிருக்கும்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில், ஹஸ்ரத் ஈஸா நபி (அலை.) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டதாகவும், அவர்களைக் கொலைசெய்யத் துணிந்தபடுபாவிகளை நோக்கி அல்லாஹ்த ஆலாவானவன் 'அவரை அறைகுறையாக மரிக்கச் செய்யுங்கள்; அல்லது அவர்களுடைய நிலைமையை அறைகுறையான மரணத்தை அடைந்த ஒரு மனிதனைப்போல் செய்துவிடுங்கள்' என்று கேட்டுக்கொண்டதாகவும் ஏற்படுகிறது. மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் அன்பியாக்கள் முர்ஸலீன்களிடம் வஹீ மூலமாகவும், அவ்லியாக்களிடம் இல்ஹாம் மூலமாகவும் அல்லாஹ் தஆலா சம்பாஷணை புரிந்ததாக நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் மேற்கூறப்பட்டுள்ள தாவூத்ஷாசாஹிபின் வியாக்யானப்படி அல்லாஹ் தஆலாவின் அனுக்ரகத்தை சம்பூர்ணமாகப் பெற்ற, வேதத்தையுடைய உலுல் அஜ்மான, முர்ஸலான செய்யிதுனா ஹஸ்ரத் ஈஸா வ நபிய்யினா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களை, அல்லாஹுதஆலாவின் கட்டளையைப் பிரசாரஞ் செய்ததைக்குற்றமாகக் கருதி கொலை புரிய வந்த சண்டாளர்களான வம்பர்களை நோக்கி 'அவரை பூர்ணமாகக் கொன்றுவிடாமல் அறைகுறையாக மரிக்கச்செய்யுங்கள் அல்லது அவருடைய நிலைமையை அறைகுறையான மரணத்தை அடைந்த ஒரு மனிதனைப்போலாக்குங்கள்' என்று கேட்டுக்கொள்வதாக இருக்கிறது. இது எவ்வளவு தூரம் பொருத்தமான விஷயமென்பதை நேயர்களுணரக்கடவர். மேலும் அல்லாஹ் மரித்தோரை உயிர்ப்பிக்கும்விஷயத்தில்கூட இன்னொருக்குச் சந்தேகமிருப்பதுபோல் தோன்றும் விதமாக எழுதியிருக்கிறார்கள்.

(21) பக்கம் 190, 191, நோட்டு 268-ல்,

"முஸ்லிம் ஜாதியாரும் எச்சரிக்கை பெறுவார்களா? ஆனால் இவர்கள் இதைக் கூர்ந்து நோக்குவதாய்க் காணப்படவில்லை. இவர்கள் தங்களுடைய வேதத்திலுள்ள ஞானத்தை எல்லாம் பெற்றுக்கொள்ளாமலிருப்பதோடு தங்களுடைய மனம்போன வழியிலெல்லாம் பற்பலவிதமான மனோராஜ்ஜியத்தில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். இவர்களுடைய இகலோக பரலோக குருமார்களும் இவர்கள் தங்களுடைய அறிவை மார்க்க விஷயத்தில் உபயோகிக்கக்கூடாதென்று தடை உத்திரவு பிறப்பிக்கின்றனர். வேதத்தின் உண்மை எல்லோருக்கும் விளங்கிவிட்டால் தங்களுடைய போலித்தனமான புரோகிதத்தனமானது போய்விடுமென்று புலம்பித் திரிகின்றனர்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் முஸ்லிம் ஜாதியாரை அனாவசியமாகத் தூற்றப்படுகிறது. ஏனெனில் முற்றும் உணர்ந்தவரென்று யாரும் தம்மைச் சொல்லிக்கொள்வதில்லை; பகுத்தறிவை உபயோகிக்கக்கூடாதென்று யாரும் கூறவுமில்லை. பகுத்தறிவை உபயோகிப்பதாகக்கூறிவேதத்

தையும் மார்க்கத்தையும் திரித்துக் கூறுவதைத்தான் மறுக்கின்றனர்.

(22) பக்கம் 204, நோட்டு 302-ல்,

"பாத்திமா (ரலி.) அவர்களுடைய குழந்தைகளுக்குத் தந்தையாரான அலீ (ரலி.) அவர்களிருக்கும்போதும் அவர்களைத் தாயின் விசேஷத்தினல் பனீ பாத்திமா என்று கூறுவதேபோல் ஈஸாவுக்கும் (அலை.) தாயின் சிறப்பினுல் மரியத்தின் மகனென்னும் பிரபல்யமான பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது"

இதில், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுக்குத் தகப்பன் உண்டென்று வற்புறுத்திக் கூறப்படுகிறது. இது குர்ஆனின் பஹிரங்க போதனைக்கு விரோதமாகும். தவிர பனூ பாத்திமா என்று வழங்கப்படுவதற்குக்கூறப்பட்டிருக்கும் காரணமும் தவறு.

(22 B) பக்கம் 211-ல்,

மூஸா நபி (அலை.) அவர்கள் அத்தாட்சிகளைக் கொண்டு வந்ததாகவும் அவர்கள் தூர்வீன மலைக்குச் சென்றிருந்த காலத்தில் அவருடைய உம்மத்துகள் காளை மாட்டை வணங்கியதாகவும் அல்லாஹ்த ஆலா கூறி இருக்கிறுன். இதை மறுத்து, ஈஸா (அலை.)க்கு அல்லாஹ் தஆலா அத்தாட்சியைக் கொடுத்ததாகவும் அவருக்குப் பின்பக்கத்தில் அவருடைய உம்மத்துகள் கன்றுக்குட்டியை வணங்கியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இது குர்ஆனை மறுப்பதாக இருக்கிறது.

(23) பக்கம் 221, ஆயத்து 102-ல்,

"மேலும் சுலைமானுடைய நுபுவ்வத்துக்கு மாருக ஷைத்தான்கள் கற்பனை செய்ததையே (அவர்கள்) பின்பற்றியொழுகினர்கள்" எனக்கூறப்பட்டிருக்கிறது இந்த தர்ஜுமா தவருகும்.

(24) பக்கம் 311, நோட்டு 490-ல்,

"பீஸபீலில்லாஹ் என்னும் சொற்றொடரானது இவ்வேதத்தில் அடிக்கடி உபயோகமாய் வருமிடங்களிலெல்லாம் அல்லாஹ்வுக்காக அல்லது அல்லாஹ்வின் பாதையில் பெருமுயற்சி செய்வது என்பதுதான் எல்லோராலும் அங்கீகரிக்கத்தக்க பொருளாயிருக்கின்றது"

இதில் 'பீஸபீல்' என்னும் வார்த்தைக்கு வியாக்கியானஞ் செய்திருப்பது தவறு.

(25) ஜவாஹிருல் புர்கான் நான்காம் வெளியீடு முகவுரையின் 2-ம் பக்கத்தில்,

"இந்த பிக்ஹு என்னும் சட்டமானது மனிதர்களை நேரான வழியிற் கொண்டு வருவதற்காகவும் ஆன்மாக்களை அவற்றிற்குரிய பக்குவத்துக்குக் கொண்டு வருவதற்காகவும் மனிதர்களை அறியாமை என்னும் அந்தகாரத்தினின்று அப்புறப்படுத்தி மெய்யான ஒளி அளவில் கொண்டு சேர்ப்பதற்காகவும், ஆண்டவனைக் கொண்டும் அவனுடைய ரசூலைக்கொண்டும் பரிபூர்ண நம்பிக்கை கொண்டவர்கள் இந்த பிக்ஹைக் கொண்டே எல்லா ஞானங்களையும் உணர்ந்து கொள்வதற்காகவும் போதியதாய் இஃது அமைந்தில்லை. மேலும் இஃது உண்மையிலேயே குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கும் பிக்ஹுக்கு அப்படியே பொருத்தமான முறையில் அமைந்திருப்பதாயுமில்லை" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் பிக்ஹு சட்டத்தைப்பற்றிச் சரியாக உணர்ந்துகொள்ளாமல் மற்றவர்கள் அதன்மீது சந்தேகங் கொள்ளும்படியாக பிக்ஹு சட்டம் குர்ஆன் ஷரீபுக்கு விரோதமாக இருப்பதுபோல் வரையப்பட்டிருக்கிறது.

(26) பக்கம் 329, நோட்டு 526-ல்,

"தங்களுடைய செய்கைகளுக்காக அதிகம் வியசனித்தலே ஈண்டு மீளா நரகென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது"

இதில், நரக நெருப்பிற்கு வியசனித்தல் தான் என்று பொருள் செய்வது தவருகும்.

(27) பக்கம் 402, நோட்டு 634-ல்

"வானவர்கள் விஜயஞ்செய்வதென்பது குப்பார்களுக்கு தண்டனையும் முஃமினுனவர்களுக்குஆண்டவனுடைய அனுக்ரகமும் வருகின்றன வென்றே கருத்துக்கொள்ளும்"

இதில் வானவர் (மலக்குகள்) விஜயத்திற்கு அனுக்ரகமென்று கூறுவது தவறு. ஏனெனில் வானவர் மனிதர்களிடம் விஜயஞ்செய்யும் விஷயம் குர்ஆன் ஹதீதுகளைக்கொண்டு ருஜுவாகின்றது.

(28) பக்கம் 432, நோட்டு 668-ல்,

"மாதவிடாயின்போது கூறப்படும் தலாக் (விவாகரத்) சட்டப்படி செல்லக் கூடியதாகாது"

இதில், ஹைழுடைய காலத்தில் தலாக் சொன்னால் அத்தலாக்கு கூடாதென்று கூறப்பட்டிருக்கிறது. இஃது பிக்ஹு சட்டத்திற்கு நேர்விரோதமாகும்.

(29) பக்கம் 436-ல், 726-வது ஆயத்துக்கு தர்ஜுமா கீழ்காணுமாறு செய்யப்பட்டிருக்கிறது.

"தங்கள் மனைவியரிடம் (நெருங்குவதில்லை என்று) சத்தியம் செய்பவர்கள் நான்கு மாதம் (அவர்களருகினில்) நெருங்காமல் காத்திருத்தல் வேண்டும். ஆதலின் அவர்கள் மீண்டுவிடுவார்களாயின் மெய்யாகவே ஆண்டவன் மன்னிப்பவனாகவும் அன்புடையவனுமாகயிருக்கிறான்."

இதில், தங்கள் மனைவியரிடம் நெருங்குவதில்லை என்று சத்தியம்செய்பவர்கள் நான்கு மாதகாலம் அப்பெண்கள் பக்கத்தில்கூடச் செல்லலாகாதென்று தப்பாக தர்ஜுமாசெய்திருக்கிறார். மேலும் அவர்கள் நான்குமாத காலத்துக்குள் மீண்டு விடுவார்களாயின் அல்லாஹ்மன்னிப்பவனாக இருக்கிறானென்று முன்னுக்குப்பின் முரணாகவும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஏனெனில் தங்கள் மனைவியர்களிடம் கூடல் செய்வதில்லை என்று சத்தியம் செய்துகொண்டவர்கள் நான்கு மாதகாலதவணைக்குள் தங்கள் மனைவியர்களிடம் சம்சார வாழ்க்கையை நடத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த ஆயத்தின் கருத்தாகும். ஆகவே அவர்கள் செய்த மொழிபெயர்ப்பு இந்த ஆயத்துக்கு நேர் விரோதமாக இருக்கிறது.

(30) பக்கம் 439, குறிப்பு 618-ல்,

"மாதவிடாயை விட்டு தூரமாயிருக்கும் பரிசுத்த காலத்தில் சொல்லப்படும் தலாக்கே சட்டப்படி செல்லக்கூடியதாக இருக்கிறது."

இதில், தலாக் செல்படியாக வேண்டுமானால் மாதவிடாயை விட்டுத் துப்பரவான காலத்தில் சொல்லப்பட வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. இது பிக்ஹு சட்டத்துக்கு விரோதமாகும்.

(31) பக்கம் 440, குறிப்பு 682-ல்,

"அந்த கர்ப்பத்தின் பிரசவ காலம் வரை விவாக விலக்குச் செய்துவிட முடியாதவளாய் விடுகின்றாள்."

இதிலிருந்து கர்ப்ப ஸ்திரீகளைத் தலாக் சொல்வது கூடாதென்று தெரிகிறது. இதுவும் பிக்ஹு சட்டத்துக்கு நேர்விரோதம்.

ஜுஸ்அம்மா

(32) பக்கம் 6, நோட்டு 8-ல்,

"நரகவேதனையானது என்றென்றும் முடிவுபெறாத ஊழி ஊழிகாலம் நிலை பெற்றிருக்குமென்று கூறுவதற்கிடமில்லை...........நரகவேதனையானது ஒரு காலத்தில் முடிவடையுமென்றும் மிக விளக்கமாகத் தெரிந்துகொள்கிறோம் ....குர்ஆன் ஷரீபின் முழுக்கருத்தையும் ஆழ்ந்து நோக்குங்கால் நரக வேதனையானது ஒரு குறிப்பிட்டகாலத்திற்குப்பின் முடிவடைந்து விடுமென்பதையே நன்குதெரிந்துகொள்கிறோம்." இது பெரும் தவறாகும்.

(31) பக்கம் 7, நோட்டு 9-ல்,

"இங்கே குளிர்ச்சி என்பது சுகவாழ்வையே குறிக்கும்"

நரகில் குளிர்ச்சி ஏற்படமாட்டாதென்று அல்லாஹு தஆலா கூறியிருப்பதற்கு சுக வாழ்வு ஏற்படமாட்டாதென்று இவர் வியாக்கியானஞ் செய்திருப்பது தவறாகும்.

(32) பக்கம் 9, ஆயத்து 31, 32, 33, 34-ல்,

"நிச்சயமாக அச்சப்பாடுள்ளவர்களுக்கே ஜெயம். தோப்புகளும் திராக்ஷைகளும் ஒரே வயதுடைய எவ்வனமுடையவர்களும் தூய்மையான பானமும்"

என்று மொழிபெயர்த்து விட்டு அதற்கு வியாக்கியானஞ்செய்யக்கூடிய குறிப்புகளில் அவைகளுக்கு மாற்றமாக எழுதி இருக்கிறார்.

(33) பக்கம் 13, ஸூரத்துன்னாஜிஆத்தின் 1-முதல் 7-வரை கூறப்பட்டிருக்கக்கூடிய கியாமத் நாள் சம்பந்தமான ஆயத்துகளுக்கு கூடார்த்த வியாக்யானஞ் செய்து, இவ்வுலகிலேயே நடைபெறக்கூடிய ஒரு யுத்தத்தைச் சுட்டிக் காட்டுவதாக எழுதப்பட்டிருக்கிறது. இது குர்ஆனின் பஹிரங்க போதனைக்கும் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்

களின் ஹதீதுகளுக்கும் முரண்பாடானதா யிருக்கிறது.

(34) பக்கம் 37, ஸூரத்துத் தக்வீரின் 1-முதல் 15-வரை கியாமத் (மறுமை) நாள் சம்மந்தமாகக் கூறப்பட்டிருக்கிற ஆயத்து களுக்கெல்லாம், இவ்வுலகில் நடைபெறப்போ கிற யுத்தம்தான் என்று வலிந்து பொருள் செய்யப்பட்டிருக்கிறது இதுவும் தவருகும். இவைகளெல்லாம் மறுமைநாளை மறுப்ப தாக இருக்கிறது.

(35) பக்கம் 173, குறிப்பு 231-ல்,

ஹிருதயத்திலிருந்து நெருப்புக் கிளம்புவ தாக வியாக்கியானஞ் செய்யப்படுகிறது. இவ் வியாக்கியமானது அசல் ஆயத்தின் கருத் துக்கு நேர்மாருக இருக்கிறது. ஏனெனில், நரகத்தினுடைய தீயானது ஹிருதய கமலங் களையும் பற்றிக்கொள்ளும் என்று தெரியவரு கிறது.

பொதுவாக, இந்த ஜுஸ்அ அம்மாவில் கூறப்பட்டிருக்கிற கியாமத் நாள் சம்பந்த மான விஷயங்களும் சுவர்க்க நரக சம்பந்த மான விஷயங்களும் கூடார்த்த வியாக்யா னம் செய்யப்பட்டு மறுக்கப்படுகின்றன. தவிரவும் திருக்குர்ஆனுக்குச் செய்திருக்கிற தர்ஜுமாக்களிலநேக பாகம் விஷய விளக்க மற்றவையாயு மிருக்கின்றன.

இஸ்லாமிய ஞான போதம்

இந்த புஸ்தகம், தன்னை நபி என்று தாவாச் செய்த லேட் மிர்ஸா குலாம் அஹ் மத் காதியானி என்றவரால் உர்தூவில் எழு தப்பட்ட "உஸூல பல்ஸபயே இஸ்லாம்" என்ற புத்தகத்திற்கு லாகூர் காதியானித் தலைவரான முஹம்மத் அலியால் ஆங்கிலத் தில் மொழிபெயர்க்கசப்பட்ட "டீச்சிங் ஆப் இஸ்லாம்" என்றதின் தமிழ் மொழிபெயர்ப் பாகும்.

(36) இதன் பக்கம் 9-ல், திருக்குர்ஆன் 89-27, 28, 29, 30 இந்த ஆயத்துக்களுக்கு தர்ஜுமாச் செய்திருப்பது தவறு. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

"ஏ சாந்தி அடைந்துகொண்டிருக் கும் ஆத்மாவே! உன்னுடைய ரக்ஷக னிடத்தில் முழு திருப்தியும் அடைந்து கொண்டு நீ அவனிடத்தில் திருப்தி அடைந்தும் அவன் உன்னிடத்தில் திருப்தி அடைந்தும் இருக்கும்பொ ருட்டு உன் ரக்ஷகன்பால் திரும்புவா யாக. ஆதலின் என்னுடைய அடியார்க ளுடன் கலந்து என்னுடைய சுவர்க்கத் திற்குள் புகுவாயாக" என்பதாகும்.

இதே ஆயத்துகளை ஜவாஹிருல் புர்கானில் மொழிபெயர்த்திருப்பது வருமாறு:—

"ஏ சாந்தி அடையும்படியான ஆத் மாவே! உன்னுடைய ரப்பினிடத்திற்கு நீ அவனோடு திருப்தி அடைந்துகொண் டும் அவன் உன்னோடு திருப்தி அடை ந்துகொண்டும் மீளுவாயாக. ஆதலின் என்னுடைய அடியார்களுள் சேர்ந்து கொள்"

இந்த ஆயத்துக்களுக்கு இரண்டு புஸ்தகங் களிலும் இரண்டுவிதமான அர்த்தஞ் செய் யப்பட்டிருக்கிறது. இவ்விரண்டும் தவருகும்.

(37) பக்கம் 17-ல்,

"பிறகு (தாயின் கர்ப்பாஸயத்தில் தையாரிக்கப்பட்ட) சரீரத்தை மற்றொரு விதமான நிலைமைக்கு நாம் கொண்டு வருகிறோம்; மேலும் (ஆத்மா என்று சொல்லக்கூடிய) மற்றொரு சிருஷ்டியை யும் அதினின்றே வெளிப்படுத்துகிறோம்; இதனால் தனக்கோர் இணையுமில்லாத மகா மேலான சிருஷ்டிகர்த்தாவாகிய ஆண்டவனுக்கே எல்லாப்புகழும்"

என்று ஸூரா 23-க்கு மொழிபெயர்த் திருப்பது தவறு. ஏனெனில், இவர் தமிழ் மொழி பெயர்ப்பில் சொல்லியிருப்பதற் குள்ள தக்கபதம் ஆயத்தில் கிடையாது.

(38) பக்கம் 19-ல்,

"நான் அதனுடைய சரீரத்தைப் படைத்து, அதன் சம்பந்தமான எல்லா மகிமைகளையும் செவ்வனே தோன்றச் செய்து, அதற்குள்ளே என்னுடைய ரூஹை (ஆவியை) ஊதிய வுடனே நீங்க ளெல்லீரும் அதன் முன் வீழ்ந்து மரி யாதையாகச் சிரவணக்கம் புரிவீர்க ளாக"

என்று ஸூரா 15-29-க்கு மொழிபெயர்க் கப்பட்டிருக்கிறது. இம் மொழிபெயர்ப்பு தவருகும்.

(39) பக்கம் 20-ல்,

"அந்தகாரத்தையே ஆதரவாகக் கொண்டிருக்கும் கெட்ட குணம் (இப்

லீஸ்) மட்டுமே அந்த ஜோதியின்முன் சிரவணக்கம் புரிவதற்குத் தகராறு செய்கின்றது''

என்று கூறி, இப்லீஸ் என்னும் பதத்திற்கு கெட்டகுணம் என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. இப்லீஸ் வேறு, கெட்டகுணம் வேறு என்பது உலப்பிரசித்தம்.

(40) பக்கம் 192-ல்,

''மறு உலகவாழ்க்கையில் அந்த ஆத்மார்த்த சுவர்க்கானந்த மென்பது இந்தப் பூலோக சுவர்க்கத்தின் மற்றோர் அம்ஸமாகவே இதன் சாயலாய்க் காணப்படுகிறது.''

இதில், மறுமையில் கிடைக்கக்கூடிய சுவர்க்கமானது, ஆத்மார்த்த சுவர்க்கானந்த மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் ஸூரா 55-46, 76-21, 76-5, 6 ஆகிய ஆயத்துகளுக்கும் தவறான தர்ஜுமாச் செய்து அதன் கருத்துக்களை மாற்றித் திருத்திக் கூறப்பட்டிருக்கிறது.

(41) பக்கம் 194, 195, 196, 197 இவைகளில், 'ஜன்ஜபீல்' என்றவார்த்தைக்கு 'ஜனு ஜபல்' என்று பதம் பிரித்து 'மலைமீது ஏறினன்' என்று பொருள்காட்டி அதிலிருந்து தவறான வியாக்கியானஞ் செய்து கொண்டு போவதும், அதனை அடைவது ஞான வெளிப்பாட்டை அடைவதாகு மென்றும் தாவாச் செய்திருப்பது தவறு. ஏனெனின் ஜன்ஜபீல் என்பது இஞ்சியாகும்.

(42) பக்கம் 202, 203, 204 இவைகளில் நரகம் சுவர்க்கத்தைப்பற்றி,

'' அவனவனுக்குரிய சுவர்க்க போக மென்பது அவனவனுடைய இகலோக பிரதிபிம்பமாகவே முற்றிலும் அமைந்திருக்கிறது. இந்தச் சுவர்க்கம் என்பது வெளியிலிருந்துவந்து குதிக்காமல் அடியாரின் உள்ளுக்குள்ளிருந்தே உதித்து வருகிறது................அவ்வடியான் செய்து வரும் நற் கருமங்களே உண்மையில் அத்தோட்டத்தில் பாய்ந்து கொண்டு, அந்த மரங்களுக்கு உயிரையும் உயரிய பலனையும் கொடுக்கக்கூடிய நீரருவிகளாய்க் கருதப்படுகின்றன''

என்று கூறி, மக்களின் நல்ல அமல்கள் சுவர்க்கத்தின் பூங்காவனங்களாகவும் நதிகளாகவும் இருக்குமென்று வாதிக்கப்படுகிறது.

(43) பக்கம் 210, 211-ல்,

'' சுவர்க்கம் நரகம் என்னப்படுபவையெல்லாம் இங்கிருப்பதே போன்ற ஸ்தூல உலகங்களல்லவென்பதையும், ஆனால், அங்குள்ள சூக்ஷ்ம உலகத்தின் காரியங்களுக்குறிய மூலங்களெல்லாம் நம்முடைய இகலோகத்தின் ஆத்மார்த்த நிலைமைகளையே தமக்கு ஆதார அஸ்திபாரமாகக் கொண்டிருக்கின்றன வென்பதையும் செவ்வனே அறிந்து கொள்கிறோம்''

என்று கூறி, மறு உலக வாழ்க்கைகளை எல்லாம் ஆத்மார்த்தம் (ரூஹி) என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது.

(44) பக்கம் 225, 226, 227-ல்,

'' அவர்களுடைய நன்னம்பிக்கைகளென்பது சுவர்க்கலோக விருக்ஷங்களாகவும், அவர்களுடைய நற்கருமங்களே அவற்றின் கனிவர்க்கங்களாகவும் வந்து விளைகின்றன. எனவே அவர்களுடைய பரிசுத்தமான பாரமார்த்திக வாழ்க்கையால் உண்டுபண்ணப்பட்டிருக்கும் ஆத்மார்த்த சுவர்க்கத்தின் கனிகளையே அவர்கள்இவ்விடத்திலும் ருசி பார்க்கின்றார்கள்; இப்படிப்பட்ட ஆத்மார்த்த கனிகளையே மறு உலகிலும் அவர்கள் அதிகமாகப் புசித்துக்கொள்வார்கள்........இவையே தாம் உண்மையிலே சுவர்க்கலோகக் கனிகளாம்''

என்று கூறி, சுவர்க்கத்தையும் அதன் காருண்யங்களையும் ஆத்மார்த்த மானதென்று வாதிக்கிறார்.

(45) பக்கம் 242-ல்,

'' இவ்வுலக வாழ்க்கையில் முழுப் பரிபக்குவ மடைந்திருக்கும் மனிதர்கள் இவ்வுலகிலேயே அப்படிப்பட்ட சரீர மொன்று அமைக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்கிறார்கள்................இவ் விஷயத்தில் எனக்குச் சொந்தமான அனுபவமுண்டு: விழித்த விழிப்பு நிலையிலிருக்கும்போதே, பலப்பல சமயங்களில் இறந்துபோயிருந்த மனிதர்களின் தோற்றங்களை உவமதரிசனங்களாக யான் கண்டிருக்கிறேன். அநேக

விதமான கெட்ட மனிதர்களைக் கறும் புகைபோன்ற இருண்ட சரீரத்துடனே நான் பலமுறையும் பார்த்திருக்கிறேன். எனவேதான் இத்தகைய விஷயங்களில் எனக்குச் சுயமான அனுபவமுண்டென்று அறைந்து கொள்கின்றேன்.''

இதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் முழுதும் தவறாகயிருப்பதுடன் மிர்ஜா தம்மைப்பற்றி மிகைப்படக் கூறியிருப்பதாகவும் காணப்படுகிறது.

(46) பக்கம் 250, 251, 252, 253-ல்,

"இவ்வண்ணமாகவே இவ்வுலகிலிருந்து வரும் மனக்கொதிப்பென்பது தான் மறு உலக வாழ்க்கையில் எரிந்து கொண்டிருக்கும் அக்கினிப் பிழம்புகளாய்க் காணப்படும்...............இப்படிப்பட்ட அடக்க முடியாத ஆர்வங்களில் தோல்வியுறும்போதெல்லாம் அவனுடைய உள்ளத்தின்கண் அந்த நரகத்தின் ஜுவாலைதான் அனல் விட்டெரியத் தலைப்படுகிறதென்பதை நன்குணர்து கொள்கிறான்................அவன் றனக்கு இனி என் செய்வதென்னும் இடைவிடா ஏக்கத்தின் தோற்றமே காணப்பட்டு, தன்னரிய விருப்பங்கள் நிறைவேறவில்லையே என்னும் அவனுடைய மனவெரிச்சலும், கொடிய பெருமூச்சுகளும் எரிகின்ற அக்கினியின் ஸ்வரூபத்தையே அடைந்து விடுகின்றன.... ....இதுதான் அவர்களுக்குரிய நரக வேதனையின் ஆரம்பமாகும்.''

இவ்வாறு கூறி, நரகவேதனையை மறுத்து கூடார்த்தங்கள் செய்யப்பட் டிருக்கிறது. இது பெரும் வழிகேடான தவறாகும்.

(47) பக்கம் 259, 260-ல்

"நம்முடைய செய்கைகளை விட்டு நமக்குரிய சுவர்க்க நரகங்களெல்லாம் வெளியிலே வேறோரிடத்திலிருந்துவந்து முளைக்கும் பூதபெளதிக உலகங்களல்ல. நம்முடைய இகலோகச் செய்கைகளின் பலாபலன்களுக்குரிய நிலைமைகளே அப்பரலோகத்தின் சுவர்க்க நரகங்களாக அமைந்து விடுகின்றன............ சுவர்க்கலோகக் கழனிகளில் இகலோகத்திலுள்ள விருக்ஷங்களே போன்ற தருக்களே நடப்பட்டிருக்குமென்றும் நரகலோகத்தில் நெருப்புக்கற்களும் கந்தகமும் நிரம்பியிருக்குமென்றும் சொல்லக்கூடிய முறையிலே நாம் அவற்றினை ஸ்தூல உலகங்களென்று கூறுவது கிடையாது...........இஸ்லாத்தின் போதனையின்படி சுவர்க்கம் நரகங்களென்பன நாம் இகலோத்தி லிழைத்துவரும் காரியாதிகளின் சரியான பிரதிபிம்பமாகவே அமைந்து கிடைக்கின்றன.''

இதில், இவர் சுவர்க்க நரகத்துக்குச் செய்யும் வியாக்கியானப்படி, ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய சுவர்க்கம் நரகம் அவ்வப்போது பிரதிபிம்பமாக அமைகின்றன வென்று தெரிகிறது. இது இஸ்லாமிய ஷரீஅத்துக்கு முற்றும் விரோதமாக இருக்கிறது.

(48) பக்கம் 282, 283, 284, 285-ல்,

"ஏனை அடியார்களுக் கெல்லாம் பணி செய்துவந்த பேரூழியமானது சுவர்க்க லோகத்தின் விருக்ஷங்களாகவும் யாறுகளாகவுமே பிரதிபலித்து நிற்கும்.''

இதில், மனிதர்களுடைய செய்கைகள் தான் சுவர்க்க லோகத்து விருக்ஷங்களும் ஆறுகளுமாகுமென்று வியாக்யானஞ் செய்து, அதற்கு ஆதாரமாக 20-வது ஜுஸ்விலுள்ள ஸூரத்து ஷம்ஸை ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டிருப்பது மிக மிக வழிகேடாகும். இதற்கு உதாரணம் காட்டும்போது அந்த ஸூராவில் 'தமூத்' கூட்டத்தாருக்கு நபியாக வந்திருந்த சாலிஹ் (அலை.) அவர்களின் ஒட்டகமானது மனிதனுடைய ஆன்மா வென்றும் அந்த ஒட்டகம் பருகிய தண்ணீரெனப்படுவது 'அல்லாஹுதஆலாவின் மாட்டு காண்பிக்கப்படும் பக்தி விசுவாசத்தையும், அவனைக் குறித்து அறிந்துகொள்ளப் படும் ஞானத்தையுமே நன்கு குறித்து காட்டுகின்றது' என்று கூடார்த்த வியாக்கியானஞ் செய்வதானது அந்த பரமனின் பக்தர்களைப் படுகுழியில் தள்ளுவதாக இருக்கிறது.

(49) பக்கம் 322, 323, 324, 325-ல்,

"இத்தன்மைத்தாய ஆத்மார்த்த உன்னதத்திற்கு யான் உயர்த்தப்பட்ளேன் னென்னும் உண்மையை மறைப்பேனாயின், யானொரு அநீதியிழைத்த குற்றத்தையே செயதவனாவேன். எல்

லாம்வல்ல அல்லாஹுத் ஆலாவான வன் தனக்குரிய ஒரு அருளைக்கொண்டு எனக்கு அருள் பாலித்துள்ளான்; கண்ணில்லாதவர்கட்கு கண் பார்வை யளித்தற்பொருட்டு, தேடித் திரிபவர்களுக்கு அவர்கள் தேடி யலையும் வஸ்துவின் பக்கல் கொண்டுசென்று, சத்தியத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு, பல்லோர்களாலும் பேசப்பட்டு சில்லோர்களாலேயே கண்டுபிடிக்கப்பட்டு வருகின்ற அந்த பரிசுத்த ஊற்றைப்பற்றிய சுபசெய்தியை யான் அறிவிப்பேன்...........அதுதான் யான்மேலே குறிப்பிட்டுள்ள அல்லாஹ்வின் ஞன வெளிப்பாடாகும். மனிதனுடைய ஆத்மா அதனை மெய்யாகவே ஆசிக்குமாயின், அவனது ஹிருதயமும் அதனைத் தேடித்திரிவதாயின், மனிதர்கள் இந்த ரஸ்தாவைக்கண்டுபிடிக்க நாடி இதனையேதேடிப்புறப்படல் வேண்டும்....மற்றெல்லா இதர சமூக மனிதர்களுக்கும் ஆண்டவனுடைய ஞானேதயம் பெறுதற்குரிய வாயிலானது சாத்தப்பட்டே கிடக்கின்றது; ஆனல் நபிகள் நாயகத்தின் வழியைப்பற்றி நிற்பவருக்குமட்டுமேதான் அத்தகைய வாயிலானதுதிறந்து வைக்கப்பட்டிருக்கிறது. என்னெனின் எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவானவன் இவ்வழிக்குறியவாயிலை அடைத்து விடவில்லை........ஆண்டவன் சார்பான பரிபூரணஞானத்தைப் பெறுதற்குறிய ஒரே வழியானது அல்லாஹ்வின் திருத்தூதர்களுக்கு அருளப்பட்டுள்ள ஆசீர்வாதமென்னப்படும் ஆண்டகையின் (வஹீ) ஞான வெளிப்பாடாகவே இருக்கிறதென்பதை நன்குஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கடவீர்கள் ....ஆண்டகையின் ஞானேதயம்,ஞான வெளிப்பாடு என்னப்படும் அல்லாஹ்வின் அருட் கொடைகளுக்குறிய கதவுகள் விசாலமாக இன்னும் திறந்தே வைக்கப்பட்டே யிருக்கின்றன'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில், மிர்ஸாகுலாம் அஹ்மத் ஏதோ பெரிய அந்தஸ்தான ஒருஸ்தானத்தை வகிப்பதாக தாவாச் செய்யப்பட்டிருக்கிறதன்றி ஆண்டகையின் ஞானேதைய ஞான வெளிப்பாடான அந்தஸ்துகளை யெல்லாம் முஸ்லிமாகவுள்ள ஒவ்வொருவரும் தங்களது சுயமுயற்சி (கஸபீ) யினல் அடைதல்கூடுமென்றும், அத்தகைய ஞானவெளிப்பாடுகள் (வஹீ) இன்னும் வரக்கூடியதாக இருக்கிறதென்றும் அதற்குள்ள வாயில் விசாலமாகத்திறந்து வைக்கப்பட் டிருக்கிறதென்றும் தாவாச் செய்யப்பட்டிருக்கிறது. இது இஸ்லாத்திற்கு முற்ற முற்ற விரோதமாக இருக்கிறதென்பது வெளிப்படை.

N. B. இந்த ஞானபோதம் பக்கம் 171 முதல் 345 வரையில், பாரமார்த்தீகஙிலை, மரணத்திற்குப்பின் மனிதவாழ்க்கை யாது? ஆண்டவனை அறியும் ஞானத்தின்மூலங்கள் ஆகிய அத்தியாயங்களில் கூறப்பட்டிருப்பவைகளெல்லாம் குர்ஆன் ஹதீதுகளுக்கு முறண்பாடான முறையில் வரையப்பட்டு, மனிதர்களை வழிகெடுத்து பாதாளத்தில் தள்ளக்கூடியதாக யிருக்கிறது.

இயேசுவின் இரகசியம்.

இப் புத்தகம், லாகூர் காதியானி முஹம்மது அலீ என்பவரால் உர்தூவில் எழுதப்பட்ட "ஹகீகத்துல் மஸீஹை" அவருடைய அருமை சிஷ்யர் ஒருவரால் (பா. தாவூத்ஷா சாஹிபால்) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும் இதன்,

(50) பக்கம் 46 முதல் 58 வரையில்,

"இயேசுவின் ஜனனம் அற்புதமான ஜனனமே யல்ல வென்பதை ஸ்தாபிப்பதற்கு இதைக்காட்டினும் வேறு விளக்கமான வாக்கியமும் வேண்டுமோ?...............ஆண்டவனுடைய பரிசுத்த ஆவியால் மட்டுமே பீபி மர்யம் அவர்கள் ஈஸா நபியைக்கற்பத்திலடைந்தார்களென்பதற்கு எமது குர்ஆன் ஷரீபில் ஒன்றும் ஆதாரம் காணப்படவில்லை. ஆனல் இதற்குமாறுக, எமது நபி பெருமான் அவர்கள் ஒருமுறை நஜ்ரானிலிருந்து வந்திருந்த கிறிஸ்தவத் தூதர்களிடம் பின்வருமாறு சொல்லி அவர்களுடைய வாயை அடக்கி இருக்கிருர்கள் :—'நிச்சயமாகவே ஈஸா நபியின் தாயார் சாதாரணமான ஒரு பெண் பிள்ளை கெர்ப்பவதியாவது போலவே ஈஸாவை கற்பத்திலடைந்தார்கள்; சாதாரணமான பெண் பிள்·

ளை பிரசவிப்பதுபோலவே ஈஸாவின் தாயாரும் பிரசவித்தார். பிறகு சாதாரணமான ஒரு குழந்தை ஆகாராதிகளை உண்பதுபோலவே ஈஸாவும் உண்டு வளர்ந்தார்''—(ரூஹுல்மஆனீ, அத்தியாயம் 3,)……………ஆனால் குர்ஆனே கரீமில் ஈஸா (அலை.) தகப்பனில்லாமல் பிறந்தாரென்று எங்கேயும் குறிப்பாகக் கூட சொல்லப்படவே இல்லை என்று நாம் மறுபடியும் உறுதியாய்ச் சொல்வோம். இதுவுந்தவிர எமது நபிகள் நாயகமவர்களின் ஹதீதுஷரீபு (திருவாக்கியங்) களிலும் இவ்விதமான விஷயம் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் நாம் மேலே குறிப்பிட்டபடி ரூஹுல்மஆனியில் சொல்லப்பட்டிருக்கும் விஷயமானது,மஸீஹுக்குத் தகப்பனார் உண்டென்னும் உண்மையை உறுதிப்படுத்துகின்றது. ஆதலின் முஸ்லிம்களில் பெரும் பான்மையோர் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்களுக்குத் தந்தையார் இருந்தாரென்றே நம்புகின்றனர். …………………உலகநடையும், புருஷனும் பெண்சாதியும் எவ்விதச் சம்பந்தத்துடன் உயிர்வாழ்க்கை செய்கின்றார்களோ அவ்விதமாகவே யூசுபுன்னஜ்ஜாரிக்கும் மர்யம் ஸித்தீக்காவுக்கும் இல்லரசம்மந்த மிருந்து வந்ததென்று நடைமுதல் பைபிள்களால் நாம் நன்குணர்ந்து கொள்கிறோம். ஆனால் இவ்வளவு வெளிப்படையான ஆதாரங்களெல்லாம் இருக்கும்போது இவற்றிற்கு நேர்மாறாகச் சிலர் ஹஸ்ரத்தே மர்யம் பீபி அவர்கள், கல்யாணமாகாத கன்னிகையாகவே இருந்தா ரென்னும் வீணான கொள்கையை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள்………………இவர்கள் நினைப்பது தவறென்று எண்பிக்க எமது குர்ஆன் ஷரீபிலும் யாதொரு வாக்கியமும் காணப்படவில்லை………… இயேசுவுடன் கூடப்பிறந்த சகோதரர்களும் உண்டென்று பைபிள் புதிய ஏற்பாடு ருசுப்பிக்கின்றது……………… இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தன? இவன் தச்சனுடைய குமாரனல்லவா? இவன் தாய் மரியாள் என்பவளல்லவா? யாகோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர்க ளல்லவா? இவன் சகோதரிகளெல்லோரும் நம்மிடத்திலிருக்கிறார்களல்லவா? — (மத்தேயு 13: 57, 56) மஸீஹுக்குச் சகோதரர்களும் இருந்தார்களென்பதற்கு இன்னும் அத்தாக்ஷி வேண்டுமோ?…………ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்களுக்குத் தந்தையார் இருந்திருப்பாராயின் அவரை இப்னு மர்யம் (மரியத்தின்மகன்) என்று அழைக்கக்காரணமில்லை என்று கிறிஸ்தவ நண்பர்கள் சொல்லக்கூடும். இது சரியான காரணமாகமாட்டாது. ஏனெனின் தந்தைக் காட்டினும் தாய் மிகச் சிறப்புடையவளாக இருக்க நேர்ந்தால் அப்பொழுது அத்தாயின் பெயரைக் கொண்டே அப்பிள்ளைகளை அழைப்பது உலகவழக்கம். அலீ (ரலி.) அவர்களின் பிள்ளைகளை பனீஅலீ என்று சொல்லாமல் பனீ பாத்திமா என்றே அழைக்கின்றோம். காலஞ்சென்ற ஏழாவது எட்வர்டு மகாராஜாவை விக்டோரியா மகாராணியாரின் புதல்வரென்று அழைப்பது உங்களெல்லோருக்கும் தெரியும்……………………சில சாமான்ய முஸ்லிம்கள் ஈஸா (அலை.) அவர்களுக்கு தகப்பனில்லை என்று நம்புகின்றார்களாம்?………………இயேசுநாதர் தகப்பனில்லாமற்தான் பிறந்தாரென்று வற்புறுத்துவதற்கு எமது குர்ஆன் ஷரீபிலாவது ஹதீது ஷரீபிலாவது ஆதாரம் ஒன்றுமில்லை……………ஆண் புருஷனின் செயற்கை இல்லாமலே இயேசுநாதர் தம் மாதாவின் கர்ப்பக் கோளரைக்குள் புகுந்தாரென்பதற்கு இவ்வுலகில் யார்தான் சாக்ஷியஞ் சொல்லக்கூடும்……………சிலர் சொல்வதுபோல் இயேசுநாதர் தகப்பனில்லாமலே பிறந்திருப்பாராயின் அஃதோர் உற்பாத பிண்ட மாகத்தான் இருந்திருத்தல் வேண்டும்.'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுக்கு யூசுப் நஜ்ஜார் தகப்பன் என்பதும் ஹஸ்ரத் அவர்களுக்கு சகோதர சகோதரிகள் இருந்தார்களென்பதும் இவருடைய

தஅவாவாகயிருக்கிறது. தவிரவும் முஸ்லிம்களில் ஒரு சில சாமான்யரைத்தவிர மற்ற யாவரும் இதையே நம்புவதாகவும் வாதிக்கிறார். இதற்கு, திருக்குர்ஆனையும் ஹதீதையும் பைபிள்களையும் ஆதாரமாகக் காட்டியிருக்கிறார். பைபிள் கட்டுக்கதை என்று இவர் அதேபுஸ்தகத்தின் நான்முகத்தில் கூறியிருப்பதால் அதைப்பற்றி இங்கு பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியம் கிடையாது. குர்ஆன் ஹதீதுகளிலிருந்து ஆதாரம் காட்டுவதெல்லாம் பெரும் ஏமாற்றமாகவும் பொது ஜனங்களை வழிகேட்டிலாக்கி அவர்கள் கண்ணில் மண் போடுவதாகவுமிருக்கிறது. உதாஹரணமாக, இப்புத்தக ஆசிரியர் 'ரூஹுல் மஆனி' வால்யம் 3, அத்தியாயம் 3 என்று சுட்டிக்காட்டி, நஜ்ரான் தலைவர்களுக்கும் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களுக்கும் நடைபெற்றதாக பிரஸ்தாபித் திருக்கும் விஷயம் ஷெ கிதாபின் 3-வது வால்யம் 66-வது பக்கத்தில்விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதில் கிறிஸ்தவர்களின் திரித்துவக்கொள்கையை மறுத்து, ஈஸாநபியவர்கள் அல்லாஹ்வின் குமாரருமல்ல; அல்லாஹ்வுக்குள்ள தெய்வீக சக்தி அவருக்கு இருந்ததுமில்லை என்பதை ருஜுபடுத்தியும் இருக்கிறது. அது வருமாறு:—

"நிச்சயமாக கிறிஸ்தவர்கள் ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்களிடம் வந்து ஈஸப்னு மரியத்தைப் (அலை.) பற்றி வாக்குவாதஞ் செய்தனர்; அல்லாஹ் தஆலாவின்மீது பொய்யையும் அபாண்டத்தையும் கூறி அவருக்கு தகப்பன் யார் என்றும் கேட்டனர். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள், நிச்சயமாக தந்தையைப் போலவே தனயன் இருப்பான் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களன்றோ? எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஆம் மெய்தானென்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள், நிச்சயமாக எங்கள் றப்பானவன் ஹயாத்தானவன்; மரிக்கமாட்டான் என்பதையும் நிச்சயமாக ஈஸாவானவர் (அலை.) அவர்மீது அழிவு இனி வரும் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்களன்றோ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் மெய்தான் என்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் எங்களுடைய றப்பானவன் எல்லா வஸ்துக்களையும் நிலைநிறுத்துபவன் இன்னும் அதைக் காப்பாற்றுபவன் இன்னும் அதற்கு 'ரிஜ்க்' கொடுப்பவன் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களன்றோ? அதற்கு அவர்கள் ஆம், மெய்தான் என்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள், ஈஸாவானவர் (அலை.) இந்தக் காரியங்களிலெதற்கும் தகுதி பெற்றிருக்கிறாரா? என்று வினவ, அவர்கள் அல்ல என்றனர். பின்னர் நாயகம் (ஸல்.) அவர்கள் நிச்சயமாக அல்லாஹுத்தஆலாவுக்கு பூமியிலும் வானத்திலும் எந்த வஸ்துவும் மறைந்திருக்கவில்லை என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களன்றோ? என்று வினவ அதற்கு ஆம் மெய்தான் என்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்.) தனக்கு அறிவிக்கப்பட்டதைத் தவிர இவைகளில் எதையும் அறிவாரா? என்றார்கள். அதற்கு அவர்கள், அல்ல என்றனர். அப்பால் நாயகம் (ஸல்.) அவர்கள் நிச்சயமாக எங்களுடைய றப்பானவன் ஈஸாவை கர்ப்பக்கோளறையில், தான்நாடியபடி உருப்படுத்தினான் என்பதையும், எங்களுடைய றப்பானவன் உணவருந்தமாட்டான், பானம் பருகமாட்டான், புதிதானது அவனிடத்தில் புகுதாது என்பதையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்களன்றோ? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஆம் மெய்தான் என்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் நிச்சயமாக ஈஸாவை (அலை.) அவருடைய தாய், பெண்கள் கற்பத்தில் சுமப்பதுபோல் சுமந்தார்களென்பதையும் பெண்கள் பிரஸவிப்பதுபோல் அவரை ஈன்றெடுத்தார்களென்பதையும், பின்னர் குழந்தைகள் ஆகாரமருந்துவதுபோல் உணவருந்தினார்களென்பதையும், பின்னர் சோறு சாப்பிட்டுக் கொண்டு இருந்தாரென்பதையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர் களன்றோ? என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் ஆம் என்றனர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வாறாயின் நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பது போல் இவர் ஆகுவதெங்கனம்? என்று கூறினார்கள். அப்பொழுது அவர்கள் விஷயத்தைத் தெரிந்துகொண்டனர். பின்னர் சத்தியத்தை ஒப்புக்கொள்ளாமல் விலகிக்கொண்டனர்" இந்த சம்பாஷணையானது, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் இப்னுல்லா (அல்லாஹ்வின் குமாரர்) என்று கிறிஸ்தவர்கள் நம்பிக்கை கொண்டிருந்ததை மறுப்பதாக இருக்

கிறதென்பதை இச்சம்பாஷணையின் ஆரம்பத்தில் 'அவர்கள் அல்லாஆவின்மீதுபொய்யையும் அபாண்டத்தையும் கூறினார்கள்' என்ற வாக்கியத்திலிருந்து தெரிந்துகொள்கின்றோம். எனவே பீபி மர்யம் சித்தீகா அவர்கள் ஏனைய ஸ்திரீகளைப்போல் புருஷ சம்ஸர்க்கத்தின் பேரில் கர்ப்பமடைந்ததாக இந்த சம்பாஷணையிலிருந்து தெரிந்துகொள்வதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. மேலும் ரூஹுல்மஆனியானது, எந்த கிதாபிலிருந்து இந்த ஹதீதை எடுத்ததாகக் கூறியிருக்கிறதோ அந்த கிதாபில் இந்த ஹதீது சில மாறுதலுடன் இருக்கிறது. அதில் கூறப்பட்டிருக்கிற மாறுதலானது:—

(1) அவர்கள், அவருக்குத் தந்தை யார் என்று கேட்டனர். இன்னும் வணக்கத்துக்குறியவனை, தனக்கு மனைவியையும் மகவையும் வைத்துக்கொள்ளாத அல்லாஹுத்தஆலாவின்மீது பொய்யையும் அபாண்டத்தையும் இட்டுக் கட்டினர்யென்றும்

(2) பெண்கள் கர்ப்பமடைந்து பிள்ளையைப் பெற்றெடுப்பது போல் ஒருபெண் அவரை கர்ப்பத்திலடைந்து பெற்றெடுத்தனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தில், மனைவியையும் மகவையும் வைத்திராத அல்லாஹ்வின்மீது என்று சுட்டிக்காட்டி இருப்பதானது, நாம் மேலே கூறிய அபிப்பிராயத்தை வற்புறுத்துகிறது. தவிரவும் ஈஸா (அலை.) அவர்கள் கர்ப்பத்தி லிருந்தார்கள் என்பதைப்பற்றி குறிப்பிடுவதுதான், நாயகம் (ஸல்.) அவர்களின்நோக்கமாக இருந்ததேயன்றி பீபி மரியம்(அலை.) அவர்கள் யூசுப்நஜ்ஜாருடன்ஸம்சர்க்கம் செய்து ஈஸா (அலை.) அவர்களை கர்ப்பத்தில் சுமந்து பெற்றார்களென்று கூறுவது அவர்கள் நோக்கமல்ல. ஏனெனில், ஸ்திரீகள் கர்ப்பத்தில் அடைவதுபோல் அவரை (ஈஸாவை) ஒருஸ்ரீதிகர்ப்பத்தில் அடைந்திருந்தனள் என்று கூறியிருக்கின்றார்கள். தவிறவும் யூசுப் நஜ்ஜாரானவர் பீபி மர்யமுக்கு ஊழியஞ்செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தாரென்றும், அவ்விருவருக்குமிடையில் சதிபதிக்குறிய சம்பந்தம் இருக்கவில்லையென்றும் நன்கு ருஜவாகின்றது. இதுவிஷயமாய் அதே ரூஹுல்மஆனி 3-வது வால்யம் 146-வது பக்கத்தில், யூசுபுன்னஜ்ஜாருக்கும் மரியமுக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணையின் விபரம் கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பீபிமர்யம் (அலை.) அவர்களுக்கு யூசுப் நஜ்ஜார் ஊழியக்காரராக இருந்தாரென்றும் புருஷன் மனைவி என்ற சம்பந்தம் இருந்ததாகக் கூறுவதை மறுப்பதாக இருக்கிறதென்றும் தெரிந்து கொள்கிறோம். தவிரவும் ஈஸா (அலை.) அவர்களை கர்ப்பத்திலானது அல்லாஹுத்தஆலாவின் கற்பனையின் பேரில் புருஷ சம்பந்தமின்றியே ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதையே வலியுறுத்தி தப்ஸீர் இப்னுஜரீர் 3-வது வால்யம் 185-வது பக்கத்திலும் 16-வது வால்யம் 49-வது பக்கத்திலும் சரியான பல றிவாயத்துகள் காணப்படுகின்றன.

தவிரவும், அல்லாஹுத்தஆலாவானவன் தனது திருமறையின்கண், நிச்சயமாக அல்லாஹ்த ஆலாவிடத்தில் ஈஸாவுக்கு உதாரணமாவது ஆதம் (அலை.) உடைய உதாரணமாகும்'' என்று கூறி, ஈஸா நபியவர்களை அற்புதமாகச் சிருஷ்டித்ததை விளக்கி இருக்கிறான். தாயும் தகப்பனும், சுக்கிலமும் சுரோணிதமுமின்றி நமது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைச் சிருஷ்டித்த நாயனுக்கு, தகப்பன் மாத்திரமின்றி தாயின் சுரோணிதத்தால் சிருஷ்டிப்பது முடியாத காரியமா? அல்லது புத்திக்குத்தான் எட்டாத காரியமா? கோழிகளையும் புறாக்களையும் ஏனைய பக்ஷிகளையும் வளர்ப்பவர்கள் ஆண் பக்ஷியின் சேர்க்கையின்றியே பெட்டையானது முட்டையிடுவதை அனுபவத்தில்தெரிந்துகொண்டிருக்கிறார்கள். மனித வயிற்றில் குரங்கும், கோழிமுட்டையில் எலிக்குஞ்சும் உற்பத்தியாவது இக்காலத்தில் சகஜமாகிவிட்டது. பகுத்தறிவு அபிவிருத்தியில்லா அக்காலத்தில் தகப்பனின்றிப் பிறப்பது புத்திக்கு எட்டாததுபோலத் தோன்றினாலும், எல்லாம் தலைகீழ் பாடமாகப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கக்கூடிய இக்காலத்தில் அஃது பகுத்தறிவுக்கெட்டாததோர் விஷயமன்று. நிற்க, ஷெ நூலாசிரியர் தமது நூன்முகம் 26-ம் பக்கத்தில் பைபிள் வேதமானது நம்பத்தகாத கட்டுக்கதை என்றும், அதை ஒப்புக்கொள்ளுவதில் அதி ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்றும் எச்சரிக்கை செய்திருப்பதாலும், யூசுப் நஜ்ஜார் பீபி மர்யம் ஸித்தீக்காவுடன் புருஷன் மனைவி என்ற சம்பந்தமுள்ளவராக

இருந்தார் என்றும், ஹஜ்ரத் ஈஸாவுக்குச் சகோதர சகோதரிகள் இருப்பதாகக் கூறுவதும் பைபிள் கதைகளாக இருப்பதாலும் இக்கட்டுக் கதைகளை எல்லாம் முஸ்லிம்கள் நம்பக்கூடாது. இன்னும் மேனாட்டினர் ஸ்திரீகளுக்கு இஞ்ஜக்ஷன் செய்து கர்ப்பம் உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்திருப்பதாக இக்காலப் பத்திரிகைகளெல்லாம் கூறுகின்றன.

எனவே ஈஸா (அலை.) அவர்கள் தந்தையினால்தான் பிறந்தார்களென்பதும் அவர்களுக்குச் சகோதர சகோதரிகள் இருந்தார்களென்பதும் அபாண்டமான பொய்க் கூற்றுக்களாகும்.

(51) பக்கம் 91-ல்,

"இவ்வித அற்புதங்கள் இயேசுவின் ஜனன காலத்தில் நடந்ததாக எமது குர்ஆன் ஷரீபில் எங்கும் கூறப்படவில்லை. பிரசவ வேதனையால் துன்பப்படும்போது ஒரு பேரீச்சமரத்தின் அடியைப் பிடித்துக்கொண்டு பீபி மர்யம் அவர்கள் உதவி பெற்றார்களென்றும் அவர்களுக்கு பசியுண்டானபோது புதிதான பேரீச்சம் பழம் புசிப்பதற்குக் கிடைத்ததென்றும், தாக வரட்சியுண்டானபோது ஒரு நீர் ஊற்றினின்று குடிப்பதற்குத் தண்ணீர் கிடைத்ததென்றும் எம் திருவேதத்தால் தெரிந்துகொள்கிறோம். மணல் பிரதேசங்களில் பேரீச்சமரங்கள் அடர்ந்துள்ள இடங்களும் நீர்ஊற்றும் காணப்படுவது இயற்கைக்கு ஒத்த சகஜந்தான்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் ஜனனமான காலம் பேரீச்சை பழுக்காத காலமாக இருந்ததென்றும், மரியம் (அலை.) பிரசவ வேதனையின்போது எம்மரத்தடியிலிருந்தார்களோ அந்த மரம் பட்ட மரமாக இருந்ததென்றும் பிரசவத்தின் களைப்புத்தீர அந்த மரத்தை ஆட்டி அதிலிருந்து புதிதான பழங்கள் உதிர்வதைப் புசித்து ஆற்று ஜலத்தைக் குடிக்கும்படி அல்லாஹ் கூறினனென்றும் குர்ஆன் ஹதீது வாயிலாய்த் தெரிந்துகொள்கிறோம். இவ்விவரம் தப்ஸீர் இப்னு ஜரீர் ரூஹுல்மஆனி முதலிய கிரந்தங்களில் சவிஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. உண்மை இவ்வாறிருக்க இயேசுவின் இரகசியத்தில் இதனை மறுத்துக் கூறியிருப்பது சுத்தத் தவறாகும்.

(52) பக்கம் 94-ல்,

"யானையை வைத்திருந்தவர்களை எவ்வாறு உம்முடைய ரக்ஷகன் நடத்தினனென்று நீர் நிதானித்துப் பார்த்ததில்லையா? அவர்களுடைய யுத்தத்தை ஒரு குழப்பத்தில் வந்து முடியும்படியாக அவன் செய்துவிடவில்லையா? கூட்டங் கூட்டமான மாமிசப் பக்ஷணப் பக்ஷிகளை அவர்கள்மீது இறக்கவில்லையா? அவர்களைக் கட்டியான கற்களில் கொண்டுபோய் மோதவில்லையா? ஆதலின் அவர்களை மெல்லப்பட்ட வைக்கோலுக்குச் சமமாக அவன் ஆக்கிவிட்டான்"

என்று அம்மயத்துஜஹ்ஸ்விலுள்ள 'அலம் தரகைப' என்ற ஸூரத்துக்குத் தர்ஜுமாச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த தர்ஜுமாவானது முழுதும் தவறான தென்பது சாமான்யர்களுக்குக்கூட நன்கு புலனாகும். ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது தாயின் கர்ப்பக் கோளறையிலமர்வதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் 'அப்ரஹா' என்ற கிறிஸ்தவ அரசன் கஃபத்துல்லாவை இடித்து விடுவதற்காக யானைப்படையைத் திரட்டிக்கொண்டு வந்ததும், அக்காலத்தில் குறைஷியர்களுக்குத் தலைவராக இருந்த ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்கள் அல்லாஹ்வின் பக்கல் கஃபத்துல்லாவை ஒப்புவித்துவிட்டு அப்ரஹாவை எதிர்த்து யுத்தஞ் செய்வதற்குள்ள முஸ்திப்பு ஒன்றும் செய்யாதிருந்ததும், 'அபாபீல்' என்ற பக்ஷிகளை அல்லாஹுத்தஆலா அனுப்பியதும், அவைகள் சூடான பொடிக்கற்களைக் கொண்டுவந்து அவ்யானைப் பட்டாளத்தின்மீது போட்டதும் அதனால் அவர்கள் மடிந்ததும் நாயக சரித்திரம் படித்தவர்களுக்கு நன்கு தெரியும். இவ்விபரத்தை அல்லாஹுத்தஆலா மேற்கண்ட ஸூரத்தின் மூலமாக நன்மனோருக்கு அறிவித்து, கஃபாவை விரோதிகள் கையிலிருந்து காப்பாற்றியதை ஒரு கடாக்ஷமாக எடுத்து காட்டியுள்ளான். இவ் வுண்மையை மறைப்பதற்காகவும், இது ஒரு சாமான்ய விஷயமென எண்பிப்பதற்

காகவும், தமது யுக்திப்படி இந்நூலாசிரியர் மேற்கண்டவாறு மொழிபெயர்த்துள்ளார்.

(52) பக்கம் 97-ல்,

"ஊமையும், உன்மத்தமு மில்லாத எல்லாக் குழந்தைகளும் தொட்டிலி லிருக்கும்போதுதான் பேசக் கற்றுக் கொள்கின்றன. இவ்விஷயத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலா முக்குமட்டும் என்ன சிரேஷ்டமிருக்கிறதோ தெரியவில்லை.... சிசுவாயிருக்கும்போது அல்லது பாலக ஞக யிருக்கும்போது அவருக்கு வேத புத்தகமும் நபிப் பட்டமும் கிடைத் திருக்குமாயின் ஈஸாநபிக்கு அப் பொழுதே மற்ற லக்ஷணங்களும் உண் டாயிருத்தல் வேண்டுமன்றோ? அதா வது சிசுவிலேயே அவருக்கு ஆண்டவ னுடைய அனுக்ரகமும் உண்டாகி அதனால் அவர்கள் தொழுது வணங்கிக் கொண்டும் ஏழைவரி (ஜக்காத்) கொடுத் துக்கொண்டும் தாய்க்குத் தொண்டு செய்துக்கொண்டும் இருந்திருக்கவேண் டும். ஈஸாநபி இப்படியெல்லாம் சிசுவா யிருக்கும்போதே செய்தாரென்று யாம் எங்கேயும் கேள்விப்பட்டதேயில்லை. இவையெல்லாம் சிசுவா யிருக்கும் போது செய்யவில்லையென்றால், வேதப் புத்தகமும் தீர்க்கதரிசிப்பட்டமுமட்டும் அவர் சிசுவா யிருக்கும்போதே கிடை த்து விட்டனவென்று எப்படிச்சொல்ல முடியும்" எனக்கூறப்பட்டிருக்கிறது.

இந்த நூலாசிரியர் ஈஸா நபி அவர்கள் சிசுவாயிருந்த காலத்தில் தாயின் மடியி லிருந்து கொண்டு பேசவில்லை என்று ருஜுப்பிப்பதற்காகத் தமக்குத் தோன்றிய விதமெல்லாம் எழுதியிருக்கிறார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு நுபுவ்வத் வந்த மூன்று வருடங்களுக்குப்பின்னரே அவர்கள் பஹிரங்கமாக குறைஷிகளிடை இஸ்லாமியப் பிரசாரம் செய்தார்கள் என்று சரித்திரங்கள் பகர்கின்றன. நபிகள் நாயக மவர்களுடைய சரித்திரங்களிருந்து பெரு மானவர்களுக்கு 40-வது வயதில் நபிப் பட்டம் வந்தாலும் வேதத்துடைய சட் டங்களை எடுத்து நடந்ததானது அல் லாஹுத்தஆலாவுடைய கட்டளைப்படி படிப் படியே அமலில் வந்ததாகத் தெரிந்து கொள்கிறோம். ஈஸா நபி அவர்கள் சிசுவி லேயே நபியாக்கப்பட்டு வேதத்தைக் கொடுக்கப்பட்டதாகக் கூறிடினும், அதைப் போதிப்பதற்கும், அதன்படி நடப்பதற்கும் அப்போது கட்டளை அவருக்கு வரவில்லை என்று நாம் தெரிந்துகொள்ளலாம். ஆத லால் சிசுவாயிருக்கும்போதே அவர்கள் தொழுததாக ருஜுவாகாததும், ஏனையோ ருக்கு வேதத்தை போதிக்காததும் அவர் கள் நபியாக யில்லை என்பதற்கோ, வேதத் தைப் பெறவில்லை என்பதற்கோ ஆதார மாகாது.

எவ்வாறாயினும் யூதர்கள் மரியம் சித்திகா வைப் பார்த்து "ஹாரூனு"டைய சகோ தரியே! உன்னுடைய தகப்பனர் கெட்டவரல் லர்; உன் தாயும் வியபிசாரியல்ல; அவ்வாறிரு க்க நீவிர் மகா கெட்ட காரியத்தைச் செய்து விட்டீர் என்று கேட்டதற்கு, தம் சிசுவா கிய ஹஸ்ரத்ஈஸா (அலை.) அவர்களைச் சுட்டிக் காட்டியதாகவும் அதற்கு அந்த யூதர்கள், மடியில் சிசுவாக யிருப்பவரிடத்தில் எவ் வாறு நாங்கள் சம்பாஷிப்போம் என்று கூறியதாகவும் அதுசமயம் சிசுவாகிய ஈஸா (அலை) அவர்கள், நிச்சயமாய் நான் அல் லாஹ்வின் அடிமை; எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கிறான்; இன்னும் என்னை நபி யாக ஆக்கியிருக்கிறான் என்று கூறியதாகவும் நமது திருவேதம் வெளிவுபடக் கூறும் போது அதை மறுப்பதற்கு எவ்வித நியாய மும் இல்லை.

மேலும் தொட்டிலிலிருக்கும்போதுதான் குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்கின்றன. எனவே ஈஸா நபி தொட்டிலிலிருந்து பேசி னது ஓர் சாமானிய விஷயமென நூலாசிரி யர் பகர்கின்றார். ஆனால் திருக்குர்ஆன் வியாக்யானிகள் இச்சம்பவத்தில் கூறப்பட் டிருக்கும் "மஹ்து" என்னும் அரபிப்பதத் திற்கு தாயின் மடிதான் கருத்து; ஈஸா நபி பிறந்தவுடன் தாயின் மடியிலிருந்துகொண்டு பேசினார்கள் என வரைந்திருக்கிறார்கள். இதன் முழு விபரம் இப்னு ஜரீர் 16 வா. 60 பக்கம் பார்க்க.

(53) பக்கம் 110, 111-ல்,

"பிறருக்குத் தெரிந்தோ, தெரியா மலோ, இயேசுநாதர் உயிருடன் வான த்துக்கு உயர்த்தப்பட்டன ரென்று

எமது குர்ஆன் ஷரீபும் எங்கேயும் சொல்லவேயில்லை............ இயேசுநாதர் உண்மையில் வானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அவ்வரிய பெரிய அர்ப்புதமானது அவருடைய ஆயிரக்கணக்கான மற்ற அற்புதங்களைக் காட்டினும் அவர் சிலுவையில் அறைபட்டதைக்காட்டினும் ....மகா சிரேஷ்டமானதாயிருக்கும்போது அவ்வரிய விஷயத்தை இரண்டு சுவிசேஷக்காரர்கள் அடியோடு விட்டிருக்கக்காரணமில்லை'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதில் ஈஸா (அலை.) வான லோகத்திற்கு உயர்த்தப்படவில்லையென்றும், சிலுவையில் அறைபட்டாரென்றும் வற்புறுத்தப்படுகிறது. இவ்விரண்டு விஷயமும் திருக்குர்ஆனுக்கு முற்றும் விரோதமாயிருக்கிறது.

(54) பக்கம் 134, 135, 138, 139-ல்,

"எதிரிகளான எஹூதிகளின் சூழ்ச்சிகளிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆண்டவன் எதிர் சூழ்ச்சிசெய்து காப்பாற்றிய விஷயமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் சமாசாரம் மட்டும் யாதெனின், சிலுவையின் துன்மரணத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றி ஆண்டவன் சாதாரணமான மரணம் அவர்களுக்குச் சம்பவிக்கும்படி செய்தான் என்பதுதான்........... மூமின்களுள் மகாப்பெரிய கற்றறிந்த மகான்களும் உலமாக்களும் ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வுலகில் இறந்துபோய்விட்டதாகவே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் சொல்வது பொய்யென்று சாதிப்பதற்கு குர்ஆன் ஷரீபிலாவது, ஹதீது ஷரீபிலாவது ஒன்றும் ஆதாரம்கிடைக்கவில்லை. ஆனால் இவர்களுடைய அபிப்பிராயமே சரியானதென்று எண்பிப்பதற்குப் போதுமான வேத ஆதாரமும், நாயக வாக்கியங்களும் காணப்படுகின்றன. நமது சுன்னத் ஜமாஅத்தாரின் நான்கு முக்கிய இமாம்களுள் ஒருவரான மாலிக் (ரஹ்.) இமாம் அவர்களின் பெயரை இங்கு நாம் குறிப்பிடலாம். முற்காலத்தில் எழுதப்பட்டிருக்கும் மஷ்ஹூரான "மஜ்மஉல்பிஹார்'' என்னும் அகராதியை எழுதியவர், ஹகம் என்னும் பதத்தைப்பற்றி விவரித்துக்கொண்டுவரும்போது காலமாலிகுன் மாத "அவர் (ஈஸா நபி) இறந்துபோய்விட்டாரென்று மாலிக் இமாம் சொன்னார்'' என்று வியக்தமாக எழுதியிருக்கின்றார். இஃதேபோல் முஸ்லிம் என்னும் கிரந்தத்திற்கு வியாக்கியானமாக எழுதப்பட்டிருக்கும் இக்மால் இக்மாலல்முஅலம் என்னும் உரைநூலானது, உதபிய்யா என்னும் கிரந்தத்தில் ஈஸா நபி இறந்துபோய்விட்டதாக மாலிக் இமாம் நம்பினாரென்று எழுதப்பட்டிருக்கும் விஷயத்தை ஒத்துக்கொண்டிருக்கிறது.......................... மூஸா நபியும் ஈஸா நபியும் உயிருடன் இருப்பார்களாயின் அவர்களும் என்னைப் பின்பற்றும்படியாயிருக்கும் (ஸர்க்கானி 6-ம் பாகம் 74-ம் பக்கம்)........... ஈஸா நபி 120 வருஷம்தான் உயிருடனிருந்தார்கள். (திப்ரானி) என்று நாம் காண்கின்றோம். இதனால் ஈஸா நபி தமது 33-வது பிராயத்தில் சிலுவையில் இறந்தாரென்றாவது, அல்லது அப்பொழுது வானலோகத்திற்கு உயர்த்தப்பட்டாரென்றாவது எண்ணுவதற்கு இடமில்லை.

குர்ஆன் ஷரீபில் ஹஸ்ரத் மஸீஹ் அவர்கள் இறந்தே போய்விட்டார்களென்று திட்டமாக இவ்விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. .... யாஈஸா (அல்லாஹ்) உம்மை மரிக்கச் செய்வேன் — (குர்ஆன் 3-54)........... ....ஏ மரியத்தின் மகனான ஈஸா! உம்மையும் உம் தாயாரையும் அல்லாஹ்வைத் தவிரவேறு இரண்டு தெய்வங்களாகயிருக்கும்படி நீர் மனிதர்களுக்கு உபதேசம் பண்ணினீரோ என்று அல்லாஹ் தஆலா கேட்கும்போது அவர் சொல்லுவார்: உனக்கே எல்லாத் தூய்மையும் தகும்; சொல்வதற்கு எனக்கு அதிகாரமில்லாததை நான் சொல்லத்தகுமோ? நான் அவ்வாறு சொல்லியிருப்பேனாயின் உண்மையாகவே நீ அதை அறிந்திருப்பாய்; என் மனத்திலிருப்பதை நீ அறிவாய், உன் மனத்திலிருப்பதை நானறியேன்; நிச்சயமா

கவே நீ மறைவான இரகசியங்களை எல்
லாம் அறியும் பெரியவனு யிருக்கிருய்;
நீ எனக்கு கட்டளை யிட்டதையல்லா
மல் நான் அவர்களுக்கு ஒன்றும் சொ
ல்லவில்லை; என் ரக்ஷகனும், உங்கள்
ரக்ஷகனுமான ஏகநாயகனையேவணங்
குங்கள் என்றேன்; மேலும் அவர்களுக்
கிடையில் நான் ஜீவித்திருந்த மட்டும்
அவர்களுடைய செய்கைகளுக்கு நான்
சாக்ஷியாக யிருந்தேன்; ஆனுல் என்னை
நீ. மரிக்கச் செய்தபோது அவர்கள்மீது
நீதான் காவல் புரிந்துவந்தாய்; அத
ஞல் அவையெல்லாவற்றிற்கும் நீதான்
சாக்ஷி (குர்ஆன் 5: 116-117). குர்ஆன்
ஷரீபின் 3-54-ல் காணப்படும் முதவப்
பீக என்பதற்கு வியாக்யானஞ் செய்யும்
போது முமீத்துக்க என்று இப்னு அப்
பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்
கள் சொல்லியிருப்பதை ஸஹீஹ் புகாரி
யில் அந்நூலாசிரியர் எழுதியிருக்கிருர்.
.....................ஆதலின் அல் குர்ஆன்
5-117-ல் வரும் தவப்பைத்தனி என்ப
தற்கு என்னை நீ மரிக்கச்செய்தபோது
என்பதுதான் சரியான வியாக்கியானம்
...............ஆகவே இவ்விரண்டு ஆயத்து
களாலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இற
ந்துபோய்விட்ட விஷயம் சத்தியம்
என்று செவ்வனே உணர்ந்துகொண்
டோம்............... இறுதியில் அவர்கள்
இவ்வுலகத்திலேயே தமது 120-வது
பிராயத்தில் இயற்கையான மரணத்
தையே அடைந்தார்களென்பது தான்
சத்தியம்''. எனக் கூறப்பட்டிருக்கிறது
இதனுல் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள்
தங்கள் 120-வது பிராயத்தில் மரணமடைந்
துபோய் காஷ்மீரத்தில் அடக்கப்பட்டிருக்கி
ருர்களென்று மிர்ஸா செய்த தஅவாவை வற்
புறுத்துவதே இப்புத்தக ஆசிரியரின் முழு
நோக்கமாகத் தெரிகிறது. எனவே ஹஸ்ரத்
ஈஸா (அலை.) மரணமாய்விட்டார்களென்
பதை ருசுபிப்பதற்காகவேண்டி திருக்குர்
ஆனிலுள்ள 'முத்தவப்பீ' என்னும் வார்த்
தையை எடுத்துக்கொண்டு விவாதஞ் செய்
கின்ருர். திருக்குர்ஆனிலுள்ள அப்பதத்திற்
குரிய விவாதங்களெல்லாம் அரபி இலக்கியத்
தின் அகராதிப்படி, அப்பதத்திற்கு என்ன
பொருள் என்பதைப்பற்றிய விவாதமே
யன்றி ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மரண
மடைந்து விட்டார்களா? அல்லது ஜீவித்
திருக்கின்ருர்களா என்பதுபற்றிய விவாத
மல்லவென்பது ஆழ்ந்த சிந்தனையுடையோ
ருக்கு நன்கு புலனுகும். ஏனெனில், 'முத்த
வப்பீக' என்னும் பதத்திற்கு 'முமீதுக்க'
என்று இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள்
வியாக்கியானஞ் செய்திருப்பதாக இன்னேர்
பிரஸ்தாபித்து தங்கள் கூற்றுக்கு அதனையே
பிரதான ஆதாரமாகக் கொள்கின்றனர்.
உண்மையில் ஹஸ்ரத் அவர்களின் வியாக்கி
யானம் இன்னரின் கொள்கையை மறுப்ப
தாக இருக்கிறது. எவ்வாறெனில், ஹஸ்ரத்
இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் தங்கள்
தப்ஸீரில், இந்த மரணத்தைக்கொண்டு
கருத்தாவது: அவர்கள் வானத்திலிருந்து
இறங்கியபின் மரணமடைவதைக் குறி
க்குமென்று வரைந்திருக்கிருர்கள். இத
னையே வற்புறுத்தி புகாரி ஷரீபில் ஹஸ்ரத்
இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்
டும் மற்ருெரு ரிவாயத்து அறிவிக்கப்பட்
டிருக்கிறது. 'தவப்பா' என்ற பதத்திற்கு
தப்ஸீர்களில் பலவாருன அருத்தங்கள்
வாங்கி யிருந்தாலும் ஹஸ்ரத் ஈஸா (அலை.)
அவர்கள் வானத்திருந்து இறங்கிய பின்னர்
தான் மரணமடைவார்களென்றும் இது
போழ்து வானுலகிற்கு உயர்த்தப்பட்டிருக்
கிருர்களென்றும் ஏகோபித்துக் கூறி இருக்
கின்ருர்கள்.

பிரதான நான்கு மத்ஹபுகளிலொன்ருகிய
மாலிக் மத்ஹபின் ஸ்தாபகராகிய ஹஸ்ரத்
மாலிக் (ரஹ்.) அவர்கள், ஈஸா (அலை.) இறந்
துவிட்டார்களெனக் கூறியதாகச் சொல்வ
தும் சுத்தத் தவருகும். ஏனெனில், மாலிக்
(ரஹ்.) அவர்கள் கூறியதாகச் சொல்வதற்கு
இவர்கள் 'மஜ்மஉல்பிஹார்' என்ற ஒரு
நூலைத்தான் ஆதாரமாகக் காட்டுகின்றனர்.
அந்தகிதாபில் கூறப்பட்டிருக்கும் முழுவிவர
மும் வருமாறு:—"பெரும்பாலோர் ஹஸ்ரத்
ஈஸா (அலை.) மரணிக்கவில்லை என்றே கூறு
கின்றனர். மாலிக் என்பவர், அவர்கள் 33-
வது பிராயத்தில் மரணமடைந்துவிட்டதாகக்
கூறி யிருக்கிருர். ஆனுல் அவர், மௌத்தைக்
கொண்டு வானலோகத்துக்கு உயர்த்தப்பட்
டதை நாடி இருக்கலாம். அல்லது உண்மை
யான மரணத்தை நாடி இருக்கலாம். மேலும்
அவர்கள் பிற்காலத்தில் வானத்திலிருந்து

இறங்குவார்களென்ற செய்தியானது முத்தவாத்திராக இருப்பதால் கடைசியில் வருவார்கள்'' (முத்தவாத்திர் என்பது மறுக்க முடியாத ஒரு பெருங்கூட்டம் நாயகம் (ஸல்.) அவர்களிடமிருந்து இந்த ஹதீதை அறிவித்திருக்கிறூர்க ளென்பதாகும்) இதுதான் 'மஜ்மஉல்பிஹார்' உடைய வசனங்கள். இது ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் பிற்காலத்தில் வருவார்களென்பதை வலியுறுத்துகின்றது. மஜ்மஉல்பிஹாரில் சொல்லப்பட்ட 'மாலிக்' என்பது இமாம் மாலிக் அன்று. இமாம் மாலிக்காக இருந்தால் அக்கிரந்த கர்த்தா 'இமாம் மாலிக் றஹ்மத்துல்லாஹ்' என்று கூறியிருப்பார். மேலும் 'தஹ்தீபுத்தஹ்தீப்' என்னும் நூலில் 'மாலிக்' என்ற பெயருடையவர்கள் 42 பேர் இருந்ததாகவும், அவர்களிற் சிலர் வழிதவறிய கெட்ட கொள்கையுடையவர்களாயிருந்தனரென்றும் வரையப்பட்டிருக்கிறது. 'நக்துர்ரிஜால்' 'மீஜானுல் இஅதிதால்' என்னும் கிரந்தங்களில் 'மாலிக்' என்ற பெயருடைய 30 பேர்களை எடுத்துக் காட்டி அவர்களிலனேகர் நம்பத்தகாதவரென்றும் சிலர் முஅதஜிலாக்களென்றும் வரையப்பட்டிருக்கிறது. ஆதலால் மஜ்மஉல்பிஹாரில் கூறப்பட்டு அந்த கிரந்த கர்த்தாவால் மறுக்கப்பட்டுப்போன 'மாலிக்' என்பவர், இந்த 30 நபர்களிலொருவராகும். மேலும் ஹஸ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களால் எழுதப்பெற்ற பிரசித்திபெற்ற கிரந்தமாகிய முஅத்தாவில் ஹஸ்ரத் ஈஸா (அலை.) மரணமடைந்து விட்டதாகக் கூறப்படவே இல்லை. தவிர இமாம் அவர்களின் சிஷ்யர்களால் அந்த மாலிக் மத்ஹபின் கொள்கைகளையும் சட்ட திட்டங்களையும் பற்றி வரையப்பட்டுள்ள 'அல்பவாகிஹூத் தவானி அலாறிஸாலத்தி அபீஜைதினில் கைருவானி' 'யவாகீத்துவல் ஜவாஹிர்' முதலிய கிதாபுகளில் ஈஸா (அலை.) பிற்காலத்தில் இவ்வுலகில் வருவார்களென்றே வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மஜ்மஉல்பிஹாரில் கூறப்பட்டுள்ள மாலிக் என்பவர் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களல்லவென்பது திட்டமாய்விட்டது.

மேலே கூறப்பட்டவைகளாலும் இன்னும் குர்ஆன் ஹதீதுகளின் அநேக ஆதாரங்களாலும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்கள் உயிருடனே வானுலகிற்கு உயர்த்தப்பட்டார்களென்பதும், பிற்காலத்தில் இப்பூஉலகின்கண் இறங்குவார்களென்பதும் உறுதிப்படுகின்றது. இதுதான் நான்கு மத்ஹபுகளின் அகீதாவுமாகும். தவிரவும் மஜ்மஉல்பிஹாரிலுள்ள 'மாலிக்' என்னும் பதத்திற்கு முன் 'இமாம்' என்றும், பின்னல் (ரஹ்.) என்றும் இந்நூலாசிரியர் அதிகப்படுத்தியிருப்பதன் இரகசியத்தை தீர்ப்பளிக்கும் உலமாக்கள் கவனிக்கும்படி கோருகிறோம்.

(55) பக்கம் 156, 157, 159ல்,

"மேலும் காஷ்மீர தேசத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரில் கான்யார் வீதியில் ஒரு நபீ சாஹிபுடைய கோரியொன்று காணப்படுகின்றது; இதற்குள் அடக்கமாயிருப்பவரின் பெயர் 'நபீ சாஹிப்' 'ஈஸா சாஹிப்' அல்லது 'யூஸ் ஆஸப் நபீ' என்று அங்குள்ளோர் சொல்கின்றனர். இதனல் காஷ்மீர தேசந்தான் மேற்கூறிய ஆயத்தில் குறிக்கப்பட்ட மேட்டு நிலமென்றும் அங்கே ஸ்ரீநகரின் கான்யார்வீதியில் அடக்கமாயிருப்பவர்தான் நமது ஈஸா நபி யென்றும் பல கற்றறிந்த மகான்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஏற்கனவே ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையில் மரிக்கவில்லை யென்றும் அவர் சிலுவையிலறையப்பட்ட மூன்றும் நாள் மூர்ச்சை தெளிந்து மாறுவேஷத்துடன் வெளியேறிவிட்டாரென்றும் தெரிந்துகொண்டிருக்கிறோம்..........ஈஸா (அலை.) அவர்கள் பாலஸ்தீனத்திலுள்ள எதிரிகளினின்றும் விடுபட்டவுடன் காஷ்மீரத்துக்கு வந்து அங்குள்ள பனீஇஸ்ராயீல் கூட்டத்தின் பத்துப் பகுதியார்களுக்கும்உபதேசம் செய்துவிட்டுத் தம்முடைய 120-வது வயதில் மரணமடைந்து அங்கேயே அடக்கமாய் விட்டாரென்று தெரிந்துகொள்கிறோம். ஸ்ரீநகர் கான்யார் வீதியிலிருக்கும் தர்காவில் அடக்கமாயிருப்பவர் நமது ஈஸா அலைஹிஸ்ஸலாத்தைத் தவிர வேறொருவருமல்லவென்பதை எண்பிப்பதற்கு எண்ணிறந்த சாக்ஷியங்களுண்டு............இயேசுநாதர் எஹூதிகளின் சிலுவையினின்றும் தப்பிக்கொண்டுபோய்க் காஷ்மீரத்

தில் மிகுதி 87 ஆண்டுகள் வரையில் தம்முடைய சுவிசேஷங்களை உபதேசித்து விட்டு கடைசியில் அங்கேயே மரணமாகி ஸ்ரீநகரின் கான்யார் வீதியில் அடக்கமா யிருக்கிறாரென்று சந்தேகமறச் செம்மையாய்த் தெரிந்துகொள்கிறோம்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

உலகிலேயே இதுவரை எவரும் கூறாத இன்னும் கூறத் துணிவுகொள்ளாத இக்கூற்றை காதியானிகள்தான் முதன் முதலாகக் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். தவிரவும் இந்த நூதனக் கூற்றை ஆரம்பத்தில் கிளப்பியவர் குலாம் அஹ்மத் காதியானி என்பதும், இவரே பின்னர் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுடைய கபரானது காஷ்மீரத்திலன்று ; ஷாம் தேசத்தில் இருப்பதாக அல்லாஹுத்தஆலா தமக்கு அறிவித்திருப்பதாகவும் கூறியிருப்பதும் குலாம் அஹ்மதின் விரிவான சரித்திரத்தைத் தெரிந்தவர்களுக்கு மறைவான விஷயமன்று. மேலும் குலாம் அஹ்மதின் கலீபாக்களாகிய முகம்மதலிக்கும் காஜா கமாலுத்தீனுக்கும் இடையில்கூட, இந்த கபர் இருக்குமிட விஷயமாய் அபிப்பிராய பேதமிருப்பது, அஹ்மதிய்யா இயக்கத்தின் விஷயத்தை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். சமீபத்தில் சில மாதங்களுக்குமுன் தாருல் இஸ்லாம் பத்திரிகையில், மௌலவீ நூருத்தீன் என்பார் 'இன்னும் ஏன் விதண்டாவாதம்' என்னும் தலையங்கத்தின் கீழ் வரைந்திருந்த வியாசத்தில், பாரஸீக தேசத்திலிருந்து வந்த வர்த்தகக் கூட்டத்தினர் மதீனாவிற்குச் சமீபத்திலுள்ள ஒரு மலையில் அழிந்துபோன இரண்டு கபர்களின் அடையாளங்களைக் கண்டதாகவும் அதிலொன்றில் நடப்பட்டிருந்த கல்லை எடுத்துவந்து படித்துப் பார்த்ததில் அந்தக் கல்லில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கபறு என்று எழுதப்பட்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே ஈஸா (அலை.) மரணமடைந்து போனதாகக் கூறும் இவர்களுக்குள்ளேயே கபறு விஷயமாக முடிவான ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கவில்லை எனத் தெரிகிறது. இதுவன்றி இவர்கள் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டதாக ருஜூப்பித்துத் தங்கள் மதகுருவான மிர்ஜாவை அவருடைய அவதாரம் என ஸ்தாபிப்பதற்காக எடுத்துக் கொண்ட அபார முயற்சி சம்பந்தமாக எழுதப்பட்டிருக்கும் ஒரு சம்பவத்தை ஈண்டு குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்குமென நினைக்கிறோம். அதாவது, இந்த மிர்ஜாவால் அனுப்பப்பட்ட ஒருசிலர் காஷ்மீரம் சென்று அங்குள்ள ஒரு சமாதியின் பணியாளர்கட்குப் பொருளாசை காட்டி "இந்த சமாதியானது ஈஸா (அலை) உடையது என்று எங்கள் தந்தை தாதா மூலமாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்'' என்று எழுதிக் கையொப்பமிட்டுத் தரும்படி கேட்டுக்கொண்டனர் என்றும், அதற்கு அவர்கள் பணத்திற்காகப் பொய் சொல்லத் துணிவு கொள்ளாமல் அவர்களை விரட்டி விட்டனர் என்றும் காஷ்மீரத்தின் பிரக்யாதிபெற்ற மத பக்தரும், பிரபல வணிகருமான ஜிவ் என்பவர் கூறுவதாக ஹஜரத் மௌலானா ஸெய்யித் பீர்முஹர்அலி ஷாஹ் சாகிப் தமது "ஸைபயே சிஷ்தியாயி என்னும்'' புத்தகத்தில் கூறி இருக்கிறார். எவ்வாறாயினும் இவர்கள் குலாம் அஹ்மத் காதியானியை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும், மஹ்தி என்றும், முஜத்தித் என்றும் முஹத்தித் என்றும் ஸ்தாபிப்பதற்காகவே இவ்வாறான ஆதாரமற்ற பொய்க்கூற்றுக்களை முன்னுக்குப்பின் முரண்பாடான விதத்தில் கூறிவருகின்றார்களென்பது வெள்ளிடைமலை.

குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத்தஆலா, ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலறையப் படவில்லை என்று பஹிரங்கமாய் அறிவித்திருப்பது இவர்களின் கூற்றை ஏகதேசத்தில் மறுப்பதோடு ஸஹீஹான ஹதீதுகளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பிற்காலத்தில் வானுலகிலிருந்து இறங்கியபின் மதீனா முனவ்வறாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ரௌலாவில் அடக்கஞ் செய்யப்படுவார்களென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரங்களை உரைகல்லாக வைத்துப் பார்ப்போமானால், காதியானிகள் கூறுபவைகளெல்லாம் பிரயோசனமற்றதாகு மென்பது நன்கு புலனாகும்.

ஈஸா (அலை) அவர்கள் பிணத்துக்கு உயிர் கொடுத்த விஷயம், களிமண்ணினால் பக்ஷிகளைச்செய்து அதனைப் பறக்கவிட்ட விஷயம், குருடர்களுக்குப் பார்வை ஏற்படும்படி செய்த விஷயம், செவிடர்களுக்கு கேழ்க்கும்

சக்தியை அளித்தது, குஷ்டரோகிகளைக் குணப்படுத்தியது, பள்ளி மாணவராக இருந்தகாலத்தில் இதர மாணவர்களின் வீடுகளில் தயாரிக்கப்பட்டிருந்த பதார்த்தங்கள் இன்னின்ன வைகளென்று மறைவிலிருக்கும் போது கூறியது முதலியபல அற்புத நிகழ்ச்சிகளையெல்லாம் மறுத்து, இது சம்பந்தமாய் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் 3-48, 5-110 முதலிய வசனங்களுக்கெல்லாம் பக்கம் 172 முதல் 231 வரை கூடார்த்த வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பிணங்களையும் பறவைகளையும் உயிர்ப்பிக்கவில்லை, வலையர்களாகவும் புலையர்களாகவும் இருந்த கீழ்தர மக்களுக்கு ஆத்மார்த்த உன்னதத்தைக் கொடுத்து ஆகாயத்தில் பறக்கக் கூடியவர்களாக ஆக்கிவிட்டது தான்என்றும், பிறவிக் குருடர்களுக்கும் செவிடர்களுக்கும் குஷ்டரோகிகளுக்கும் வியாதிகளை நீக்கியதாக குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பது, அவர்களுடைய ஆத்மார்த்த வியாதியை நீக்கியதுதான் என்றும் வலிந்து பொருள் கொண்டிருக்கிறார். இவைகள் திருக்குர்ஆனில் பஹிரங்கமாய்க் கூறப்பட்ட முஅஜிஸாத்துகளை மறுப்பதாகயிருக்கின்றன.

(57) பக்கம் 312, 321-ல்,

"இப்னு மரியம் என்பவர் ஒருவர் பின்னொருகாலத்தில் நாஸிலாவாரென்று சொன்னமாத்திரத்தில் முன்னே மவுத்தை யடைந்து சென்றுபோன ஈஸா நபி மீண்டும் வானத்திலிருந்து உயிர் பெற்றுக் குதிப்பார் என்று தாத்பரியம் கொள்வது அறியாமையேயாகும்........ ஆனால் உண்மையான ஹதீதுகளில் ஓர் இப்னு மரியத்தின் நுஸூலில் சொல்லப்பட்டிருக்கிறதே, அதற்கென்ன சமாதானம் என்று பலர் சிந்திக்கக்கூடும். ஆனால் பின்னே வரவேண்டிய இப்னு மரியம் என்பவர் பனீஇஸ்ராயீல் கூட்டத்தாரின் இப்னுமரியம் அல்லவென்று கொள்வதற்குப் போதுமான சாக்ஷியம் நமது நபிபெருமானாரின் திருவாக்கியங்களிலேயே வேண்டிய மட்டும் கிடைக்கின்றது............. இதனால் நாம் கடைசியில் முடிவாகத்தெரிந்துக்கொள்வதுயாதெனின், பின்னே வரவேண்டிய இப்னுமரியமும், முன்னே இறந்துபோன இஸ்ரவேல் கூட்டத்தாரின் இப்னுமரியமும் ஒரே மனிதரல்ல, ஆனால் வெவ்வேறு மனிதர்கள்தான் என்பதே................இதனால் பிற்காலத்திய 'இமாம் இப்னுமரியம்' என்பவர் வெளியிலிருந்து வராமல் உம்மத்தே முஹம்மதியாவிலிருந்தே தோன்றுவாரென்பது தெளிவாக விளங்குகிறது. ....ஆகவே ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஒரு நபியாகவேனும், முஜத்திதாகவேனும் ஒருபோதும் திரும்பி வரப்போகிறதில்லை. அவர் இறந்தவர் இறந்தவரே; இனி ஒருபோதும் எழுந்து வரமாட்டார். இது நிச்சயம்.............. ஆனால் அவரைப்போன்ற ஒருவர் அவருடைய ஆவியிலும் தத்துவத்திலும் வருவாரென்பதுதான் அதன் தாத்பரியம். இப்படிப்பட்ட மனிதர்கள் நிச்சயமாக எம் நபிகள் நாயகத்தின் உம்மத்தில் உதித்துக் கொண்டேயிருக்கிறார்கள்; இன்னும் உதித்துக் கொண்டிருப்பார்கள்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த தாவா ஆதாரமற்ற தாவாவாகும். ஏனெனில், ஸஹீஹ்முஸ்லிமில் "ஜாபிர்" றலி அவர்களாலும், நவாஸிப்னு ஸம்ஆன் (றலி) அவர்களாலும், ஹுதைப் பத்திப்னு அஸ்யதுல் கபாறி (றலி.) அவர்களாலும், இப்னுமாஜாவில் அபீ உமாமத்துல் பாஹிலி அவர்களாலும், அபூதாவூதில் அபூஹுரைரா (றலி) அவர்களாலும், முஸ்னதே அஹ்மதில் அபூஹுரைரா (றலி) அவர்களாலும் சொல்லப்பட்டிருக்கும் ஹதீதுகள் யாவும் பின்வரப்போகிற இப்னுமரியம், ஈஸா அலைஹிஸ்ஸலாம் யென்றே பெயர் குறித்து சுட்டிக்காட்டுகின்றன. எனவே ஈஸா (அலை)வைப்பற்றி சந்தேகிப்பதற்குங் கூட இடமில்லாதவாறு அவர்களின் அங்க அடையாளங்களெல்லாம் ஹதீதுகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பொதுவாகக் கூறுமிடத்து 'இயேசுவின் இரகசியம்' என்னும் இப்புத்தகம் கிறிஸ்தவர்கள் விடுத்த வினாக்களுக்கு மறுப்புச்சொல்ல வேண்டும் என்ற முறையில் எழுதப்பட்டிருப்பினும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நம் இஸ்லாத்தின் சட்டபடி முர்ஸலான உலுல் அஸ்மான நபியாக யிருப்பதால், இந்நபியவர்களைப்பற்றி திருக்குர்ஆனிலும், ஹதீது

களிலும் வந்திருக்கிற சகல விஷயங்களையும் நாம் ஒப்புக்கொண்டு கௌரவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே நபீ அவர்கள் யூசுபு நஜ்ஜாருக்குப் பிறந்தாரென்றும், இவர்களது பிறப்பு அற்புதமன்றென்றும், இவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்களென்றும், காஷ்மீரத்தில் அடக்கப்பட்டிருக்கிறார்களென்றும் கூறுவதும் இப்பெருமகருக்கு அல்லாஹுத்தஆலா அளித்திருந்த அற்புதங்களை மறுத்து அது சம்மந்தமாய் திருக்குர்ஆனில் சொல்லப்பட்ட வாக்கியங்களுக்கு குதர்க்க வியாக்கியானம் செய்வதும் இஸ்லாமார்க்கச் சட்டபடி ஆகாத காரியங்களாக யிருக்கின்றன. இதுவன்றி இப்பெருமகரின் அந்தஸ்துக்குத் தகாத வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருப்பது கண்டிக்கத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமாகும். இப்புத்தகம் மேற்குறிப்பிட்ட கருத்துக்களைக் கொண்டே நிரப்பப்பட்டிருப்பதால் முஸ்லிம் பொதுஜனங்கள் இதனால் வழி விலகிப்போக சந்தர்ப்பமுண்டு. எனவே இப்புத்தகம் ஆரம்பமுதல் கடைசிவரை தப்பு என்றே சொல்லலாம்.

நாயகமான்மியம்.

(58) நூன்முகம் பக்கம் 7-ல்,

"தண்டமும், சர்ப்பமும், கல்லும், கடலும், அக்கினியும், இயற்கைக்கு விரோதமாகக் காணப்படுவனவே போல் சாதாரண மக்கள்முன் தோன்றுமாறு அப்பெரியார்கள் செய்வித்தார்கள்"

இவ் வாக்கியம் நபிமார்கள் அல்லாஹ்வின் உதவியால் செய்து காட்டும் அற்புதங்கள், ஜாலவித்தைக்காரர்கள் காட்டுகிற செப்பிடு வித்தையைப்போல் இருக்கின்றன வென்று அருத்தப்படக் கூடியதாக யிருக்கின்றது.

(59) பக்கம் 49-ல்,

"நூபுவ்வத் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டபோது நபிகள் திலகம் தங்களுக்குள்ள இப்பெரும் பளுவான கடமையைக் கண்டு சிறிதே மனம் தளங்கினார்கள். அதுபோழ்து கதீஜா நாயகி (றலி.) அவர்கள் பின் வருமாறு அவர்களுக்கு உறுதிகூறித் தேற்றினார்கள்.

இஃதோர் சரித்திரத் தப்பாகும். ஏனெனில் இஃது ஹிராமலையில் நபிகள் திலகம் அவர்களிடத்தில் ஜிப்ரயீல் (அலை) வந்த போது ஏற்பட்ட சம்பவத்தை சுட்டிக் காட்டுகிறது. கதீஜா பிராட்டியாரிடத்தில் பெருமானார் இச் சம்பவத்தின் விபரத்தைச் சொன்னபோது நுபுவ்வத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கவுமில்லை, அதைப்பற்றி இவர்களும் அவ்வமயம் உணர்ந்துகொள்ளவுமில்லை. வரக்கத்துப்னு நவ்பலைக் கண்டுபேசிய பின்னர்தான் நுபுவ்வத்தைப்பற்றி சிறிது விபரம் தெரிந்துகொண்டார்கள். எனவே கதீஜா நாயகி (றலி.) அவர்களிடம் வந்து கூறும்போதே, நுபுவ்வத்தைப்பற்றி பிரஸ்தாபித்து மனம் தளங்கினதாகக் கூறுவது தவறாக யிருப்பதுடன், பெருமானாரின் அந்தஸ்த்துக்குத் தகாததாயுமிருக்கிறது. ஏனெனின் அவர்கள் ஆண்டவனால் அருளப்பட்ட நுபுவ்வத்தைக்கொண்டு மனந் தளங்கக்கூடியவர்களல்லர்.

(60) பக்கம் 174-ல்,

"சென்ற 15 ஆண்டுகளாக அவர்களுடைய உள்ளத்தின்கண் ஊன்றிக் கிடந்த தபோபலம் முழுதும் இப்பொழுது இந்த முதல் வஹியென்னும் ஒரே ஒரு பொரியால் பெருஞ் சோதியாகப் பற்றிக்கொண்டு வெளிக்கிளம்பத் தயாராய் விட்டது."

இவ் வாக்கியம், நாயகமவர்கள் 15 வருடம் செய்த தவம் முழுதும் வஹீயாக மாறி வெளிக்கிளம்பி விட்டதாக அறிவிக்கிறது. இதைச் சுருங்கச் சொல்லவேண்டுமாயின், நுபுவ்வத்தானது "கஸபீ" யென்னும் சுயமுயற்சியால் கிடைத்ததென்று பொருள் கொள்ளக்கூடியதாக யிருக்கிறது. இது தவறாகும். ஏனெனின், நுபுவ்வத்தானது "வஹபீ" அதாவது ஆண்டவனின் அநுக்ரஹத்தினால் கிடைக்கக்கூடியதாகும்.

(61) பக்கம் 175ல்,

"ஹிராவில் அந்த முதல்வஹீ ஜிப்ரயீலால் லைலத்துல் கத்று இரவில் கொண்டு வந்து கொடுக்கப்பட்டதன்பின் சில காலமட்டும் மீண்டும் அந்த வானவர் அந்தறஸூலிடம் வரவேயில்லை."

ஷை பக்கம் 168-ல் "நமது பெருமானவர்களுக்கும் றமலான் மீ 27உ புருகானுல் மஜீது வெளிவரத் தலைப்பட்டது."

ஹிராமலையில் முதன் முதலாக நாயக மவர்களுக்கு வந்த வஹீயானது றமலான்மீ 27உ தான் என நம்பிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இது சரித்திரத்தப்பு. ஏனெனின் றபிஉல் அவ்வல்மீ திங்கட்கிழமையன்று வந்ததாகத்தான் சரித்திரங்கள் கூறுகின்றன.

(62) பக்கம் 293 முதல் 308 வரை,

நாயகம் அவர்களுடைய மிஃறாஜ் சம்பந்தமாக எழுதப்பட்டிருப்பதில் அவர்களின்ரூஹூக்குத்தான் மிஃறாஜ் ஏற்பட்டதென்று வற்புறுத்தி எழுதப்பட்டிருக்கிறது. அது முதலாவது தப்பு. இதற்கு ஸய்யித்சுலைமான் சாஹிப்நத்வி அவர்களால் எழுதிய நூலை ஆதாரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலில் கூறப்பட்ட விஷயத்திற்கும் இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயத்திற்கும் மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறது.

(73) பக்கம் 295ல்,

ஐந்து நேரத்துத் தொழுகை மிஃறாஜின் போது கடமையாக்கப்படவில்லை யென்பதாக விவாதிக்கப்படுகிறது.

(64) பக்கம் 334ல்,

> தூக்குமரத்தில் தொங்கப் போகும் போது வேறொருவர் ஓலமிட்டதே போல் என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று பிரலாபித்த வண்ணம் நம்பெருமானார் ஓலமிட்டழாது..........'' எனக்கூறப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை.) அவர்கள் யூதர்களிடம் அகப்பட்டு சிலுவையில் அறையப்படும்போது ஏலீ ஏலீ லாமா ஸபக்தனி (என் தேவனே! என் தேவனே! ஏன்என்னைக் கைவிட்டீர்) என்று கதறியதாக கிறிஸ்தவர்கள் தங்கள் பைபிள் புதிய ஏற்பாட்டில் எழுதி வைத்திருக்கின்றனர். இதை நம்பிக்கொண்டு இந்நூலாசிரியர்களும் இவ்விடத்தில் இதனை புகுத்தியிருக்கின்றனர். இது நம் திருமறைக்கு நேர்முரணானது.

(65) பக்கம் 375ல்,

> "சில அறியாத மாக்கள் பௌத்தர்களென்றும், கிறிஸ்தவர்களென்றும் மூலபுருஷர்களுடைய நாமங்களை சுட்டிக்காட்டி அழைத்துக் கொண்டிருப்பதேபோல் இஸ்லாம் மார்க்கத்தைக் கைகொண்டவர்களைமுகம்மதியர்களென்று தவறாக அழைத்துக்கொண்டிருக்கின்றனர்.'' எனக்கூறப்பட்டிருக்கிறது.

திருக்குர்ஆனில் யூசுப் நபியவர்கள் மில்லத்தஆபாயி இப்றாஹீம, வஇஸ்ஹாக்க, வயஃகூப என்று கூறியிருப்பதைக்கூட ஆராய்ந்து பாராமலும் நமது அரிய பெரிய இமாம்களும், சூபியாக்களும் நம்மவரை உம்மதெ முஹம்மதிய்யாவென்று அழைத்திருப்பதையும் சிந்தித்துப் பாராமலும் அறியாமாக்களென்று அறைந்திருக்கிறார்கள். இதுவும் தவறு.

இஸ்லாம் எப்படிச் சிறந்தது

இப்புத்தகம் டாக்கா சர்வகலாசாலையைச் சேர்ந்த தாஸ்குப்தா என்னுமொருவர் இஸ்லாத்தைத் தழுவி, தாம் இஸ்லாத்தில் சேர்ந்ததற்குள்ள காரணத்தைப்பற்றிச் செய்த பிரசங்கமொன்றை அநுசரித்து தாவூத்ஷா சாஹிபால் எழுதப்பட்டது. இப்புத்தகம் முதல் பாகம் ஷெ நவ்முஸ்லிமைச் சேர்ந்தது. அதன் இரண்டாவது, மூன்றாவது பாகங்கள் பா. தா. வால் சேர்க்கப்பட்டது.

(66) பக்கம் 76 முதல் 84 வரையில்,

நரகம் சுவர்க்கம் என்றதைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது அதில், ஜவாஹிருல் புர்க்கானில் நரகம், சொர்க்கத்தைப்பற்றி செய்திருக்கும் தஅவாக்கள் முழுதும், இஸ்லாமிய ஞான போதத்தில் மரணத்திற்குப்பின் மரித்தவர் நிலை யாது என்ற அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தின் சாரமும் இதில் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயமானது ஜனங்களைப் படுகுழியில் தள்ளத்தக்க விதமாய் எழுதப்பட்டிருக்கிறது. உதாரணமாக 82-வது பக்கத்தில் கூறியிருக்கும் விபரமாவது :—

> "எரிகின்ற அக்கினிக்குழம்பு கொதித்துக்கொண்டிருக்கும் பெரிய எரிபோன்ற விசாலமான நரகம் ஒன்றுண்டென்றும், அதில் மனிதர்கள் கிடந்து துள்ளித்துள்ளிக் கதருவார்களென்றும்சொல்லிக்கொள்பவர் சொல்லட்டும், அவர்கள் அப்படிப்பட்ட நரகில் வீழ்ந்து வெந்துகொண்டே கிடக்கட்டும், இன்

னும் சிரசில் தங்கக் கிரீடம் சூடிக் கொண்டு மேக சஞ்சாரம் செய்து கட வுளை அல்லும் பகலும், அனவரதமும் துதித்துக்கொண்டு இருப்பது தான் சுவர்க்கபோகமென்று சொல்லிக்கொள் பவர் அப்படிப்பட்ட சுவர்கானந் தத்தை அடைந்து திருப்தி யடையட் டும். ஆனல் எமக்கு அப்படிப்பட்ட ஒரே மந்தமான சுவர்க்கபோகம் வேண் டாம், ஒரேவித ஆனந்தத்தால் எமக்கு சலிப்பு உண்டாகும். திகட்டும்படியான ஒரேவித போகம் எமக்கு ஒருபோதும் தேவையில்லை. ஒரு படித்தரத்திலிருந்து மற்றொரு படித்தரத்திற்கு மேன்மே லும் விருத்தியடைந்து கொண்டே போகக்கூடிய ஷவ்க்கு தரத்தக்க சுவர்க்கமே இஸ்லாமிய சுவர்க்கமாகும். அதுதான் எமக்கு ஷவ்கைத் தரத்தக் கது (குர்ஆன் 66-8)''

இவ்வியாசம் மஹாஜனங்களின் ஹிருதயத் தைக் கெடுத்து அவர்களை தப்பானவழியில் கொண்டு செல்லக்கூடியதாக யிருக்கிறது.

(67) பக்கம் 89ல்,

"நரகமானது என்றென்றைக்கும் அழியக்கூடாத இடமென்று எமது முஸ்லிம்கள் நம்புவதில்லை.................. இதனல் அந்த நரகமானது ஊழியூழி காலம் நிரந்தரமா யிருக்கத் தேவை யில்லை'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இஃது முஸ்லிம் கொள்கையென்று சொல் லிக்கொண்டு இஸ்லாத்திற்கு மாற்றமாய் வரையப்பட்டிருக்கிறது.

(68) பக்கம் 176 முதல் 180 வரையில்,

"இஸ்லாம் முஹம்மதிய்ய மார்க்கம் அன்று''

என்பதாகக் கூறிக்கொண்டு முஹம்மதிய்ய மார்க்கம் என்று கூறுவதை பெரிய தவறு என்று வாதிக்கிறார். இவ்வாதம் தவறென் பதை முன்னர் விபரிக்கப்பட்டிருக்கிறது.

ஈமான்.

(69) பக்கம் 30 முதல், 33 வரை,

"வல்கத்ரிகைரிகி வ ஷர்ரிஹி'' என்ற விஷ யத்தை அகாயித் கிதாபுகளுக்கு விரோத மான முறையில் வியாக்கியானம் செய்யப்பட் டிருக்கிறது.

(70) பக்கம் 36 முதல், 37 வரை,

"சுவர்க்கானத்தை அனுபவிப்பதும், ஜன்னத்துக்குள் பிரவேசிப்பதும் சூ க்ஷம தேகந்தான். இகலோகத்தில் எவ னொருவன் ஆத்ம சுகமடைகின்றானே, அவனே பரலோகத்திலும் பரமானந்த மெய்துவான். இம்மையின் தொடர்ச் சியே மறுமைக்கு சூக்ஷமமாய்த்தொடர் ந்து செல்லுகின்றது..................மரண மென்னும் பாலத்தைக்கடந்து அக்கரை சென்றவுடன் அங்கே சூக்ஷ்ம தேகிக ளாய்ப் போய்விடுகிறோம்.'' எனக் கூறப் படுகிறது

இதில் மறு உலகவாழ்க்கை, சூக்ஷ்மதேகத் தைப் பொருத்ததென்றும், நரகமும் சுவர்க் கமும் சூக்ஷ்மம்தானென்றும் தாவா செய்கி றார். இஃது ஞானபோதக் கொள்கையென் பதில் ஐயமில்லை. இக்கொள்கை திருக்குர்ஆன் போதனைக்கே முற்ற முற்ற மாற்றமானதா கும்.

சுன்னத் ஜமாஅத்.

(71) முகவுரை முதல் பக்கத்தில்.

"எமது வள்ளல் (ஸல்.) அவர்களுக்கு முன்வந்த தீர்க்கதரிசிகளெல்லாம் சர்வ குணங்களிலும் சம்பூரணமா யில்லாம லிருந்ததனல்தான் அப்படிப்பட்ட ஒவ் வொருவரும் ஒரு சில மக்களைச் சீர் திருத்திச் செவ்விதாய வழியில் செலு த்துவான் வேண்டியே நபிமார்களாக அனுப்பப்பட்டிருந்தனர்''

இதில் மற்ற நபிமார்களின் விஷயத்தில், அவர்கள் குணங்கள் சம்பூர்ணமாக யில்லை யென குறை கூறப்படுகிறது. இவ்வாறு குறை கூறுவது இஸ்லாம் மார்க்கச் சட்டப்படி ஆகாத காரியமாகும்.

(72) முகவுரை பக்கம் 7-ல்,

"தாடிக்கும், மீசைக்கும் கிருப்புக்கும் கேவலம், சிகைக்கும் கௌரவத்தைக் கொடுக்கவேண்டும் என்று ஒரு பல முஸ்லிம் மக்களையே சுன்னத் ஜமாஅத் தினின்றும் நீக்கிக்கொண்டிருப்பதுட னில்லாது இஸ்லாத்தினின்றே இப்படிப் பட்டவர்களை நீக்கிவிடவும் சில குறுகிய மனப்பான்மைகொண்ட மாக்கள் பெரு முயற்சி செய்துகொண்டு வருகின்றனர்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதுவாகிறது பிக்ஹு மஸாயில்களை அலக்ஷியம் செய்தும், சுன்னத்தின்படி நடக்க வேணுமென்ற கட்டளையை அவமதித்தும், அவ்வாறு சொல்பவர்களை மாக்களென்று சொல்லியும், இவர்கள் ஜனங்களை சுன்னத்வ ஜமாஅத்தை விட்டு நீக்கிக்கொண்டு வருவதாகவும் அவர்கள்பால் அபாண்டப் பழிசுமத்தப்பட்டிருக்கிறது. மேலும் அதே புத்தகத்தில் நபிகள் திலகம் அவர்களுடைய சுன்னத்தைப் பேணி நடப்பதுதான் சுன்னத் ஜமாஅத்தாரின் கொள்கையென்று ஒரு பக்கத்தில் எழுதியிருக்கிறார். இவ்விடத்தில் தாடி, மீசைக்கு கௌரவம் கொடுக்கக்கூடாதென்கிறார். இவைகள் விஷயமாய் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் விபரமாக அறிவித்திருப்பதோடு தாங்களும்தாடி, மீசைவைத்து அநுஷ்டானத்திலும் காட்டியிருக்கிறார்கள். விஷயமிப்படியிருக்க அவைகளைப்பற்றி அறவே கவனம்செலுத்தக் கூடாதென்று குறிப்பிடுகிறார். மேலும் ஒரு சிலர் தாடி மீசை விஷயத்தில் அலக்ஷியமாய் நடந்துவிடுவார்களாயினும் அதனால் அவர்கள் இஸ்லாத்தைவிட்டே புறம்பாய்விட்டார்களென்று எவரும் சொல்லவில்லை ஆகவே இவர் அபாண்டமாய்க் கூறுவது தவறாகும்.

(73) பக்கம் 9-ல்,

"இக்கால மக்களுள் பலர் தாங்கள் என்ன நினைக்கின்றார்களோ அப்படித்தான் மற்ற மனிதர்களெல்லாம் இருக்க வேண்டுமென்றும், ஒரு சிறிதேனும் அபிப்பிராயம் மாறுபட்டிருப்பினும் அன்னார் அஹ்லு ஸுன்னத்திவல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களல்லவென்றும் வாய்கூசாமற் கூறுவர்."

இஃது அனாவசியமாய் சுன்னத் ஜமாஅத் உலமாக்களைக் குறைகூறுவதாகயிருக்கிறது.

(74) பக்கம் 21-ல்,

"இதனால்தான் நீடித்த காலம் நரகத்தில் காபிர்களை வேதனை செய்வேனென்று அச்சமூட்டுவதேபோல், மூமின்களைக் கொன்ற இன்னவர்களுக்கும் நீண்ட காலம் நரகத்திலிருக்கவேண்டிவருமென ஆண்டவன் அச்சமூட்டி எச்சரிக்கை செய்திருக்கிறான்." எனக் கூறப்பட்டிருக்கிறது.

மௌலானா நக்வி சாஹிப் அவர்கள் மூலகிரந்தத்தில் "ஹமேஷா" எப்பொழுதும் என்னும் பதம் உபயோகித்திருக்க, இவர்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்றவாறு "நீண்ட காலம்" என்று பொருள் செய்திருக்கின்றனர். இஃது ஊன்றி கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

(75) பக்கம் 58, 59-ல்.

"தாடி, தலைப்பாகை, ஜுப்பா தரித்துக்கொள்ள வேண்டும்; மலக்குகள் இன்னவிதமாகத்தானிருப்பார்கள்...... ....என்பன போன்ற விஷயங்களையெல்லாம் ஒருவர் எண்ணியபடியே சொல்லி, இவற்றையெல்லாம் இதரமுஸ்லிம்களென்போரும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்; இவைகளையெல்லாம் அப்படியே ஒத்துக்கொள்ளவில்லையாயின், அவர்கள் முஸ்லிம்களாயிருத்தல் முடியாதென்று ஒருவர் கூறுவாராயின், அப்படிப்பட்ட இஸ்லாத்தின் கொள்கைகளுள் கூறியவரைத்தவிர்த்து வேறொருவரும் இருத்தல் அநேகமாக முடியாதென்பது மிகையாகாது. இவ்வாறாகிய குறுகிய கொடிய மனப்பான்மையைக் கொண்டவர்களே குறிப்பாக இத்தென்னாட்டின்பால் அதிகம் திரியக் காணப்படுகின்றனர்." எனக்கூறப்பட்டிருக்கிறது.

இந்த இடத்திலும் தாடி தலைப்பாகை ஜுப்பாக்களின் பேரிலும், தென்னாட்டு உலமாக்கள் பேரிலும் ஹாபிஸ் சாஹிபுக்கு குறுகுறுப்புயிருப்பதாகத் தெரிகிறது. இப்புத்தகத்தை எழுதிய ஹாபிஸ் சாஹிபும் அவர்தம் சகாக்களும் அவர்களால் எழுதப்பட்டும், போற்றப்பட்டும், ஒப்புக்கொள்ளப்பட்டும் வருகிற இதே புத்தகம் பக்கம் 86-ல், ஹிஜ்ரி மூன்றாம், நான்காம் நூற்றாண்டிலிருந்து இந்த அஹ்லுஸ்ஸுன்னத்தி என்போர் மூன்று பிரிவினர்களாய்ப் பிரிந்து விட்டனர்; முதலாவது அஷாயிரா, இரண்டாவது ஹனபிலா, மூன்றாவது மாத்துரிதிய்யா என்பவர்களாம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த மூன்று வர்க்கத்தினரின் அகீதாப்படியோ அல்லது இம்மூவரில் ஒரு வர்க்கத்தினரின் அகீதாவின்படியோ இவர்கள் தங்கள் புத்தகங்களில் இழைத்திருக்கக்கூடிய சகல தவறு

களையும் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கோருகிறோம். இவைகளையல்லாமல் பிக்ஹூ மஸாயில் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் இவர்கள் தாவாச் செய்கின்ற ஹனபிமத்ஹ பின்படி முடிவுசெய்யுமாறும் வேண்டுகிறோம்.

ஜியாரத்துல் குபூர்

இஃது 'இப்னுதைமிய்யா' என்பவரால் அரபியில் எழுதப்பட்ட ஒரு சிறு நூலின் மொழி பெயர்ப்பாகும். இந்த இப்னுதைமிய்யா, இஜ்மாஉக்கு விரோதமாய் அநேக மஸ்அலாக்களை எழுதினர். அதனல் முஸ்லிம்களிடையே பெரும் குழப்பமேற்பட்டு சிறைத் தண்டனையும் அடைந்தார்.

இமாமுல் முபஸ்ஸிர் அப்துல்லாஹிப்னு அப்பாஸ்றலியல்லாஹூ அன்ஹூமா அவர்களைக் காபிர்என்று கைகூசாத 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்னும் கிதாபில் எழுதிவைத்திருக்கிறார். குலபாயே ருஷிதீன்களான ஹஸ்ரத் உமர் பாருக், (றலி) ஹஸ்ரத் அலீ முர்தஜா (றலி) ஆகியவர்களைத் தகாதவார்த்தைகளால் இழிவுபடுத்தியுள்ளார். எனவே இவருடைய மூளையில் கோளாறு ஏற்பட்டிருந்ததாகவே முஹக்கிகீன்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

"இப்னுதைமிய்யா வழி கேடரும் வழி கெடுப்பவருமாவார்; அவருடைய வார்த்தைகளுக்கு யாதொரு மதிப்பும் கிடையா" தென்று அல்லாமா இப்னுஹஜர்மக்கீ (ரஹ்) அவர்கள் பத்வாக் கொடுத்திருக்கிறார்கள்.

அப்துல் வஹ்ஹாப் நஜ்தி போன்றவர்கள் இவருடைய வழிகெட்ட மஸ்அலாக்களை எடுத்துக்கொண்டு குழப்பத்தை உண்டுபண்ணினர். எனவே இவருடைய அபிப்பிராயம் ஏகதேசத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதல்லவென்பதை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறோம்.

(76) பக்கம் 48-ல்,

"உண்மையான எந்த ஆலிமும் மரணமடைந்த எந்த நபியிடமும், சாலிஹிடமும், முத்தக்கியினிடமும் சென்று அன்னவர்கள் மறைவாயிருக்கும் இது சமயம், அன்னவரை வசிலாவாக்கிக் கொண்டு தங்களின் கோரிக்கைகளை வேண்டுதல் செய்யலாமென்று கூறியிருக்கின்றார்களில்லை."

இந்த மஸ்அலா இஜ்மாவுக்கு முரணனதாகும். இது, மறு உலகை அடைந்த அன்பியாக்கள் அவ்லியாக்களிடம் சென்று வஸீலாத் தேடுவதையை மறுக்கின்றது. இந்த இப்னுதைமிய்யா, நபிகள் திலகம் (ஸல்) அவர்களுடைய மஸாருக்குச் சென்று ஜியாரத்துச் செய்வதையும் குறிப்பாய் மறுத்திருக்கிறார். இஃது, 'என்னுடைய கப்ரை ஜியாரத்துச் செய்தவர்களுக்கு என்னுடைய ஷபாஅத்து வாஜிபாய் விட்டது' என்றும், 'என்னுடைய மவ்த்துக்குப் பிறகு என்னை ஜியாரத்துச் செய்தவர்கள் என்னுடைய ஹயாத்தில் ஜியாரத்துச் செய்தவர்கள் போலாகும்' என்றும் நபிகள் திலகம் அருள் செய்த ஹதீதுகளுக்கு மாற்றமாயிருக்கிறது.

(77) பக்கம் 77-ல்,

"கிஸ்ர்(அலை) அவர்கள் இஸ்லாத்துக்கு முன்னேயே மரணமடைந்தனர்"

இஃது கிஸ்ரு (அலை) அவர்கள் முஸ்லிம் அல்லவென்று அர்த்தம் கொடுக்கிறது. தவிரவும் கிஸ்ரு (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டதாக இப்புத்தகத்தின் பலவிடங்களிலும் வரைந்திருக்கிறார். இஃது ஸலபுஸ்ஸாலிஹீன்களுடைய கொள்கைக்கு விரோதமானதாகும்.

(78) பக்கம் 87, 88, 89-ல்,

ஈஸா அலைஹிஸ்ஸலாமும் மரணமடைந்து விட்டதாக வற்புறுத்தப்படுகிறது.

இந்தப் புத்தகத்தில், ரூஹூல்மஆனி என்ற தப்ஸீர் அடிக்கடி மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த ரூஹூல்மஆனியை எழுதியவர் அல்லாமா ஸய்யிது மஹ்மூது ஆலூஸிய்யி என்பவராவார். இவர் ஹிஜ்ரி 1270-ல் வபாத்தானர். இவருடைய பிள்ளைகள் இன்றைக்கும் உயிருடன் இருந்து வருகின்றனர். அல்லாமா இப்னுதைமிய்யா ஹிஜ்ரி எழுவது நூற்றாண்டில் வசித்தவர். ஆகவே அவர் இந்த ரூஹூல் மஆனியிலிருந்து மேற்கோள் காட்ட என்ன சம்பந்த மிருக்கிறதென்று தெரியவில்லை. எனவே இப்னு தைமிய்யாவின் பெயரை வைத்துக்கொண்டு தங்களுடைய தமிழ் புஸ்தகத்தில் இவ்வாறு கண்டதை யெல்லாம் புகுத்தியிருக்கின்றனர். மேலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய ஹயாத்து விஷயமாய் முன்னர் பிரஸ்தாபித்துவிட்

டோம். இப்னு தைமிய்யா,ஈஸா (அலை.) வைப்பற்றி ஒன்றும் கூறவில்லை என்பது உலகறிந்த விஷயமாகும்.

முஸ்லிம் சங்க முதற் கமலம்

(79) பக்கம் 21-ல்,

"லௌகீகத்திலேனும் வைதீகத்திலேனும் பகுத்தறிவுக்கு மாறானவற்றை ஏற்றுக்கொள்ளுதல் மனித புத்திக்கு ஒவ்வாததாய்க் காணப்படுகிறது."

திருக்குர்ஆனிலும் ஹதீதுகளிலும் இவர்களுடைய பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகத் தோன்றுவதை இவர்கள் மறுத்துவிடுவார்களோ?

(80) பக்கம் 21-ல்,

"நன்மைக்குப் பயன் நன்மையும் தீமைக்குப் பயன்தீமையும் தரத்தக்க நன்மை தீமையின் பாகுபாடு இறைவன் வசத்தில் இருக்கிறதென்று உறுதி கொண்டேன்."

'வல்கத்ரிகைரிகி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்வது தவறாகும்.

(81) பக்கம் 31 முதல் 34 வரை,

நன்மை தீமைகள் நாயனளவில் என்ற தலையங்கத்தின்கீழ், மேற்கண்ட 80 வது அய்ட்டத்தில் கண்டதையே வியாக்கியானம் செய்யப்படுகிறது. இஃது தக்தீருடைய மஅஸ்லாவுக்குவிரோதமாக யிருக்கிறது.

(82) பக்கம் 36 முதல், 41 வரை,

'இகலோக வாழ்க்கையின் தொடர்ச்சியே பரலோக வாழ்க்கை' 'இம்மையின் ஆத்ம வாழ்க்கையின் பிரதிபிம்பமே மறுமையாய் விளைவது' என்று தலையங்கங்களிட்டு சுவர்க்க நரக சம்பந்தமாக ஞானபோதக் கொள்கையே வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

(83) பக்கம் 42 முதல் 45 வரை,

நரகத்திற்கு முடிவுண்டு என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

(84) பக்கம் 45, 47-ல்,

சுவர்க்கானந்த அபிவிருத்தியென்று கூறி, சுவர்க் கத்தைப்பற்றி ஞானபோதக் கொள்கை வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

(85) பக்கம் 162, 163,

லாஹூர் அஹ்மதிய்யாக்களின் கொள்கை அனைத்தும் சுன்னத்து வல்ஜமாஅத் கருத்துக்கு இணங்கியது என்று வற்புறுத்துகிறார்.

(86) பக்கம் 191 முதல் 205 வரை,

"அல்கௌலு பீ பனுயின்னர்" என்று தலையங்கமிட்டு லாஹூர் அஹ்மதிய்ய சங்கத் தலைவரான காதியானி முகம்மது அலியின் ஹஸ்தலிகிதத்தைப் பிரசுரித்து நரகம் முடிந்துவிடும் என்னும் விஷயத்தை வற்புறுத்தி யிருக்கிறார். இவர்கள்தான் தனக்கு ஹாதி என்றும் தாவாச் செய்திருக்கிறார்.

(87) பக்கம் 194-ல்,

"நரகத்தவர் காபிர்களா யிருந்தாலும், மூமின்களான பாவிகளா யிருந்தாலும் அவர்கள் எல்லாரும் ஒரு காலம் வரையில் நரகத்தில் கிடந்து பிறகு அதிலிருந்து எடுத்து விடப்படுவார்கள்."

இது லாகூராரின் கடிதத்திலுள்ளது.

(88) பக்கம் 200, 201, 202-ல்,

"நரகவேதனை காபிர்களுக்குச் சதா சர்வகாலமும் உண்டென்று வாதிக்கும் நமது நண்பர்கள் கவனிக்கத்தக்க வினாக்கள். (1) நபிகள் நாயகத்தின் தாய் தந்தையர்கள் முஸ்லிம்களா அல்லது வேறு மார்க்கத்தை அனுசரித்தவர்களா? முஸ்லிம்களல்லாத பக்ஷத்தில் அவர்கள் கதி என்ன? (2) நமது நபிகள் நாயகத்துக்கு முன்னுள்ள ஹாத்திம்தை போன்ற மனிதர்களின் கதி என்ன? (3) இக்காலத்திலும் இஸ்லாம் மார்க்கம் இன்னதென்று உணர்ந்து கொள்ளமுடியாத பிரதேசங்களில் பிறவியால் மட்டும் காபிர்களாயிருந்து கொண்டு மகா நல்லவர்களாயிருக்கிறார்களே அவர்களின் கதி என்ன? (4) கலிமாச் சொன்ன ஒரு மூமின் மகாக் கொடிய ஹராமியாயிருக்கிறான்; ஒரு காபிர் புத்ஹானை வணங்குவது தவிர மற்றெல்லாக் காரியங்களிலும் நல்ல முஸ்லிமைக்காண நல்லவனாயிருக்கிறான்; இவ்விருவருள் யார் நல்லவர்? கலிமாச் சொன்ன ஷை ஜாஹிலான ஹராமிக்கு நரக முடிவுண்டு; ஆனால் விக்கிரகாராதனை மட்டும் (ஷிருக்கு) செய்யும் மகா உத்தமகுணம் நிறைந்த காபிருக்கு மட்டும் நரகம் முடிவில்லையோ? இதுதான் தெய்வநீதி போலும். (5) 10 வயதுமட்

டும் ஒரு காபிர் இருந்து இறந்து போகிறான்; இன்னொரு காபிர் 100 வயதுமட்டும் புத்ஹானை வணங்கி மரிக்கிறான்; இருவருக்கும் தண்டனையில் வித்தியாசமில்லையோ? (6) ஒரு காபிர் இஸ்லாம் இன்னதென்று நன்றாக உணர்ந்த பின்னும் ஈமான் கொள்ளாமல் வர்மம்செய்கிறான்; வேறொரு காபிர் இஸ்லாத்தை யுணர ஆசைகொண்டு தக்க மௌல்விகளிருந்து அவனை இம்மார்க்கத்தில் தொண்டுவர ஹேதுவில்லாமல்போய் அக்காபிர் குபிர் மார்க்கத்திலேயே யிருந்து இறந்துபோகிறான். இவ்விருவருக்கும் ஒரே தண்டனைதானோ? இருவருக்கும் நரகவேதனை நித்தியம்தானோ? இதுதான் அஹ்கமுல் ஹாக்கிமீனான அல்லாஹ்வின் நீதியோ? (அல் பாருக்)''

மேற்கண்ட 87-வது அயிட்டம் லாகூராரின் கொள்கையாயிருப்பதால், அதனை அனுசரித்து அல்பாருக் என்று கையொப்பமிட்டு இத்தமிழ் விளம்பரம் செய்தவர் இவ்வினாக்களைக் கேட்டிருக்கிறார். கேள்வியின் போக்கிலிருந்தே, கேள்வி கேட்பவர் விஷயத்தை உணர்ந்துகொள்ளும் எண்ணத்துடன் கேட்கவில்லையென்றும், இஸ்லாமிய சட்டங்களை ஆக்ஷேபிக்கும் நோக்கத்துடன் கேட்டிருக்கிறார் என்பதும் நன்கு தெரியவரும். ஆதலால் இவ்வியாசத்திலிருந்தே இவர்களுடைய மனோபாவமும் கொள்கையும் இன்னதென்று தெற்றென விளங்கக் கிடக்கிறது. எனவே, இப்படிப்பட்ட கொள்கைக்காரரர் சம்பந்தமாக விவரித்துக் கூறும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

முஸ்லிம் சங்க மறு கமலம்

(89) பக்கம் 13-ல்,

''அல்லாஹுத்தஆலாவாகிய நானே மிக அறிந்தவன்''

திருக்குர் ஆனிலுள்ள 'அலிப்லாம்மீம்' என்ற 'ஹுரூப முகத்தஆத்து'களுக்கு இவ்வாறு தர்ஜுமாச் செய்திருப்பது தவறு.

(90) பக்கம் 46-ல்,

''இஷா அத்தே இஸ்லாமுக்காக தம்முடைய உடல், பொருள், ஆவியை எல்லாம் தத்தம் செய்திருக்கும் வட இந்திய புண்ணியசாலிகளைப்போல் இத்தென்னாட்டிலுள்ளவர்களும் நம் சன்மார்க்கம் பரவுவதற்காகப் பாடுபடாமலிருந்தபோதிலும், தாம் சும்மாயிராமல் இஸ்லாத்திலுள்ளவர்களை யெல்லாம் காபிர்களென்று தம் வாயால் திட்டம் செய்து கொள்ளுகின்றனர்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

தென்னாட்டு உலமாக்கள்மீது அநாவசியமாய்க் குறைகூற முற்பட்டு, சன்மார்க்கத்திற் குழைத்துவரும் உலமாக்களை அன்னோர் காபிர்களென்று சொல்வதாய்ப் படுதூறு சொல்லுகின்றார். அவ்வாறு எந்த உலாமாவும் செய்யவில்லை என்பது திண்ணம்.

(91) பக்கம் 49-ல்,

''வட இந்தியாவில் ஐம்பது வருஷங்களுக்குமுன் ஒருசாஹிப்ஜான், முஸ்லிம்களுக்கு அவசியம் இங்கிலீஷ் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று வாதாடினபோது அவரை நேச்சரி என்று பலர் தூஷிக்க ஆரம்பித்தனர். முப்பது வருஷங்களுக்குமுன் அதே வட இந்தியாவில் மற்றொரு முர்ஷிது, இஷா அத்தே இஸ்லாமுக்குழைக்க முன்வந்து பிறமதத்தவரின் தாக்குதலால் பிராணவஸ்தையிலிருந்த தீனுல் இஸ்லாத்திற்கு நல்லுயிர் கொடுத்தபோது பலர் அவரைக் காபிர் என்று திட்ட ஆரம்பித்தனர்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில் கூறப்பட்டுள்ள சாஹிப்ஜானும், முர்ஷிதும் யார் என்று தெரிய வேண்டும். தவிர இங்கிலீஷ் படிக்க வேண்டுமென்று சொன்னதற்காக அந்த சாஹிப்ஜான் நேச்சரி என்று தூஷிக்கப்பட்டாரா? இஷா அத்தே இஸ்லாம் செய்ததற்காக அந்த முர்ஷிது காபிரென்று திட்டப்பட்டாரா? இதெல்லாம் வீணில் மக்கள்மீது படுதூறு சொல்வதாக இருக்கிறது.

(91) பக்கம் 55 முதல் 57 வரையில்,

''காபிர்களுக்கு சதா சர்வகாலமும் நரகவேதனை இல்லையென்று யாம்சொல்கிறோம். எமது லாகூர் மௌல்வீ அவர்களின் கடிதத்தைப் படித்திருப்பீர்களேல் காபிர்களுக்கு நரகவேதனை நித்தியமென்று முடிவுசெய்ய யாருக்கும் பாத்தியமில்லை என்று நன்றாக உணர்ந்

திருப்பீர்கள்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

காபிர்களின் நரகவேதனை சம்பந்தமாய் குர்ஆன் ஹதீதுகளில் கூறப்பட்டிருப்பவைகளைத் தள்ளிவிட்டு லாகூர் மௌல்வியின் கடிதத்தைத்தான் ஆதாரமாகக் கொள்ள வேண்டுமாம்! இது எவ்வளவுதூரம் பொருத்தமானதென்பது நன்கு புலனாகும்.

(92) பக்கம் 167 முதல் 180 வரை

சுவர்க்கம், நரகம், மரணத்திற்குப் பின் மனிதவாழ்க்கை, நரகத்தைப் பற்றிய முஸ்லிம் கொள்கை என்னும் தலையங்கங்களிட்டு ஞானபோதக் கொள்கையையே வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களை வார்த்தை வார்த்தையாக, 'இஸ்லாம் எப்படிச் சிறந்தது' என்ற புத்தகத்தில் காப்பி செய்திருப்பதால் அவ்வாக்கியங்கள் மீண்டும் இங்கு எடுத்தெழுதப்படவில்லை.

ஈமான் அல்லது உறுதி

(93) பக்கம் 37-ல்,

'வினையிட்டவன் வினை அறுப்பான், தினையிட்டவன் தினை அறுப்பான், என்னும் நியதியின்படி நன்மைக்குப் பயன் நன்மையையும் தீமைக்குப் பயன் தீமையையும் தரத்தக்க நன்மை தீமையின் பாகுபாடு இறைவன் வசத்திலிருக்கிறதென்று சொல்வதோடு இன்னும் இருவகை விசேஷம் 'வல்கத்றிகைறிகிவ ஷர்ரிஹி மினல்லாஹித் தஆலா' என்பதில் பொதிந்திருக்கிறது. ஒன்றை நன்மை என்றுமுடிவு செய்வதும் தீமை என்று முடிவு செய்வதும் அவனுடைய தீர்மானமாக யிருக்கும். இன்னது செய்தால் அதுநன்மை யென்றும் இன்னது செய்தால் அது தீமை யென்றும் தீர்மானம் செய்து வைப்பது அவனுடைய இஷ்டம்போலிருக்கும்; நம்முடைய சுயேச்சையாய் இன்னது நன்மை இன்னது தீமை யென்று நாம் முடிவு செய்ய நமக்கு அதிகாரமில்லை; நமக்கு இந்த அதிகாரம் கொடுத்தால் அவரவரும் தம் தமக்கு இஷ்டமான கெட்ட செயல்களை யெல்லாம் நன்மை என்றே முடிவு செய்வார்; குடியர் கட்குடித்தல் பாவமில்லை என்றே தீர்மானஞ் செய்வர்; பிறர் மனைவியைப் பெண்டாளுபவர் அத்தொழில் தேனிலும் பாலினும் சிறந்த இன்பத்தைத் தரத்தக்க நன்மையான தொழிலென்றே சாதிப்பர். ஆகவே உலகில் இன்னதுதான் நன்மை யென்றும் இன்னதுதான் தீமையென்றும் ஒருவரைதுறையில்லாமற் போம். ஆதலின் இன்ன இன்ன தொழில்கள் நன்மை யென்றும் இன்ன இன்ன தொழில்கள் தீமை யென்றும் இறைவனே முடிவு செய்தல் அவசியம்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

'வல்கத்றிகய்ரிஹி வஷர்ரிஹி' என்பதானது கலாகதருடைய மஸ்அலாவாகும். அதை விபரிக்கத் தெரியாமல் முத்தகத்திமீன்களான முன்னோர்களால் கூறப்பட்ட தாத்பரியத்திற்கு விரோதமாக, நன்மை தீமையை இன்னதென்று நிர்மாணிப்பது நாயனைப் பொறுத்ததாகுமெனக் கூறப்பட்டிருக்கிறது. இது பெரும் தவறாகும்.

பத்திரிகைகள்

(94) மலர் 6, இதழ் 9, பக்கம் 403-ல்,

தாய் மொழியில் தொழும்படி நாயகம் அவர்களும் இமாம்களும் அனுமானித்திருப்பதாக தாவாச் செய்யப்பட்டிருக்கிறது.

(95) மலர் 5, இதழ் 12, பக்கம் 566-ல்,

'சயன்ஸுக்குப் பொருத்தமாக திருமறையின் வாக்கியங்களுக்குப் பொருள்செய்ய வேண்டி இருக்கிறது' என்று கூறி, குர்ஆன் ஷரீபிலுள்ள வசனங்களுக்கு சயன்ஸுக்கு ஒத்தவிதமாகக் கருத்துக்கொள்ள வேண்டுமென்று தாவாச் செய்கின்றார்.

(96) மலர் 5, இதழ் 10, பக்கம் 459-ல்,

'பகுத்தறிவு' என்ற மகுடத்தின்கீழ் குருமார்களை (உலமாக்களை)ப் பின்பற்றாமல் பகுத்தறிவை உபயோகித்து அதனையே பின்பற்ற வேண்டுமென்று தாவாச் செய்யப்பட்டிருக்கிறது.

(97) மலர் 5, 10, 449-ல்,

'இஸ்லாத்தின் தாத்பரியம்' என்ற தலையங்கத்தின்கீழ் காஜா கமாலுத்தீனுடைய ஒரு வியாசத்தை எடுத்தெழுதி, மரணத்திற்குப்பின் மனிதன் அனுபவிப்பது சூக்ஷும தேகந்தானென்றும் நரகம் சுவர்க்கமெல்

லாம் ஆத்மார்த்த விஷயங்கள்தானென்றும் தாவாச் செய்யப்பட்டிருக்கிறது.

(98) மலர் 55, 230-ல்,

'ஒரு சம்பாஷணை' என்று தலையங்கமிட்டு, குர்ஆனை தர்ஜுமாச் செய்யக்கூடாதென்று உலமாக்கள் கூறுவதாகவும் அதற்காக அவர்கள் 'குப்ர்' பத்வாக் கொடுப்பதாகவும் கூறி உலமாக்கள்மீது பழி சுமத்தப்படுகின்றது.

(99) மலர் 9-9, 432-ல்,

'இஸ்லாமிய ஞானபோதம்' என்ற மகுடத்தின்கீழ் மரணத்திற்குப் பின் மனித நிலைமை மையைப்பற்றி எழுதப்பெற்றிருக்கும் விஷயம் தவறாக யிருக்கிறது.

(100) மலர் 4-12, 463-ல்,

'சுவர்க்கம் நரகங்களின் விஸ்தீரணம்' என்ற தலையங்கத்தின்கீழ், சுவர்க்கம் நரகமென்பது குறிப்பிட்ட இரண்டு தனி இடங்களல்ல; உலகத்திலுள்ள ஆத்மார்த்தங்களே பிரதிபிம்பமாக மாறுகின்றது' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(101) மலர் 4-4, 133, 134-ல்,

இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைகளை உள்ளது உள்ளபடி உணர விரும்புவோர் லாகூர் அஹ்மதிப் பார்ட்டியின் ஆங்கில நூல்களைப் பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தி எழுதப்பட்டிருக்கிறது.

(102) மலர் 4-5, 173-ல்,

வோக்கிங் இஷாஅத்தே இஸ்லாத்தைப் பின்பற்றியே தாம் (பா. தா.) இஸ்லாமியப் பிரசாரம்செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது.

(103) மலர் 8-1, 43-ல்,

'பிறர் கண்ணிலிருக்கும் பீளையைக் காட்டிலும் தன் கண்ணிலிருக்கும் பெரிய அசுத்தத்தைக் கவனிப்பீராக' என்று மகுடமிட்டு, உலமாக்களை அகாரமரணமாய்த் தாக்கப்பட்டிருக்கிறது. அதில் 'நல்ல அதிர்ஷ்டத்தால் தாம் (பா. தா.) ஒரு முல்லாவாயில்லை' என்று குறிப்பிட்டு பரிகாசமாய்க் கூறுகின்றார்.

(104) மலர் 8, இ. 6, 255 முதல் 295 வரை,

'முஸ்லிம்களின் சுவர்க்கம்' என்று தலையங்கமிட்டு,

"எனவே சுவர்க்கமும் நரகமும் இரண்டு இடங்களின் பெயர்களல்லவென்றும் ஆனால் இரண்டு நிலைமைகளின் பெயரே என்றும் அல்லாஹுத்தஆலாவின் திருவசனத்தைக்கொண்டு இப்பொழுது நன்கு தெரிந்துகொள்கிறோம். ஆதலின் சுவர்க்கமும் நரகமும் மரணத்திற்குப்பின் அடையக்கூடிய இரண்டு நிலைமைகளாகவே இருந்து வருகின்றன. அவ்விரு நிலைமைகளே இந்த இகத்தினின்று அந்தப் புறத்துக்குத் தொடர்ந்து செல்கின்றன ....இஸ்லாத்தின் உண்மையை ஊன்றி நோக்குங்கால் இம்மார்க்கத்தின் சுவர்க்கமும் நரகமும் மரணத்திற்குப்பின் நிகழக்கூடிய ஆத்மாபிவிருத்தியின் வெவ்வேறு விதமான இரு நிலைமைகளைச் சுட்டிக் காட்டுகின்றனவென்று மிக நன்றாக அறிந்துகொள்கிறோம்.....................தேக விலங்கை விட்டு சூக்ஷ்ம ஆன்மாவானது விடுவிக்கப்படுங்கால் அது நூர் (தேஜஸ்) என்று சொல்லக்கூடிய ஒருவகை சாதனத்தால் சூழப்பட்டு மென்மேலும் விருத்தியடையக்கூடிய துல்லிய நீர்மையையும் கைவரப்பெற்று நிற்கும். அதன் பின் அந்த நூரே அந்த ஆன்மாவை பரலோக யாத்திரையில் நெடுந்தூரம் அழைத்துச்செல்லும்.

இதுதான் முஸ்லிம்களின் சுவர்க்கமாகக் கருதப்படுகிறது. ஆனால் முஸ்லிம் நரகமென்பது மேற்கூறிய நிலைமையின் நேர்மாறான தன்மையைக் குறிக்கும்......... எல்லாச் சக்திகளையும் வளரவொட்டாமல் தடுத்து ஸ்தம்பிக்கும்படி செய்துவிடும்படியான நிலைமையே நரக வேதனையாய் வந்து முடிகின்றது"

ஜிவாஹிருல் புர்க்கான், ஞானபோதம், இஸ்லாம் எப்படிச்சிறந்தது, ஈமான் முதலிய புஸ்தகங்களிலும், அவர்களது சங்கப் பிரசுரங்களிலும் நரக, சுவர்க்கத்தைப்பற்றி இவர்கள் சொல்லிவந்த சகல விஷயத்தையும் இப்பத்திரிகை வியாசம் துலக்கமாகக் காட்டிவிட்டது. நரகம், சுவர்க்கம் என்பது இரண்டு இடங்களின் பெயரல்ல, மானிட நிலைமைக்குச் சொல்வதாகும் என இவண் விபரமாய்க் குறிபிட்டுவிட்டார். எனவே சுவர்க்கத்தில், நரகத்தில் புகுவதென்பதற்கு ஒரு வித அர்த்தமுமில்லாமற் போய்விட்டது.

மேலும் இந்நிலைமைகள் இகத்திலிருந்தே பரத்துக்குத் தொடர்ந்து செல்கின்றனவென்

று சந்தேகமற விபரித்துவிட்டதால் மானிடர் மரித்தவுடன் இவர்களுடைய சுவர்க்க, நரகத்தை அடைந்துவிடுகின்றனர் என்று இவர்களின் கூற்றால் வெளியாகின்றது. இதனால் மவ்தாக்கள், பர்ஜகில் இருக்கின்றார்கள் என்பதும், கப்ரில் முன்கர் நகீர் மலக்குகள் கேள்வி கணக்குகள் கேழ்க்கிறார்கள் என்பதும், நியாயத்தீர்ப்புக்கென ஒரு நாளில் எல்லாரையும் ஒன்றுகூட்டி, மஹ்ஷர் மைதானத்தில் நிப்பாட்டி கேள்விக் கணக்குகள் கேட்கப்படும் என்பதும், அன்றையதினம் நபிகள் நாயகம் ஷபாஅத்தேகுப்று செய்வார்கள் என்பதும், சிறாத்துல் முஸ்த்தகீம் எனும் பாலம் உண்டென்பதும் இவைகள் போலொற்ற மறுமையின் சகல விஷயங்களும் மறுக்கப்பட்டுப் போய்விடுகிறது. (தாருல் இஸ்லாத்தில் வெளிவந்த 'முன்கர் நகீரும் ஜன்டல்மெனும்' என்னும் வியாசத்தைப் படித்துப் பார்த்தால் இது விபரங்கள் நன்கு புலனாகும்.)

(105) மலர் 8, இதழ் 6 பக்கம் 257-ல்,

"நமது பரிசுத்த வேதத்தில் கூறப்பட்டிருக்கும் 7 வானங்களும், எழு விதமான ஆத்ம பரிபக்குவ படித்தரங்களையே சுட்டிக் காட்டுகின்றன. இக்காலத்தில் பகுத்தறிவுள்ள மூளையை வாய்க்கப்பெற்ற எந்த விதமான மனிதனும் அறிவுநூல் உண்மைகளையும் ஆத்மநூல் பரிநாமத்தையும் ஒத்துக்கொள்ளாமலிரான் என்பது நிச்சயம். ஏனெனின், மதவிஷயமேயாதல், ஆத்ம விஷயமே யாதல் அவ்விரண்டும் ஒருபோதும் அறிவுநூல் உண்மையைக் கடப்பது முடியாதென்பது பரிணாம வாதத்தின் ஒரு பெயர்போன சட்டமாகும்"

இதில் மத விஷயமேனும், ஆத்ம விஷயமேனும் அறிவு நூலுடைய உண்மையைக் கடக்கக்கூடாதென்பது இவருடைய வாதமாயிருக்கிறது. திருக்குர்ஆனும், ஹதீதுகளும் எவ்வாறு கூறுகின்றதோ அவ்வாறே மானிடரின் அறிவைத் திருப்பவேண்டுமென்பதுதான் இஸ்லாத்தின் சட்டமாகும். மானிடரின் அறிவுக்கேற்ப குர்ஆனைத் திருப்பவேண்டுமென்பது ஆக்ஷேபிக்கத்தக்க விஷயமாகும்.

(106) மலர் 8, இதழ் 7, பக்கம் 312-ல்,

"அறிவே அல்லாஹ், அறிவே முஹம்மத், (ஸல்.) அறிவே இஸ்லாம்."

இவ்வாறு தாவாச் செய்திருக்கிறார். அறிவு, அல்லாஹ், முஹம்மத், (ஸல்.) இஸ்லாம் ஆகிய இந்நான்கும் ஒரே வஸ்து என்று அவருடைய வாக்கியம் சுட்டிக் காட்டுகின்றது. இது இஸ்லாத்தின் சட்டங்களுக்கு எவ்வளவுதூரம் விரோதமானதென்பது தங்களுக்குத் தெரிந்ததே; நாங்கள் விபரிக்க வேண்டிய அவசியமில்லை

(107) மலர் 8, இதழ் 6, பக்கம் 363-ல்,

"மறு உலகவாழ்க்கையானது சூக்ஷமதேகத்தின் சம்மந்தமான இன்மய வாழ்க்கையாயிருப்பதுடன் அவ்வாழ்க்கையானது பௌதீக, பௌமிய சாஸ்திரங்களின் முறைப்படி ஓர் குறிப்பிட்ட இடத்தில் நிகழமாட்டாது. ஏனெனின் மனிதனுடைய ஆன்மாவானது ஸ்தூல தேகத்தைவிட்டு வெளியானவுடன் அதற்கு இடத்தின் எல்லையாவது காலத்தில் எல்லையாவது இருக்கமாட்டாது"

இஃது மறுமையில், மானிடரின் பூதபௌதீக உடம்பு எழுப்பப்படாது, ஆன்மா மட்டும்தான் தங்கிவிடும் என வற்புறுத்துகிறது. இக் கொள்கை குர்ஆனுக்கு நேர் விரோதமானதென்பது உலகப்பிரசித்தம்.

(108) மலர் 7, இதழ் 7, 331-332-ல்,

"முன் ஜீவித்திருந்த இஸ்ரவேல் கூட்டத்தின் இயேசுவானவர் இறந்து விட்டார் என்பதே எமது துணிபு. எனவே நம் நபிகள் நாயகத்தின் திரு வசனத்தில் காணப்படும் மரியத்தின் மகனின் வருகையானது இறந்துபோன ஈஸா நபீ (அலை.) அவர்களின் வருகையன்றென்பதும் எமது கொள்கையாகும்."

இக்கொள்கை குர்ஆன், ஹதீதுகளுக்கு விரோதமானதென்பதை முன்னர் எடுத்துக் காட்டியுள்ளோம்.

(109) மலர் 11, இதழ் 33, பக்கம் 12-ல்,

மீலாதேஷரீபும், மவ்லூது ஷரீபும் என்ற தலையங்கத்தின்கீழ் 'மவ்லூது ஷரீபு ஓதுவது வீண் விக்கிரஹ வணக்கம்' என்று கூறுகின்றார்

மவ்லூது ஷரீபுகளில் நாயகமவர்களின் புகழ்பாக்களும் சலவாத்துக்களும் சொரியப்பட்டிருக்கிறது. இதனை விக்கிரஹ வணக்கம் என்று கூறுவது எவ்வளவு தூரம் கெடுதல் என்பதை தாங்களே உணரவேண்டும்.

(110) மலர் 11, இதழ் 3, பக்கம் 13-ல்,

"காபிர் நரகத்தில் வீழ்த்தப்படுவான் என்றும், நீங்கள் தாம் மறு உலகத்தில் போக பாக்கியங்கள் அனுபவித்து வரப் போகிறீர்கள்" என்றும் எண்ணியிருப்பது முழுமுட்டாள் தனமேயன்றி வேறன்று. பிற்காலத்தில் ஓர் இமாம் உங்களுக்காகத் தோன்றி காபிர்களை எதிர்த்து இஸ்லாத்தை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரப்போகிறார் என்று கனவு கண்டுகொண்டிருக்காதீர்கள்...............இந்த நம்பிக்கை போன்று தீங்கு செய்வது வேறொன்றுமில்லை. இஸ்லாமென்பது சில சடங்குகளை மட்டும் குறிக்கும் ஒரு மதமன்று. அது கலிமாவுமன்று, தொழுகையுமன்று, நோன்புமன்று, ஹஜ்ஜுமன்று. மற்றும் இஸ்லாமென்று கூறப்படும் பல நூற்றுக் கணக்கான வெறுஞ் சடங்குகளுமன்று. இஸ்லாமென்பது ஒரு வாழ்க்கையை—ஒரு நியாயமான, சன்மார்க்கமான, பெருந்தன்மைபொருந்திய பரிசுத்தமான கௌரவமான முயற்சியுடன்கூடிய வாழ்க்கையைக் குறிக்கின்றது."

இதில், இஸ்லாத்தின் அர்கான்களான கலிமா, தொழுகை, நோம்பு, ஜக்காத்து ஹஜ்ஜு ஆகியவைகளை மறுத்து, ஒருவகை வாழ்க்கைதான் இஸ்லாம் என்று குறிப்பிடுகிறார். இதுவும் குர்ஆன் ஹதீதுகளின் கருத்துக்கு நேர்முரணானதென்பது வெள்ளிடை.

(111) தத்துவ இஸ்லாம், கமலம் 4
இதழ் 6 பக்கம் 201-202-ல்,

"இஸ்லாத்தை விட்டவர்களுக்கு என்ன தண்டனை" என்று உபத் தலையங்கமிட்டு திருக்குர்ஆனிலுள்ள சூரா 4 ஆயத்து 137ஐ "நிச்சயமாகவே முதலில் இஸ்லாத்தை நம்பிக்கை வைத்துப் பிறகு அம்மதத்தைவிட்டுவிட்டு மறுபடியும் இஸ்லாத்தில் சேர்ந்து மறுபடியும் அதை விட்டுவிட்டு பிறகு இறுதியில் தங்களுடைய அவநம்பிக்கையில் ஆழ்ந்து கிடப்பவர்களுக்கு அல்லாஹுத் தஆலாவானவன் மன்னிப்பை யளிக்கமாட்டான்; அவர்களைநேர்வழியிலும் நடத்திவைக்கமாட்டான்" என்று மேற்கோள் காட்டி அல்லாஹ் அவர்களை மன்னிக்கமாட்டான்; அவர்களை நேரானவழியிலும் அனுப்பமாட்டான்; இவர்களுக்கு இறைவனுடைய நன்மாராயம் ஒரு சிறிதும் கிடைக்கமாட்டாது என்று மேற்கண்ட ஆயத்தில் கூறப்பட்ட தண்டனையை ஒப்புக்கொண்டு அதனை வற்புறுத்தி காஜா கமாலுத்தீன் சாஹிபும், தாவூத்ஷா சாஹிபும் எழுதியுள்ளார்கள். இவர்களின் கொள்கைப்படி நரகமோ முடிவடைந்துவிடுகின்றது. ஆகவே இஸ்லாத்தைவிட்டவர்கள் நரகத்திலிருக்கமுடியாது; நன்மாராயம் இவர்களுக்குக் கிடைக்காததால் இவர்கள் சுவர்க்கம் புகவும்முடியாது; அல்லாஹ்வின் மன்னிப்புக்கும் இவர்கள் பாத்தியஸ்தர்களில்லை; குர்ஆனின்படி இவர்கள் நரகத்தில் இருந்து தீரவேண்டும்; இவர்களின் கொள்கைப்படி நரகம் முடிவடைந்துவிடுகிறது ஆதலின் இவர்களின் கொள்கைக்கும், திருக்குர்ஆனின் கட்டளைக்கும் எவ்வளவுதூரம் வித்தியாசமுண்டென்பதை உலமாக்களாகிய தாங்கள் கவனிக்கும்படி கோருகின்றோம்.

(112) தா. இ. மலர் 8, இதழ் 1, பக்கம் 5-11
வரை,

இவர் எழுதியுள்ள "ஆண்டவன் முன்னும் பொய்மொழியா?" என்ற கட்டுரையில், மிர்ஜா சாஹிபின் தஅவாவை ஒப்புக்கொள்ளாததாகவும், மிர்ஜா சாகிபும் அவருடைய இனத்தாரும் எழுதியும் இயம்பியும் வரும் எல்லாவிதமான ஆர்க்குமெண்டுகளையும் தாம் அங்கீகரிக்கவில்லையென்றும், முகம்மத் அலியின் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று காஜா கமாலுத்தீன் தம்மை வேண்டிக் கொண்டபோது, அந்த ஆங்கில மொழிபெயர்ப்பில் மிர்ஜா சாகிப் சம்மந்தமாகக் கூறப்பட்டுள்ள இரண்டொரு விஷயங்களை விட்டுவிட்டுத்தான் மொழிபெயர்த்தல் முடியுமென்னும் நிபந்தனையுடன் ஒப்புக்கொண்டதாகவும் இவர்கூறியிருக்கிறார். இதுவரை இவர் எழுதியுள்ள குர்ஆன் மொழிபெயர்ப்புகள், மற்ற புத்தகங்கள், பிரசுரங்கள் முதலியவற்றில் மிர்ஜாவின் கொள்கைகளையோ, அவர் சிஷ்யர்கள் செய்துவரும் தாவாக் களையோ இவர் விட்டதாகவோ, அன்றி மறுத்ததாகவோ ஏற்படவில்லை என்பது மேலே எடுத்துக் காட்டியிருக்கும் தவறுகளிலிருந்து நன்கு ருஜுவாகிறது. தவிரவும் இவர் அவைகளை வற்புறுத்திக் கொண்டிருக்கிறாரென்பது பிரத்தியட்சம்.

(113) ஆரம்பத்தில் இவர் நாத்தீகத்துக்கு நெருக்கமாயுள்ள உலோகாயக் கடலில்

மூழ்கி "இராமாயண" சாஹிப் என்று பெயர் வாங்கியிருந்ததாகவும், காஜா கமாலுத்தீனுடைய பிரசுரங்களைப் பார்த்து நவ் முஸ்லிமைப்போலாய் விட்டதாகவும் கமலம் 3, இதழ் 5, டைடல் 2-3-லும், 6-1-33ல் வெளியான மலர் 15, இதழ் 1-லும் இவர் கூறியிருக்க, 'தாருல்இஸ்லாமும் காதியானிவிஷயமும்' என்று மகுடமிட்டு 2-8-29-ல் தா. இஸ்லாத்தின்தற்கால ஆசிரியர் இ. அ. எழுதியிருப்பதாவது:—

"காதியானிகள் காபிரென்று இவ்வுலக முஸ்லிம்களால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர். மேலும் இந்தக் காதியானிகள் ஏனைய முஸ்லிம்களையெல்லாம் காபிர்களென்றழைக்கின்றனர். இன்னமும் இவர்கள் நபிகள் பெருமானின் இறுதி நபி யென்னும் தத்துவத்தை நிராகரிக்கின்றனர். அந்த இறுதி நபியவர்களின் புர்க்கானுல் மஜீதெனும் இறுதி மறையையும் அடியோடு புரட்டுகின்றனர்....................பா. தா. வுக்கும் க்வாஜா சாஹிபுக்கும் ராஜீய அபிப்பிராய பேதங்களும், மிர்ஜாவின் கொள்கை சம்பந்தமான அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டு விட்டதால், முதலில் மூன்று ஆண்டுக்கென்று இங்கிலாந்து சென்ற நமது ஆசிரியர் ஒரு வருஷத்துடன் முடிவு கட்டிக்கொண்டு திரும்பி விட்டனர். லண்டனிலிருந்தபோது தான் மிர்ஜாவின் மஹ்மூதி பேக மன்மதகாமலீலைச் சண்டைகளையும், அமிர்தசரஸ்மௌலானா ஸனுவுல்லாவை மிர்ஜா சாஹிப் சபித்துத்தாமே அவருக்குமுன் மரித்த உண்மையையும் (இன்னமும் ஸனுவுல்லாஹ் உயிருட னிருக்கிறார்) டாக்டர் முகம்மது சாதிக் பட்னியில் காதியானிப் பிரசாரம் செய்த மர்மத்தையும், மிர்ஜாவின் குமாரர் காதியானி குருவுக்குப் பெண்கள் மீதுள்ள அளவு கடந்த இச்சை முதலிய இன்னும் பல வெளியில் எடுத்தெழுதமுடியாத வேறு பல லஜ்ஜையான செய்திகளையும் ஆசிரியர் பா. தா. நன்கு தெரிந்துகொண்டு, காதியானிகள் முதலிய அஹ்மதிகளின் உள்வயனங்களை யெல்லாம் உள்ளபடி உணர்ந்து கொண்டார்...................... மிர்ஜா சாஹிப் பலசமயங்களில் தாம் நபியென்றும், மஸீஹென்றும், மஹ்தியென்றும், தமக்கு வஹீ வருவதுண்டென்றும், மஹ்மூதி பேகத்தை விவாகம்செய்யுமாறு தம்மை ஆண்டவன் தூண்டினனென்றும், ஸனுவுல்லா தமக்குமுன் இறந்து விடுவாரென்று சபிக்கும்படி தமக்கு ஆண்டவனனுமதி கிடைத்து விட்டதென்றும், மற்றும் பலவாருகவும் பைத்தியக் காரத்தனமாய் பினுத்திய போதிலும்............ இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தது முதல் 1924-க்கு மேல் லாஹூரின் தென்னுட்டு மிஷனரியாயிருக்க முடியாதென்று லாஹூரின் மாதச் சம்பளம் ரூ. 200-0-0-ம் வேண்டாமென்று இவர் கூறிவிட்டார்.......... இதுகாலை ஸுன்னி முஸ்லிமாய் விளங்குகிறார். லாஹூர் அஹ்மதிய்யத்து இவருக்குச் சரியெனப்பட்டால் பிறகு இத்தரணியில் இவரை வேறெதுவும் அச்சமுறுத்தமாட்டாது" என்பதாகும்.

மேலே காட்டிய வியாசத்தின் வாக்கியங்களிலிருந்து லாஹூர் அஹ்மதிய்யத்திற்கும், காதியானி அஹ்மதிய்யத்திற்கும் அதிக வித்தியாசமில்லை என்பதையும், இரண்டு வகுப்பாரின் கொள்கையும் தனக்குப் பிடித்தமற்றதென்பதையும், இவ்விரு வகுப்பாரும் ஸுன்னி முஸ்லிம்களல்லவென்பதையும், இவர்களை உலகமே காபிர்களென ஒதுக்கித் தள்ளுவதையும், இவர்கள் ஏனையஎல்லா முஸ்லிம்களையும் காபிர்களென கூறுவதையும், மிர்ஜா சாஹிப் தன்னை நபியென்றும், மஸீஹென்றும், மஹ்தீயென்றும் தாவாச் செய்தது உண்மையென்பதையும், தனக்கு வஹீ வருவதாகக் கூறியது உண்மையென்பதையும் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இவைகளை உணர்ந்தே தமக்குக் கிடைத்துவந்த மாதச் சம்பளம் ரூ. 200-யும் விட்டுவிட்டு அவர்களை நிராகரித்துப் போட்டதாகவும் கூறுகிறார். ஆனல் நாளதுவரை அவர்களின் பிரசுரங்களையும், குர்ஆன் மொழிபெயர்ப்புகளை எழுதி வெளியிடுவதையும், அவர்களின் கொள்கைகளைப் போற்றிப் புகழ்ந்து எழுதுவதையும் கைவிட்டாரில்லை.

மேலும் இவ்வியாசத்தில் இவரால் தூற்றப்பட்டிருக்கிற மிர்ஜாவின் ஞானபோதத்தைத்

சமீபத்தில் புத்தகரூபமாய் வெளியிட்டு அதையும், அதன் ஆசிரியரான மிர்ஜாவையும் போற்றி இப்புஸ்தகம் எல்லா முஸ்லிம்களிடமும் அவசியம் இருக்க வேண்டுமென சிலாகித்தும் எழுதியிருக்கிறார்.

இத்தகைய தீய, வழிகெட்ட கொள்கைகள் இந்நாட்டில் பரவுவதைக்கண்ட மார்க்க பக்தர்களான கண்ணியமிக்க உலமாக்கள், சன்மார்க்கப் பிரசாரகர்கள் சாத்தன்குளம் சென்று காதியானிக் கொள்கைகள் தவறென்று எடுத்துக்காட்டி அவைகளை அகற்ற முயற்சித்த காலத்தில், 15-5-32 ல் வெளியான தமது பத்திரிகையில் 'காபிர் விளக்கும் உலமாக்களுக்கு' என்று மகுடமிட்டு,

"மார்க்கமுணர்ந்த மகா மேதாவிகளே! நீங்கள் பொதுஜன ஊழியர்களான சன்மார்க்க முஸ்லிம்களை யெல்லாம் இஸ்லாத்தின் எல்லையை விட்டு வெளியில் துறத்திக்கொண்டு வருகிறீர்களே..............நீங்கள் இவ்வாறு இஷாஅத்துல் குப்ரு வேலையில் இறங்குவீர்களா? ஏ! காபிரை அபிவிர்த்திசெய்யும் அல்லாமாக்களே! நபிகள் நாயகத்தின் வாரிசுகளே!...இஸ்லாமியரென்று தம்மைக் கூறிக்கொள்ளும் மூமின்களைக் காபிராக்க 300, 400, 500 மைல் ரயிலேறி ரிவால்வருடன் மகாநாடென்று ஒன்றைக் குளப்பிவிடுகின்றீர்கள்."

என்று கூறி காதியானிகளுக்கு ஆதரவளித்தார். அதுவும் போதாதென்று மார்க்கப் பிரசாரர்களை கலகக் கோஷ்ட்டி என்றும் பொய்ப்பிரசாரர்களென்றும் புல்லர்களென்றும் கை கொண்டமட்டும் வரைந்தார். உலமாக்களின் பிரசாரத்தை அளவுகடந்து தூஷணை செய்தார்; தூற்றியும் வந்திருக்கிறார். இவருடைய இந்தப் பிரசாரத்தின் பயனால் பரிசுத்தமாயிருந்த தென்னாடானது காதியானிக் கொள்கைகளால் அசுத்தமாகி வருகிறது. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து வழிகெட்ட கொள்கைகள் பரவாதிருக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கோருகிறோம்.

(114) இக்காலத்துள்ள சில சங்கடங்கள் :- என்று தலையங்கமிட்டு 11-7-30 லும், 13-7-30 லும் எடிட்டோரியல் எழுதி இருப்பதில், உருவப் படங்கள் வைப்பதைப்பற்றி எழுதி இருப்பதாவது :—

"அவர்கள் அவர் (சுலைமான் அலை) நாடியபடி மாபெரும் மஹால்களையும் உருவங்களையும் ஏரிகளை போலுள்ள தடாகங்களையும் பெரிய பெரியபத்திரங்களையும் செய்துகொடுத்தார்கள். ஏ தாவூதின் சந்ததிகாள்! நன்றி செய்பவர்களாய் (நற்) காரியங்களைச் செய்வீர்களாக. மேலும் என்னுடைய அடியார்களினின்றும் ஒரு சிலரே நன்றியுள்ளவர்களாயிருந்து வருகின்றனர்" (அல்குர்ஆன் 34-13)

"எந்த வீட்டில் நாயும் உருவமும் காணப்படுகின்றனவோ அந்த வீட்டில் மலக்குகள் நுழையமாட்டார்கள்" (நாயக வாக்கியம்) என்று

குர்ஆன் ஹதீதுகளை எடுத்துக்காட்டி, உருவப்படங்கள் வைப்பது ஆகும் என்று ருஜூப்படுத்தத் தகாத முறையில் இஜ்திஹாது செய்கிறார். உருவப்படங்களை வைத்திருக்கக் கூடாதென்று நாயகமவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நிற்க, தனிப்பட்ட மனிதர்கள் செய்வது சம்பந்தமாக உள்ள மஸ்அலாக்களையும், தனிப்பட்டவர்களுக்குச் சம்பந்தமில்லாமல் அரசாங்கத்திற்குச் சம்பந்தப்பட்டவைகளான கரன்ஸீ நோட், பவுன், ரூபாய், துட்டு, காசுகளில் உருவமிருப்பதையும் ஒப்பிட்டுக்காட்டி ஜனங்களை வழிகெடுத்திருக்கிறார்.

இவைகளையன்றி முஸ்லிம் ஸ்திரிகள் கோஷா முறையை அனுஷ்டிப்பதால் ஆடவர்களுக்குள்-சமூகத்தினருக்குள் சண்டைதான் உண்டாகும் என்று அறிவிக்கும் தோரணையில் "கோஷா ஸ்திரீ ஒரு வளைத் தன் மனைவி என நினைத்து வேறொருவர் இழுத்துச் செல்வது போலும், அந்த ஸ்திரீக்குரியவர் வந்து இழுத்துச் செல்கிற அந்த மந்த மனிதனை மறித்து இழுப்பது போலவும் படமெழுதி 12-7-29ல பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறார்.

ஆலிம்கள் முஸ்லிம்களை எல்லாம் காபிராக்கும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் அத்தகைய பத்வாவே அவர்

கள் கொடுத்து வருகின்றனர் என்றும் எடுத்துக் காட்டுவான் வேண்டி "அவன் காபிர், இவன் காபிர், உவன் காபிர்" என்னும் பத்வாக்களை ரோலிங் மிஷனில் மிக வேகமாக ஆயிரக்கணக்கில் அச்சடிப்பதாகவும், பெரிய தலைப்பாகையும் நீண்ட தாடியுமிட்ட படமும் அச்சு மிஷனும் கொண்ட படமும் 19-7-29வ பத்திரிகையில் வரைந்து ஏளனம் செய்திருக்கிறார்.

(115) மஸ்ஜிதுகளில் குத்பா ஓதுவதுபோலும் தொழவந்த ஜமா அத்தார் விஷயமுணராமல் கொரட்டைவிட்டுத் தூங்குவதுபோலும் 6-9-29வ பத்திரிகையில் படம் பிரசுரித்து குத்பா ஓதுவதையும் ஜும்ஆத் தொழுகையையும் பார்த்தவர் சிறிக்கும் வண்ணமாக எடுத்துக் காட்டியதுடன் இத்தகைய குத்பா ஓதுவதற்கு உலமாக்கள் சரியில்லை என்றும் B. A. M. A. பட்டம் பெற்ற ஆங்கில வாலிபர்கள் குத்பா ஓத முன்வந்து, தோட்டம் உண்டுபண்ணுதல், வியாபாரம் செய்தல், கைத்தொழில் செய்தல் முதலிய உலகவியவகாரச் சங்கதிகளை உபதேசிக்கவேண்டுமே யல்லாது மறுமையைப் பற்றியும்,மரணத்மைப்பற்றியும், ஸாலிஹான அமல் செய்வதைப்பற்றியும், தொழுகை நோன்பு ஜக்காத்து, ஹஜ்ஜு, குர்பானி, பித்ருஸதக்கா இவைகளைப்பற்றிக் குத்பா ஓதப்படாதென்றும் இவைகளெல்லாம் இக்காலத்துக்குத் தேவையில்லை என்றும், தன் கைகொண்டமட்டிலும் ஜும் ஆகுத்பாவை அவமதித்து ஜும்ஆத் தொழுகையைப் பொதுஜனங்கள் மதிக்காமலிருக்கக் கூடிய விதத்தில் "ஜும்ஆ பிரசங்கம்" என்று மகுடமிட்டு 26-9-30வ பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்.

தவிரவும், மார்க்க வினாவிடை என்ற தலையங்கமிட்டு அவர்கள் கொடுக்கும் பத்வாவில் புருஷர்களிடம் அகப்பட்டுக் கஷ்டப்படும் ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களிடமிருந்து விவாக விலக்குப் பெறுவதற்குப் பக்கத்திலுள்ள மாதாகோவில் சென்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொள்ளலாம் என்றும், இவ்விதம் [illegible] விவாக விலக்கு ஏற்பட்டு விடுகிறதென்றும், அதற்குப் பின்னர் இஷ்டப்பட்டவரை விவாகம் செய்துகொண்டு வாழலாம் என்றும்கூறிமுஸ்லிம் பெண்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேரும்படி மறைமுகமாகத் தூண்டியிருக்கிறார். இன்னும் எத்தனையோ மஸ்அலாக்கள் சம்மந்தமாய்தவறாக பத்வாக் கொடுத்து, மஹ்ரமான பெண்களையும்கூட நல்லவிதமாக நிக்காஹ் செய்யலாமென்றும் அனுமதித்திருக்கிறார். நிக்காஹ் செய்வதற்கு ஷரீஅத்து அனுமதித்த பெண்களை நிக்காஹ் செய்யக்கூடாதென்றும் பத்வா விடுத்திருக்கிறார்.

இவைகளை யல்லாமல் இஸ்லாமியா பர்தா என்றும், பர்தா வழக்கத்தின் உற்பத்தி என்றும், துருக்கிப் பெண்களின் கோஷாமுறை என்றும் பலவாறாக மகுடங்களிட்டு முஸ்லிம் ஸ்திரீகள் அனுஷ்டித்துவரும் கோஷா முறையை இடைகால சிறைவாசமென்று தகாத முறையில் எழுதியும் பெண்மணிகள் முகமூடியைக் கிளித்தெறிந்துவிட்டு வெளியேறவேண்டுமென்று உற்சாக மூட்டியும் வந்திருக்கிறார்.

ஹஷர், வன்னஷர், (மரித்தவர்களை எழுப்புதல்) சம்பந்தமாக பத்திரிகையில் சந்தேகமற ரூஹிதான், ஸ்தூல சரீரம் எழுப்பப்படாது என்றும் எழுதியிருக்கிறார். இவைகளை யல்லாமல் சமான்ய தவறுகளும் அநந்தமிருக்கின்றன. அவைகளையெல்லாம் ஈண்டு எடுத்தெழுதுவதாயின் மணற்சோற்றில் கல் ஆராய்வதற்கொப்பாகும் என்று இவண் குறிப்பிடப்படவில்லை. சமயம் வாய்க்கின் அவைகளை நேரில் சமர்ப்பிக்கப்படும்.

N. B. எங்களுடைய ஆராயச்சிக்கு எட்டிய மட்டில் எங்களுக்குத்தென்பட்ட மேற்கண்ட தவறுகளை ஜாபிதாவாக எழுதி உலமாக்களுடைய பார்வைக்காக சமர்ப்பித்திருக்கின்றோம். தாருல் இஸ்லாம் பிரசுரங்களில் கண்ட தவறுகளை,உலமாக்கள் சபைத் தீர்மானப்படி திருத்தியமைக்கப்பட்டபின் அவைகளை ஆதரிக்கும்படி ஹிபாஜத்துல் இஸ்லாம், பொது ஜனங்களைக்கேட்டுக்கொள்ளவேண்டுமென இக்ரிமெண்டில் கண்டிருப்பதால், மேற்கண்ட தவறுகள் அல்லாமல் வேறு தவறுகள் காணப்படுதல் கூடுமாதலால் அவைகளை கண்ணுறும்கண்ணியமிக்க உலமாக்கள், அறிஞர்கள், சகோதரர்கள் தயைசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தும்படி கோருகிறோம்.

கமால் நைனர் & Co:—கண்டி, 244கி கொளும்பு ஸ்டீடிலுள்ள பிரபல வியாபாரியாகிய மெஸர்ஸ் கமால் நைனர் & Co அவர்களிடமிருந்து ஒரு காலண்டர் வரப்பெற்ரும். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாயும், அந்த ஷீட்டின் பின்புறத்தில் அநேக உபதேச வாக்கியங்கள் குறிக்கப்பட்டதாயும் அதன் அட்டையில் அழகிய மாதிரியில் அவர்களின் வியாபாரச் சாமான்கள் வரையப்பட்டதாகவுமிருக்கிறது.

A. M. அப்துல்லா சாஹிப் & Co:—சிங்கப்பூர் பிரபல கமிஷன் ஏஜண்டும், தோல் வியாபாரியுமாகிய மெஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் & கம்பனியாரின் அழகிய காலண்டர், சென்னையிலுள்ள அவர்களின் பிரான்சு ஆபீஸாகிய மெஸர்ஸ் A. M, அப்துல்லா சாஹிப் ஸன்ஸ் அவர்களிடமிருந்து வரப்பெற்ரும். அது ஆங்கிலம், அரபி, தமிழ் ஆகிய மூன்று தேதிகளையும் ஒருங்கே காட்டக் கூடியதாகவும், தினம் ஒரு ஷீட் கிழிக்கக் கூடியதாகவும், ஒவ்வொரு ஷீட்டிலும் அறிவை விசாலமாக்கும் நீதி வாக்கியங்கள் பொறிக்கப்பட்டதாயும் அதன் அட்டையில் வியாபாரச் சரக்குகளின் படம் வரையப்பட்டு தலைமை ஆபீஸினுடையவும், தென்ஸியாமிலுள்ள பட்டானியிலும், சென்னையிலுமுள்ள பிராஞ்சு ஆபீஸ்களுடையவும் விலாசங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

A. M. S. நெய்னும் சாகிப்:—பினங், காலக்கடை பிரபல சுருட்டு புகையிலை ஏற்றுமதி இறக்குமதி வியாபாரியாகிய மெஸர்ஸ் A. M. S நெய்னும் சாஹிப் கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் வரப்பெற்ரும். அது மூன்று தேதிகளையும் ஒன்ருய் அறிவிக்கக்கூடியதாயும், அதன் அட்டையில் அவர்களின் வியாபாரக்குறி பொறிக்கப்பட்டதாயும், ஹிந்து முஸ்லிம்களின் விசேஷ தினங்கள், கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள் குறிக்கப்பட்டதாயும், தினம் ஒரு ஷீட் கிழிக்கக் கூடியதாயுமிருக்கிறது.

அறிவிப்பு

சென்னை 'தாருல் இஸ்லாம்' பிரசுரங்கள் பத்திரிகைகள் புத்தகங்கள் முதலியவைகளில் காணப்படும் தவறுகளை, உலகமாக்களிடம் சமர்ப்பிப்பதற்காக அவைகளை ஆராய்ச்சி செய்வதிலீடுபட்டிருந்ததால் ஜனவரி மாதத்திய இதழ் குறிப்பிட்ட நேரத்தில் வெளியிடச் சுணங்கிவிட்டது ஆதலால் ஜனவரி & பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய இதழ்கள் ஒன்ருக வெளிவருகின்றது. இனிமேல் மாதந்தோரும் தவருமல் குறித்த நேரத்தில் வெளிவருமென்று தெரிவித்துக்கொள்கிருேம்.

ஹயாத்தே மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்

இரண்டாம் பாகம். விலை ரூ. 1—4—0

வெகுநாளாக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஹயாத்தே மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் என்ற நூலின் இரண்டாம் பாகம் இப்பொழுது வெளிவந்து விட்டது. இந்நூலில் காஷ்மீர் ஸ்ரீநகரிலுள்ள தர்காக்காரர்களுக்கு லஞ்சம் கொடுத்து ஈஸா நபியவர்களின் கப்று அங்கிருப்பதாகக் கூறும்படி காதியானி சிஷ்யர்கள் முயற்சி செய்த விபரம், திமிஷ்கு நகரத்து மனாரா என்று காதியானில் மினாராக்கட்டிய விபரம், ஈஸா நபியவர்களின் கப்று இருப்பதாக மிர்ஜா பல இடங்களையும் குறிப்பிட்டு முன்னுக்குப்பின் கூறிய முரணான வாதங்கள், இவரைப்பின்பற்றியவர்கள் இவரது கூற்றுக்களைக்கண்டு தௌபாச்செய்து மீண்டு இவருக்கு விரோதமாகப் புத்தகங்கள் எழுதிய விபரம், ராம்பூர் நவாப் முஹம்மது ஹாமித் அலீகான் அவர்கள் முன்னிலையில் காஜா கமாலுத்தீன், முகம்மது அலி, M. A., LL. B., ஹகீம் நூறுத்தீன், முஹம்மது அஹ்ஸன் சாஹிப் ஆகியவர்கள் 14-5-909-ல் காதியானி விஷயமாகத் தர்க்கஞ் செய்ய வந்து, சுன்னத்து வல்ஜமாஅத்து உலமாக்களால் தோற்கடிக்கப்பட்டு, நவாபவர்கள் காதியானிகள் பின்வாங்கி ஓடியதையும் சுன்னத்து ஜமாஅத்து உலமாக்களின் திறமையையும் இஸ்லாத்தின் உண்மையையும் பார்த்துப்புகழ்ந்து சர்டிபிகேட் கொடுத்த விபரமும் படிக்கப்படிக்க இன்பந்தரத்தக்க விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இன்னமும் காதியானிகளுக்குள்ளே இரண்டு மஸீஹ் ஏற்பட்ட வேடிக்கைகளையும் காணலாம். தவிர குர்ஆன் ஹதீதுகளின் ஆதாரங்களைக்கொண்டு ஈஸா நபியவர்களின் விபரத்தை உள்ளது உள்ளபடி தெரிந்துகொள்ள விருப்புபவர்களுக்கு இந்த ஒரு நூலே போதியதாகும். காதியானிகள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்பந்தமாகக் கேட்கும் கேள்விகளுக்கு வினவிடை என்ற முறையில் அநேகம் ஜவாபுகளும் சமாதானங்களும் நூலில் கூறப்பட்டிருக்கின்றன. சுருங்கக்கூறுமிடத்து இந்நூலைப்படித்தவர்களிருக்குமிடத்திற்கு காதியானிகள் வரவேமாட்டார்கள் என்று கூறலாம்.

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ்,

தென்காசி.

208336
சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.